32°c
கூடிய வெப்பநிலை 40 c
குறைந்த வெப்பநிலை 27 c
மேக மூட்டம், மழையுடன் கூடிய காலநிலை

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY
இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர
சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு,
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093



விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/= | சுடர்: 29 | கதிர்: 155 | வள்ளுவர் ஆண்டு: 2045 | சித்திரை 17, புதன் 30.04.2014


## போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்திக்க வருகின்றார் பாப்பரசர்

யாழ்ப்பாணம், ஏப்.30
போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சந்திப்பதற்காக, பாப்பரசர் பிரான்ஸிஸ் அடுத்த வருடம் ஜனவரி மாதம் மடுத் தேவாலயத்துக்கு வருகை தரவுள்ளார் என்று ரோம் தகவல்கள் கூறுகின்றன. வடக்கு - கிழக்கு மறை மாவட்டங்களின் ஆயர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே அவர் மடுவுக்கு வருகை தரவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
வடக்கு - கிழக்கிலுள்ள 4 மறை மாவட்ட ஆயர்கள் உள்ளிட்ட இலங்கையின் 12 மறை மாவட்ட ஆயர்களையும் பாப்பரசர் பிரான்ஸிஸ் வத்திக்கானில் சந்தித்து வருகின்றார். ஒவ்வொரு ஆயர்களாக பாப்பரசரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் விளக்கி வருகின்றனர்.
வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் நிலைமைகள் தொடர்பில் இங்குள்ள மறைமாவட்ட ஆயர்களால் திரட்டிச் செல்லப்

21 ஆம் பக்கம் பார்க்க

## இன்று மழை பெய்யலாம்

யாழ்ப்பாணம், ஏப்.30
வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் பல இடங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று யாழ்.வளி மண்டலவியல் திணைக்கள பொறுப்பாளர் ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.
"நேற்று நண்பகல் 12. 50 மணியிலிருந்து அடுத்து வரும் 18

21 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பைப் பதிவது பற்றி ஆராய்வதற்கு குழு நியமனம்

### திருமலையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிவரும் நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காக 5 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நேற்று மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை நடைபெற்றது. அதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்டபோது:
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில் கூட்டத்தில் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டது. சகல தரப்பினராலும் கட்சிப் பதிவு வலியுறுத்தப்பட்டு, அதற்கமைய இந்த விடயங்களை கையாள்வதற்காக ஒவ்வொரு கட்சியினதும் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன

21 ஆம் பக்கம் பார்க்க

## தப்பியோடிய சந்தேக நபர் பெண் வேடத்தில் கைதானாராம்

வவுனியா, ஏப்.30
வவுனியா வைத்தியசாலையில் சிறைக் காவலர்களின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வந்த சமயம் தப்பிச் சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர், பெண் வேடத்தில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா, குடியிருப்பு பிரதே

21 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் தடை விடயத்தில் கனடாவின் நிலைப்பாடு என்ன?

இலங்கை அரசு புலம் பெயர் அமைப்புகள் மீது விதித்துள்ள தடையால், இலங்கைவாழ் தமிழர்களுக்கு உதவிகள் வழங்குவது தடைப்பட்டுள்ளது. இதுகுறித்து கனடா அரசின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவு படுத்த வேண்டும் என்று கோரியுள்ளது அந்த நாட்டு எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி.

*விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்.*

## தனித்திருந்த மூதாட்டியின் கழுத்தில் வெட்டிக் கொள்ளை

### அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.30
மூதாட்டி ஒருவர் தனித்திருந்த வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள், மூதாட்டியின் கழுத்தில் கத்தியால் வெட்டிவிட்டு அவரது நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.
புத்தூர் நவக்கிரியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 68 வயதுடைய சின்னத்தம்பி பூமணி என்ற மூதாட்டியே காயமடைந்தவராவார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## கொலையல்லாத சாவு; பெண்ணுக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஏப்.30
கொலையல்லாத சாவு ஏற்படுத்திய பெண்ணுக்கு யாழ். மேல் நீதிமன்று 5 வருட கடூழியச் சிறை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
முல்லையடி வீதி, பண்டத்தரிப்பில் கடந்த 2008 ஆம் ஆண்டு

21 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் எலும்பு எச்சங்கள் அநுராதபுரம் பயணமாகின்றன

மன்னார், ஏப்.30
மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டு, மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 81 மனித எலும்பு எச்சங்கள் இன்று நேற்று மேலதிக பரிசோதனைகளுக்காக' அநுராதபுரம் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.
மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலைக்குச் சென்ற அநுராதபுர மாவட்ட சட்ட வைத்திய

21 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண கல்வி குழு ஓர் அரசியல் நியமனம்

### குற்றஞ்சாட்டுகிறார் மாகாண கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப்.30
வடக்கு மாகாண கல்விக் குழுவானது அரசியல் கட்சியொன்றின் செல்வாக்கில் உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சியின் அரசியல் அழுத்தங்கள் ஊடாக

21 ஆம் பக்கம் பார்க்க

## அதிகரிக்கப்படாத கொடுப்பனவால் விடைத் தாள்கள் திருத்தப்படாது

யாழ்ப்பாணம், ஏப்.30
விடைத் தாள் திருத்துவதற்கான கொடுப்பனவை அதிகரிக்குமாறு பலதடவைகள் கோரப்பட்டபோதும் அதுகுறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எனவே யாழ். பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி பட்டப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்துவ

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையின் செயற்பாடு தடுக்கப்படுகிறது

### ஆளுநர் மற்றும் செயலாளரே காரணம் என்கிறார் மாநகர சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஏப்.30
மாகாண சபையை இயங்க விடாது தடுக்கும் முயற்சிகளிலேயே வடமாகாண ஆளுநரும், செயலாளரும் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் மக்களுக்கான அபிவிருத்திகளை எவ்வாறு

21 ஆம் பக்கம் பார்க்க

## காணிகளை எமக்குக் கொடுங்கள் கலாசார நிலையம் தருகின்றோம்

### கொழும்பு அரசின் அமைச்சர் கூறுகின்றார்


யாழ்ப்பாணம், ஏப்.30
யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களில் இருந்தும் எங்களுக்கொரு காணியைத் தரக் கூடியதாக இருந்தால் அந்தந்தப் பிரதேச செயலகங்களை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு கலாசார நிலையங்களை எங்களால் அமைக்க முடியும். அதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு இவ்விடத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் கலை கலாசார அலுவல்

21 ஆம் பக்கம் பார்க்க


இலங்கையின் No1
குடும்ப சஞ்சிகை
நாளை முதல் வெளிவருகிறது
ஒளி அரசி
இல்லத்தரசிகளின் தோழி
மே மாத இதழ்
உங்கள் பிரதிகளுக்கு முற்பதிவு செய்து கொள்ளுங்கள்
அன்பு + அறிவு + திறன் + போட்டி + வாழ்த்து + பொழுதுபோக்கு ரூபா 60

# தமிழ்க் கூட்டமைப்பை பிளவுபடுத்த அரசு சதி

## திருமலை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சம்பந்தன் குற்றச்சாட்டு



சம்பந்தன்

திருகோணமலை, ஏப்.30

சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தி அதனை வலுவிழக்கச் செய்ய இலங்கை அரசு பல வழிகளில் சதி செய்துவருகின்றது. இதற்குக் கூட்டமைப்பில் உள்ள எவரும் துணைபோகக்கூடாது. நாம் ஒற்றுமையாகவும் பரஸ்பர விட்டுக்கொடுப்புடனும் தொடர்ந்து செயற்படவேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இந்தக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து தலைமையுரையாற்றும்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில்ஐ.நா. விசாரணையை வலியுறுத்தும் இந்தத் தீர்மானம் மற்றும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் பேச்சுக்கு தென்னாபிரிக்கா எமக்கு விடுத்த அழைப்பு ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

இவற்றினூடாக சர்வதேச அங்கீகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ளது என்பதை நாம் உணரவேண்டும். கூட்டமைப்பு சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதால்தான் இலங்கை அரச தரப்பையும் எம்மையும் தனித்தனியாக அழைத்துப் பேச்சு நடத்தியுள்ளது தென்னாபிரிக்க அரசு.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக் கிணங்கவே இனப்பிரச்சினை தீர்வுப் பேச்சுக்கு மத்தியஸ்தம் வகிக்க தென்னாபிரிக்க ஜனாதிபதியும், அந்நாட்டு அரச தரப்பினரும் முன்வந்துள்ளனர். சர்வதேச மத்தியஸ்தத்துடனான இந்தப் பேச்சுக்கு நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம். ஆனால், இந்தப் பேச்சுக்கு இலங்கை அரசு தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குமா என்பது தான் சந்தேகம்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கமே உள்ளனர். அவர்கள் கூட்டமைப்பின் கரங்களைத் தொடர்ந்து பலப்படுத்தி வருகின்றனர். இந்த மக்களின் அமோக ஆதரவினால் தான் வடக்கு மாகாணசபை நாம் கைபற்றினோம். கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாணசபையில் 30 உறுப்பினர்களும், கிழக்கு மாகாண சபையில் 11 உறுப்பினர்களும் உள்ளனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தி அதனை வலுவிழக்கச் செய்ய இலங்கை அரசு பல வழிகளில் சதிசெய்து வருகின்றது. அரசின் இந்தத் திட்டங்களுக்கு கூட்டமைப்பில் உள்ள எவரும்துணை போகக்கூடாது. எம்மை நோக்கி வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து தமிழருக்கான தீர்வை சர்வதேச மத்தியஸ்தத்துடன் பெறவேண்டும்"- என்று தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), எம்.ஏ.சுமந்திரன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி), சிவசக்தி ஆனந்தன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), சி.சிறிதரன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி), கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கோவிந்தன் ஜனா (ரெலோ), இரா. துரைரெட்ணம் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), பிரசன்னா இந்திரகுமார் (ரெலோ) மற்றும் க.பவன் (புளொட்), ஹென்றி மகேந்திரன் (ரெலோ) ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள் இன்று காலை திருகோணமலையில் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஒன்றுகூடவுள்ளனர். திருகோணமலை நகரசபை மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த முக்கிய சந்திப்பில் கூட்டமைப்பின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. (ந-சி)

# இலங்கையின் தடை விடயத்தில் கனடாவின் நிலைப்பாடு என்ன?

## அந்த நாட்டு எதிர்க்கட்சி கேட்கின்றது

றொரண்றோ, ஏப்.30

புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு இலங்கை அரசு விதித்திருக்கும் தடை தொடர்பாக கனடா எதிர்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி, அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜொன் பெயார்டைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை அரசின் தடையை அடுத்து சில கனேடிய நிறுவனங்களால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு உதவிகள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்த முடிவுஎடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

குறித்த தடை காரணமாக சில கனேடிய நிறுவனங்களால், இலங்கைத் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணவோ அல்லது உதவிகளை வழங்கவோ முடியாத நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டுகின்றது புதிய ஜனநாயகக் கட்சி. புலம் பெயர் அமைப்புகள் மீதான தடை மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் களச் செயற்பாடுகளையும் கடுமையாகப் பாதிக்கும் என் றும் அந்தக்கட்சிமேலும்கூறியுள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு அரசுக்கு புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில், "போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இடம்பெற்றன என்று கூறப்படும் குற்றங்கள் தொடர்பில், சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்திய அமைப்புகளே தடை செய்யப்பட்டுள்ளன. ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அண்மையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய இரு கனேடிய நிறுவனங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தடையால் கனேடிய நிறுவனங்களால் இலங்கையிலுள்ள நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணவோ, அவர்களுக்கு நிதி வழங்கவோ அல்லது நிதி திரட்ட முடியாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் தொடர்பான சுயாதீன விசாரணைக்கு இலங்கை அரசு தொடர்ச்சியாகத் தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. இந்த விடயத்தில் கனேடிய அரசின் நிலைப்பாடு என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள விரும்புகின்றோம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)

# இலங்கை விடயம் குறித்து பிரிட்டன் கலந்துரையாடல்

## அரச சார்பற்ற நிறுவனங்களுடன்

லண்டன், ஏப்.30

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் முழுமையான முயற்சிகளை பிரிட்டன் எடுத்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். பிரிட்டன் அதன் பின்னர் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணை வலியுறுத்தி வந்தது.

இந்த நிலையில் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் ஹியூவோஸுவைர், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் குறிப்பில்,

"இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இன்று அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நடத்திய சந்திப்பு பயன்மிக்கதாக இருந்தது" என்று தெரிவித்துள்ளார். எனினும் மேலதிக விவரங்கள் எதையும் அவர் வெளியிடவில்லை. (ந-5)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு பஹ்ரெய்னில் விருது

கொழும்பு,ஏப்.30

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பஹ்ரெய்ன் அரசு அதி உயர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

ஜனாதிபதி உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் பஹ்ரெய்னுக்குச் சென்றுள்ளனர். பஹ்ரெய்ன் அரசால் வழங்கப்படும் அதி உயர் விருதான காலீபா விருது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது பஹ்ரெய்ன் மன் னர் அஹமத் பின் இசா அல் காலீபாவினால் வழங்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி வழங்கிய பங்களிப்பைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மூடப்பட்ட வீதிகளைத் திறக்குமாறு கோரி கொக்குவில் இந்து மாணவர் போராட்டம்



போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.30

கடந்த பல வருடங்களாக மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் போக்குவரத்துக்காகப் பயன்படுத்திய வீதிகள் மூடப்பட்டதை அடுத்து கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள கிருபாகர சுப்பிரமணிய சுவாமிகள் கோவிலின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினர் கோயிலுக்கு அருகாகச் செல்லும் இரு பாதைகளிலும் போக்குவரத்துக்குத் தடை விதித்திருந்தனர். வீதிகளை மறித்துத் தடை ஏற்படுத்தப்பட்டதுடன், பாதை தடை செய்யப்பட்டமை குறித்த அறிவிப்பும் ஆலய நிர்வாகத்தால் நடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், பாதை மூடப்பட்டதால் பாடசாலைக்கு உணவு கொண்டு வரும் பார ஊர்தி மற்றும் மாணவர்களுக்கு உணவு கொண்டு வரும் பெற்றோர்கள் எனப் பலரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். அதனால் குறித்த வீதிகளைத் திறந்து விடுமாறு மாணவர்கள் நேற்றுக் காலை கோயில் நிர்வாகத்தைத் கோரினர். ஆயினும் ஆலயத்தின் புனிதம் கெட்டுவிடும் என்று கூறி கோயில் நிர்வாகம் அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது.

அதையடுத்தே மாண்வர்கள் போராட்டத்தில் குதித்தனர். இதுவரை காலமும் கெட்டுப் போகாத ஆலயத்தின் புனிதத் தன்மை இப்போதுதான் கேட்டுப் போகின்றதா? என்று கேள்வி எழுப்பிய மாணவர்கள் வீதித் தடைகளை அகற்ற முற்பட்டனர். அதையடுத்து ஆலய நிர்வாகத்தினருக்கும் மாணவர்களுக்கும் இடையே தர்க்கம் இம்பெற்றது. மாணவர்கள் வீதித் தடைகளை அகற்றியதுடன் அவற்றை அங்கிருந்து எடுத்தும் சென்றனர்.

ஆலய நிர்வாகியால் இது குறித்து உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, பொலிஸாரும் அவ்விடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். இதனிடையே இவ்வாறு பிரச்சினை நடைபெறுவதை எப்படியோ அறிந்து கொண்ட நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

வாதப் பிரதிவாதங்களின் முடிவில், மாணவர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகத் தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர்கள், வீதிகளைத் திறந்து விடுமாறு கூறியதுடன், அங்கு நடப்பட்டிருந்த அறிவிப்புப் பலகையையும் அகற்றினர்.

பாடசாலை மாணவர்களும் ஆலயத்தின் நிர்வாகத்தினரும் தத்தமது தரப்பில் நியாயங்களை முன்வைத்ததை அடுத்து பொலிஸ் நிலையத்துக்கு வந்து, முறைப்பாட்டைப் பதிவு செய்யுங்கள் என்று தெரிவித்து புறப்பட்டனர் பொலிஸார்.

அதன்பின்னர் குறித்த பகுதியில் மேலும் பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். (ந-21-86)

30 APR 2014

# குடிதண்ணீர் குழாயில் வெடிப்பு யாழ்.நகரில் நேற்றுப் பரபரப்பு



காப்பெற் வீதியில் வெளிக்கிளம்பிய தண்ணீரை பரிசோதிக்கும் மாணவர்கள்.

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்.பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்தியை அண்மித்துள்ள நிலக் கீழ் குடிதண்ணீர்க்குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் வீதியின் மேற்புறத்தில் திடீரென நீர் வெளியேறத் தொடங்கியது. இதனால் நேற்று அவ் வீதியூடான போக்குவரத்து பல மணி நேரம் தடைப்பட்டது. வீதியில் திடீரென தண்ணீர் பாய்ந்து வெளியேறியதால் மக்கள் மத்தியில் பரபரப்பும் ஏற்பட்டது.

குடிதண்ணீர்க் குழாய் சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்தவை. எனவே வீதியூடான பாரவூர்திகளின் பயணம் உள்ளிட்ட பல காரணங்களால் இரும்பினாலான இந்தக் குழாய் வெடிப்புக்குள்ளானதாலேயே தண்ணீர் வெளியேறிது என்று மாநகர சபையின் நீர்வழங்கல் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்று நண்பகல் தொடக்கம் அவ்வாறு வீதியின் மேற்புறத்தில் இருந்து தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. அதனை ஏராளமான பொது மக்கள் பார்த்துச்சென்றனர். அந்தவீதியூடான போக்குவரத்தும் தடைப்பட்டது. முத லில் அதற்கான காரணம் தெரியவராததால் பலர் ஏதோ என்னவோ என்று விழித்தனர். பலர் அந்த நீரை எடுத்து முகர்ந்து பார்த்ததோடு அருந்தியும் பார்த்தனர். பிற்பகல் நகர்பாடசாலைகள் விட்டதும் ஏராளமான மாணவர்கள் அவ்விடத்தில் கூடி நின்றனர்.

அது தொடர்பில் மாநகர சபை நீர்வழங்கல் பிரிவினர் தெரிவித்ததாவது:- பலாலி வீதியில் மாத்திரம் காப்பெற் போடப்பட்ட பின்னர் நிலக்கீழ் குடிதண்ணீர்க் குழாய்களில் கிட்டத்தட்ட 15 இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. வீதியைக் கிளறியே அவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டியுள்ளது. சகல வழங்களும் தமக்கு வழங்கப்பட்டால் நேற்று வெடிப்புக்குள்ளான நிலக்கீழ் குடிதண்ணீர்க் குழாயை 3 நாள்களுள் திருத்தி அமைத்துவிடலாம். ஆதன் பின்னர் அதன் மேலான வீதியைப் போடமுடியும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை தண்ணீர் விநியோகக் குழாய் வெடித்ததால் அதை மீள மைக்கும் வரை குடிதண்ணீர் விநியோகம் தடைப்படும் என யாழ்.மாநகர சபை அறிவித்துள்ளது. (ஐ-4-7)

# வட மாகாண சபை செயற்பாடுகளை ஆராய்வதற்கு கூட்டமைப்பு குழு

## அமைப்பதற்கு நேற்றைய கூட்டத்தில் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப்.30

வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தனியானதொரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

“ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்படி விடயமும் ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை மாத்திரம் தனித்து முடிவெடுத்து செயற்படுவதாகவும், இதனை நிறுத்தி வடக்கு மாகாணசபையின் முக்கிய முடிவுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சகலரது ஆலோசனைகளும் கேட்கப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்தாலோசிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் எதிர்வரும் கூட்டங்களில் முடிவெடுக்கப் பட்டு குழு நியமிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# கூட்டமைப்பில் இருந்து கூட்டணியை விலக்குவது குறித்து ஆலோசனை

## நேற்றைய கூட்டத்துக்கு சங்கரிக்கு அழைப்பு இல்லை.

யாழ்ப்பாணம், ஏப்.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை வெளியேற்றுவது தொடர்பில் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் நேற்றைய கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ., சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர், தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்ளாமை தொடர்பில் கேள்வியெழுப்பினர். இதன்போதே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரியினால், தமிழ்த் தேசியக் கூட்டமைபின் பெயரை, இலங்கை தமிழரசுக்கட்சிப்பயன்படுத்துவதற்கு உரித்தில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தக் கூடிய உரிமை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுக்குமே உண்டு என்றும் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் எழுதிய விடயமும் இதன் போது ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கொண்டே கட்சியைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி தொடர வேண்டுமா என்பது தொடர்பில் அங்கத்துவக் கட்சிகள் நான்கும் தனித் தனியே கலந்துரையாடி அது தொடர்பிலான முடிவை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியிடம் தெரிவிப்பதென்றும் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# அறிவற்ற தொழில்நுட்பவியலாளர்களே மாநகர சபையில் பணியாற்றுகின்றனர்

## அதனாலேயே அபிவிருத்தித் திட்டங்கள் மந்த கதியில் என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ். மாநகர சபையில் அறிவுள்ள தொழில்நுட்பவியலாளர்கள் இல்லாத காரணத்திலேயே அபிவிருத்தித் திட்டங்கள் மந்த கதியில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்போது, மாநகர சபையின் வேலைப் பகுதியின் செயற்பாடுகள் சீராக நடைபெறவில்லை என்று உறுப்பினர்களால் கூறப்பட்டபோதே, முதல்வர் இவ்வாறு பதிலளித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது:

“யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்படுகின்றன வேலைத் திட்டங்கள் சரியான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதில்லை. அதனைச் சரியான முறையில் மதிப்பீடு செய்யக் கூடிய அறிவுள்ள தொழில்நுட்பவியலாளர்கள் இல்லை. இது தொடர்பான கோரிக்கை வடக்கு மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளாக செயற்பட்டு வந்ததைப் போன்று தொடர்ந்தும் செயற்படுவதற்குத் தகுதியுடைய தொழில்நுட்பவியலாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்”- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-14-7)

# மல்லாகத்தில் திருடிய மோ. சைக்கிள் சுன்னாகத்தில் மீட்பு

வலி. வடக்கு ஏப். 30

மல்லாகம் பகுதியில் நள்ளிரவில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை திருடிய திருடர்கள் அதனை சுன்னாகத்தில் கைவிட்டுச் சென்றனர். நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை திருடிக்கொண்டு சென்ற திருடர்கள் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் கைவிட்டுச் சென்றுள்ளார்கள்.

நேற்றுக் காலை அநாதரவாக, திறப்புடன் காணப்பட்ட மோட்டார் சைக்கிள் குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு பொது மக்கள் தகவல் வழங்கினர். பொலிஸார் மோட்டார் சைக்கிளை மீட்டுச் சென்றுள்ளனர் (ஐ-86)

# பல்லி விழுந்த தேநீரை பருகியவருக்கு உபாதை

மன்னார் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையில் தேநீர் அருந்தியவர்களில் ஒருவருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:- மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்றுக்காக வந்திருந்த 5 பேர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அங்குள்ள சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர். இதன் போது ஐந்து பேரில் ஒருவருடைய தேநீர் கோப்பையில் இறந்த நிலையில் பல்லி ஒன்று இருந்தமை தெரிய வந்தது. தேநீர் அருந்திய அந்த நபருக்கு திடீரென உடல் உபாதை ஏற்பட்ட நிலையில் மன்னார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த நபருடைய உடலில் பல்லியின் நச்சுத்தன்மை காணப்பட்டதால் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று சென்றார். வழக்கு விசாரணைகளின் பின் ஏனைய 4 பேரும் மன்னார் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். (ஒ-56)

# வெற்றிடங்களை நிரப்ப யாழ். மாநகர சபை தீர்மானம்

யாழ்ப்பாணம்.ஏப்.30

யாழ்.மாநகர சபையில் நிலவும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிதாக தற்காலிக தொழிலாளர்கள் 60 பேரை உள்வாங்குவது தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் பல்வேறு பகுதிகளிலும் ஆளணி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதால் உடனடியாக அவற்றை நிரப்புவது குறித்து சபையில் ஆராயப்பட்டது.

இதற்கமைவாக நேர்முகத் தேர்வின் ஊடாக தொழிலாளர்களை உள்வாங்குவதன் ஊடாக எதிர்கால நியமனத்தில் குழறுபடிகள் ஏற்படப்போவதில்லை என்று ஆணையாளரால் கருத்து முன்வைக்கப்பட்டது.

மாநகர சபையில் நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறையை உடனடியாக நிரப்புவதற்கு சபையில் ஏற்றுக்கொண்டதை அடுத்து பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ-14-7)



நாடு முழுவதும் கலாசார மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட உடுவில் கலாசார மத்திய நிலையம் நேற்றைய தினம் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பீ.ஏக்க நாயக்க திறந்துவைத்தார். (ற-10)


# யாழ். நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு நிவாரணம்

## ஓராண்டுக்கு வழங்க முதலமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.30

வலி.வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள 11 நலன் புரி நிலையங்களிலுள்ள 160 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குவடக்குமாகாண முதலமைச்சர் க.வி. விக் னேஸ்வரன் நடவடிக்கை எடுத் துள்ளார்.

இதன்படி பாதிக்கப்பட்ட மக் களுக்கு ஒரு வருட காலத்துக்கு மாதா மாதம் உலர் உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு வடக்கு முதலமைச்சர் சம்மதித் துள்ளதாக வலி.வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலை வர் அ.குணபாலசிங்கம் தெரி வித்துள்ளார்.



விக்னேஸ்வரன்

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் கடந்த 24 வருடங்களாக நலன்புரி நிலையங்களில் பல குடும்பங் கள் தங்கியுள்ளன. இதன்படி யாழ்.மாவட்டத்திலுள்ள 38 நலன்புரி நிலையங்களில் 4 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வரு கின்றன.

இந்தக் குடும்பங்கள் தமது சொந்த இடத்துக்கு திரும்பிச் செல்வதற்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ள நிலையில் நலன்புரி நிலையங்களிலேயே தங்கி யுள்ளன. இந்த குடும்பங் களுக்கு உலர் உணவு நிவார ணம் கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் நிறுத் தப்பட்டு விட்டது. ஆனாலும் கூலி வேலை செய்து அவர்கள் தமது வாழ்வாதார நடவடிக் கைகளை முன்னெடுத்திருந் தனர்.

நலன்புரி நிலையங்களில் தங் கியுள்ள மக்களில் பெரும்பாலா னவர்கள் கல்லுடைக்கும் தொழில், நெல் அருவி வெட்டு தல், களை பிடுங்குதல், வெங் காய அறுவடைத் தொழில் ஆகியவற்றுக்கே சென்று தமது வாழ்வாதார நடவடிக் கைகளைப் மேற்கொண்டிருந் தனர். காலநிலையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக நெல் மற்றும் வெங்காயச் செய்கை பாதிப்படைந்துள்ளது. இத னால் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் கூலி வேலையும் பாதிப்படைந்துள் ளது. இதன் காரணமாக அவர் கள் தமது வாழ்வாதார நட வடிக்கைகளை முன்னெடுப் பதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

11 நலன்புரி நிலையங்களி லுள்ள 160 குடும்பங்கள் அவசர உதவியை எதிர்நோக்கி யிருந்தன. இந்தக் குடும்பங் களில் பெரும்பாலானவை, கணவனை இழந்த பெண் களைத் தலைமைத்துவமாகக் கொண்டதுடன், விசேட தேவையுடையவர்களையும் கொண்ட குடும்பங்களாகும்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரப் பட்டதையடுத்து, முதலமைச் சரினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு ஒரு வருட காலத்துக்கு உலர் உணவு வழங்குவதற் குரிய ஒழுங்குகளை மேற் கொள்வதற்கு உத்தரவிட்டுள் ளார். (ஜ-5)

# ஜனாதிபதியின் பதாகைக்கு தீ எவரும் கைதாகவில்லை

யாழ்ப்பாணம், ஏப்.30

துரையப்பா விளையாட்டரங் கில் வைக்கப்பட்டிருந்த ஜனாதி பதியின் பதாகை தீ வைத்து எரிக்கப்பட்டமை தொடர்பில் எவரும் நேற்று மாலை வரை யில் கைது செய்யப்படவில்லை என்றும், இது தொடர்பில் புலன் விசாரணைகள் முன் னெடுக்கப் பட்டு வருவதாகவும் யாழ்.பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

யாழ்.நகரின் மத்தியில் அமைந் துள்ள துரையப்பா விளை யாட் டரங்கின் முன்பாக ஜனா திபதி மஹிந்த ராஜபக் ஷவின் பதாகை வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பதாகை கடந்த ஞாயிற் றுக் கிழமை இரவு இனந் தெரியா தோரால் எரியூட்டப் பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். இது தொடர்பில் துரையப்பா விளையாட்டரங் கின் பாதுகாப்பு உத்தியோ கத்தர் விசாரணைக்கு உட்ப டுத்தப்பட்டுள்ளார். அத்துடன் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டட நிர்மாண வேலை இடம்பெற்று வருகின்றது. அங்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரவு நேர காவல் கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். சம்பவம் இடம்பெற்ற இரவும் பொலி ஸார் கடமையில் இருந்துள்ள னர்.

அத்துடன் குறித்த வீதி வழி யாக இராணுவத்தினர் ஞாயிற்றுக் கிழமை இரு தட வைகள் ரோந்து சென்றுள்ள துடன், பொலிஸா ரின் ரோந் தும் இடம்பெற்றுள் ளது. இவ் வாறான கடுமையான பாதுகாப் புக்களின் மத்தியி லேயே ஜனா திபதியின் பதாகை தீ வைத்து எரிக்கப்பட்டுள்ள தாகச் சொல் லப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஜ-5)

# பௌத்த மதத்தின் மகிமையை சீர்குலைக்கிறது பொதுபலசேனா

## *பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப்.30

உண்மைக்கு புறம்பான கருத் துக்களை திரும்பத் திரும்பக் கூறி வரும் பொதுபலசேனா பௌத்த தர்மத்தின் மகி மையை சீர்கெடுத்துகிறது. பௌத்த தர்மத்தின் பிரகாரம் உலகம் போற்றும் உத்தமர் களாக இருக்க வேண்டியவர் கள் இன்று காவி உடைகளை அணிந்து கொண்டு புத்த பெருமானுக்கும் பௌத்த தர்மத்துக்கும் பங்கம் விளை வித்துக் கொண்டிருக்கின்றனர் என முதலீட்டு ஊக்குவிப்பு துறை பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா குற்றம் சாட்டியுள் ளார்.

பொதுபல சேனாவின் செயற் பாடுகளை கண்டித்து முஸ் தபா ஊடகங்களுக்கு விடுத் துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம் சமூகத்திற்கும், அவர் களின் புனித அல்குர்ஆனுக் கும் தொடர்ந்தும் அப கீர்த்தி ஏற்படும் வகை யில் பொதுபலசேனா அமைப்பினர் நடந்து கொள்ளும் விதத்தை அரசில் அங்கம் வகிக்கும் பிரதியமைச் சர் என்ற வகையில் நான் வன் மையாகக் கண்டிக்கின்றேன். அவர்களது செயற்பாடானது முஸ்லிம் மக்களுக்கிடையி லும் ஏனைய சமூகங்களுக் கிடையிலும் விரிசலை ஏற் படுத்த வழிவகுக்கும்.

எனவே பொதுபலசேனா அமைப்பினர் இத்தகைய சிந்தனைக்குதவாத, அரு கதையற்ற செயல் களை உடனடியாக கைவிடவேண் டும்.

பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கும் ஏனைய சமூகங்களுக்கிடை யிலும் நிலவும் உறவுகளைச் சீர்குலைக்க முனைந்து வரு கிறார். புனித அல்குர்ஆனில் தக்கியா எனும் பெயரில் மற்ற வர்களின் காணிகளை அபகரி யுங்கள் அடுத்தவர் களின் சொத்துக்களை பறித் தெடுங்கள் என ஒரு வசனம் இருப்பதாக பொது பல சேனா அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இவ் வாறானதொரு வசனம் இருப் பதாக தெரிவிப்பது உண் மைக்குப் புறம்பான - அப்பட்ட மான பொய் என்பதை முஸ் லிம்கள் அனைவரும் அறி வார்கள். இவ்வாறானதொரு வசனம் குர்ஆனில் இடம்பெற வில்லை என்பதை நான் உறு தியாகத் தெரிவித்துக் கொள்கி றேன்.

புனித அல் குர்ஆன் என்பது அல்லாஹ்ூத ஆலாவினால் இயற்றப்பட்ட திருவசனங் களாகும்.

ஞானசார தேரர் புனித குர் ஆனை அவமதித்துப் பேசியி ருப்பது இது முதற்தடவை யல்ல. இதற்கு முன்பும் பல தட வைகள் இவ் வாறான தகாத வார்த்தைகளி னால் அல் குர் ஆனை விமர் சித்துப்பேசியிருக்கிறார். இதனை அவர் வேண்டுமென்றே செய்து வருகின்றமை தெட்டத்தெளி வாகப் புரிகின்றது.

புத்த பெருமான் போதித்த வாறு அன்பு, கருணை, அகிம்சை, பொறுமை, எளிமை போன்ற நற்குணங்கள்- நற் செயல்கள் இவர்களிடம் இல்லையென்றால் இவர்கள் பௌத்த தர்மத்தைப் பின்பற்று வதில் எதுவித நன்மையு மில்லை. இவ்வாறான செயற் பாடுகள் மூலம் கௌதம புத்தர் போதித்ததர்மத்துக்கும் இழுக்கு ஏற்படுகிறது. - என்றுள்ளது. (ஜ-10)

# வவுனியாவில் நேற்று கடுங்காற்றுடன் மழை

## *செட்டிகுளத்தில் 28 குடும்பங்கள் இடப்பெயர்வு*

வவுனியா, ஏப். 30

வவுனியா, செட்டிகுளம் பகுதி யில் நேற்றுப் பெய்த கடும் காற் றுடன் கூடிய மழை காரண மாக 28 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

நேற்று மாலை பெய்த கடும் காற்றுடன் கூடிய மழை கார ணமாக செட்டிக்குளம் கணேச புரம் கள்ளதிட்டிப் பகுதியி லுள்ள சுமார் 28 வீடுகளின் கூரைகள் தூக்கிவீசப்பட்டன. இதனால் அங்கிருந்த சுமார் 76 பேர் செட்டிகுளம் பொது நோக்கு மண்பத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் மேற்கொண்ட னர்.

இதேவேளை நேற்றுப் பிற் பகல் ஒரு மணிமுதல் அடுத்த 18 மணித்தியாலயங்களுக்கு கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சந்தர்ப்பம் இருப்பதாக வானிலை அவ தான நிலையத்தால் அறி வித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மக்களை பாதுகாப் பாக இருக்குமாறு அறிவித் துள்ளது.

அத்துடன் கடல் கொந்தளிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை காணப்படுவதால் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்பவர்கள் அவ தானமாக இருக்குமாறும் அறி விக்கப்பட்டுள்ளது. (ஐ-421, 400)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# ஸ்கந்தாவில் ஆங்கில தின நிகழ்வு

சுன்னாகம், ஏப். 30

சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல் லூரியின் ஆங்கில தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு கந்தையா உபாத்தி யாயர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி காமம் வலய உதவிக் கல்விப் பணிப்பா ளர் எஸ். கணேசலிங் கமும் சிறப்பு விருந் தினராக யாழ். பல் கலைக்கழக விரி வுரையாளர் திருமதி எஸ். ஆனந்த குமார சாமி, வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.ஶ்ரீதர் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ)

## மரண அறிவித்தல்

### சிவக்கொழுந்து சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



கோப்பாய் வடக்கு, மார்க்கம்பரை குறிச் சியை சேர்ந்த சிவக்கொழுந்து சிவசுப்பிரமணி யம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (29.04. 2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்து - கனகம்மா தம் பதியரின் ஏக புத்திரனும், சிவஞானவதியின் அன்புக் கணவரும், சிவபாதசுந்தரம் - நாகரத் தினம் தம்பதியினரின் மருமகனும், சிவகுமார் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (30. 04.2014) புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி பரராஜசேகரம்

கந்தசுவாமி கோயிலடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சம்பியன் லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பரராஜசேகரம் நேற்று (29.04.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் பரராஜசேகரத் தின் அன்பு மனைவியும், பரராஜசிங்கத்தின் அன்புத் தாயும், மைதிலி யின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மனோகரனின் (கைதடி, நாவற் குழி), சம்பந்தியும், குஷாந்தன், அகில்ராஜ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2014) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.
0213218402

தகவல்:
ப.பரராஜசிங்கம் (சிங்கம் -மகன்)
ப.மைதிலி (மருமகள்)

# 30 பயனாளிகளுக்கு கண் வில்லைகள்

சாவகச்சேரி மருத்துவமனையில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் B-1 மாவட்ட ஆளுநரால் வழங்கப்பட்ட 30 கண் வில்லைகள் மருத்துவ மனை கண் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று விழி வெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

யாழ்.போதனா மருத்துவ மனை கண் சிகிச்சை நிபுணரால் அவை சத்திரசிகிச்சை மூலம் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


மருத்துவமனை கண் சிகிச்சை கிளினிக்குக்கு வருவோருக்கான பரிசோதனையில் அவர்களுக்குக் கற்றாக் குறைபாடு காணப்படின் அவர்களது பெயர் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. லயன்ஸ் கழகங்களின் ஆளுநரால் விரைவில் மேலும் ஒரு தொகுதி கண்வில்லைகள் மருத்துவமனைக்கு வழங்கப்படவுள்ளதால் நோயாளர்களின் விவரங்கள் இவ்விதம் பதிவு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கிளாலியில் குழாய் கிணறு அமைக்குக

## அந்தப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

பளை, ஏப்.30

கிளாலிப் பகுதியில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாகக் குடிதண்ணீர் வழங்குவதற்கு வசதியாகப் பொருத்தமான இடத்தில் குழாய்க் கிணறொன்றை அமைத்து குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொது நிறுவனங்களைக் கோரியுள்ளார்.



" தண்ணீர்த் தாங்கிகள் அந்தப் பகுதியில் வைக்கப்பட்டு பிரதேச சபையால் வாரத்தில் இரு தடவைகள் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

குறித்த பகுதியில் சுமார் 250 குடும்பத்தினர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்துள்ள பொது நிறுவனங்கள் அங் குள்ள 13 கிணறுகளைத் துப்புரவு செய்ததைத் தொடர்ந்து அந்தக் கிணறுகளை மக்கள் பயன்படுத்தி வந்தனர்.


நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக இதுவரை காலமும் பயன்படுத்தி வந்த கிணறுகளில் உள்ள நீர்மட்டம் நாளுக்கு நாள் வற்றிச் செல்வதால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கம் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கையைத் தொடர்ந்து பிரதேச செயலரால் வழங்கப்பட்ட தண்ணீர் தாங்கிகள் அந்தப் பகுதியில் வைக்கப்பட்டு பிரதேச சபையால் வாரத்தில் இரு தடவைகள் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் கிளாலியில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தரமான குடிதண்ணீர் விநியோகத்தை ஏற்படுத்தும் வகையில் பொருத்தமான இடத்தில் குழாய்க் கிணறொன்றை அமைத்து தங்கு தடையின்றி குழாய் மூலம் நீர் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொது அமைப்புக்களைக் கோரியுள்ளார். (வ-115)

# சுதுமலை ஆலயத்துக்கு அருகில் சுகாதாரத்துக்கு கேடான நீர்க்குழி

## மூடி உதவுமாறு கோரிக்கை



சீர்கேடான நிலையில் நீர்க்குழி

மானிப்பாய்,ஏப்.30

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் முன்றிலில் உள்ள ஆலயத்தின் கிணற்றிலிருந்து 10 மீற்றருக்கும் குறைவான தூரத்தில் கழிவு நீர்க்குழி ஒன்று சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்தக் கழிவு நீர்க்குழி தூர்வடைந்த நிலையில் கழிவுநீர் தேங்கிக் காணப்படுகின்றது. இந்தக் குழியிலிருந்து துர்நாற்றம் வீசுவதுடன் உள்ளே நீருடன் கழிவுப் பொருள்கள் தேங்கிக் காணப்படுவதால் நுளம்பு பெருகும் அபாயமும் உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் ஆலயத்துக்கு வரும் அடியார்களும் குழியினுள் தவறிவிழும் அபாயமும் உள்ளது.

சுகாதாரத்துக்கும் மக்கள் நடமாட்டத்துக்கும் ஆபத்தாக உள்ள இந்தக் கழிவு நீர்க் குழியை மூடி உதவுமாறு மக்கள் பிரதேச சபையினரையும் பிரதேச சுகாதாரப் பிரிவினரையும் கேட்டுள்ளனர். (ஒ-115)

# தண்ணீர் கிடைக்காது பரிதவிக்கும் கால்நடைகள்

வடமராட்சி, ஏப்.30

கடும் வறட்சியினால் குளங்கள் மற்றும் துரவுகளில் தண்ணீர் இன்மையால் கரவெட்டி கிழக்கு, துன்னாலை தெற்கு கிராமங்களில் தண்ணீர்த் தாகத்தை தீர்த்துக் கொள்ள முடியாது பெருந் தொகையான கால் நடைகள் பரிதவிக்கின்றன.

கரவெட்டி கிழக்கு, துன்னாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் நெல் அறுவடை முடிவடைந்ததைத் தொடர்ந்து மேய்ச்சலுக்காக பெருந்தொகையான ஆடு, மாடுகள் விடப்பட்டுள்ளன. மேய்ந்து முடிந்ததும் ஆடு, மாடுகள் தண்ணீர் குடிப்பதற்காக படாத பாடுபடுவதுடன் தண்ணீர்இருக்கும்இடங்களைத் தேடி அலைந்து வருகின்றன.

இந்தக் கிராமங்களில் உள்ள குளங்களை ஆழமாக்கி மாரி காலத்தில் மழை பெய்யும் வேளையில், தண்ணீரைச் சேமித்து வைப்பதன் மூலம் வறட்சிக் காலத்தில் கால் நடைகளின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயத்தில் பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோருகின்றனர். (ஒ-173)

# மதகு இன்னும் சீர்செய்யப்படாததால் தொடர்கிறது ஆபத்தான பயணம்



வீதியோரத்தில் சீர் செய்யப்படாத நிலையில் மதகு

கொழும்புத்துறை, ஏப்.30

கொழும்புத்துறை வீதியில் 2 ஆம் குறுக்குச் சந்திப் பகுதியில் இருந்த மதகு, வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்ட போது சீர் செய்யப்படாமையால் அந்தப் பகுதியில் வீதியோரம் பெரிய குழிகளாக ஆபத்தை ஏற்படுத்தும் ஏதுநிலையுடன் காணப்படுகிறது.

மழை நீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் மதகு குறித்த பகுதியில் நீண்ட காலமாக இருந்த போதிலும் அதை புனரமைப்புச் செய்யாது வீதியை அமைத்தமையால் தற்போது மழை நீர் கடலுக்குச் செல்வதில் தடை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை ஒடுங்கிய குறித்த வீதியில் இரு பக்கமும் வீதியின் அருகேயே பெரிய வாய்க்கால் குழிகள் அடையாளப் படுத்தப்படாது காணப்படுவதால் வாகனங்களை விலத்தும் போது மோட்டார் சைக்கிள், சைக்கிளில் வருவோர் குழிகளில் விழுந்து ஆபத்தை எதிர்கொள்வதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.கொழும்புத்துறை தனியார் போக்குவரத்துச் சேவை இடம்பெற்று வரும் இவ்வீதியில் உள்ள ஆபத்தைத் தவிர்க்க உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (வ-135)

# திருடப்பட்ட வெளியிணைப்பு இயந்திரம் உரிமையாளரால் கண்டுபிடிப்பு

தென்மராட்சி, ஏப்.30

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு கடலேரியில் இறங்கு துறையில் கடந்த மாதம் திருடப்பட்ட 2 லட்சம் ரூபா பெறுமதியான வெளியிணைப்பு இயந் திரம் நீர்வேலிப் பகுதியில் அதன் உரிமையாளரால் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

கடந்தமாத முற்பகுதியில் இரவு கடலேரிக்குச் சென்று வலைகள் போட்டு விட்டுத் திரும்பிய தனங்களப்பு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் வீடு சென்று விட்டு அதிகாலையில் கடலுக்குச் செல்வதற்காக வந்த போது படகில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரம் காணாமற்போயிருந்ததைக் கண்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

**இரவு கடலேரிக்கு சென்று வலைகள் போட்டு விட்டுத் திரும்பிய தனங்களப்பு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் வீடு சென்று விட்டு அதிகாலையில் கடலுக்குச் செல்வதற்காக வந்த போது படகில் பொருத்தப்பட்டிருந்தவெளியிணைப்பு இயந்திரம் காணாமற் போயிருந்தது.**

நீர்வேலிப் பகுதி வீடொன்றின் பின் பக்கமாக வைக்கப்பட்டிருந்த இயந்திரத்தைக் கண்ட ஒருவர் அங்கிருந்து தனங்களப்புக்கு வந்து கடற்றொழிலாளர் சங்கத் தலைவருக்குத் தெரிவித்துள்ளார்.

தலைவரும் அங்கு சென்று பார்த்தபோது தனது வெளியிணைப்பு இயந்திரம் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் வீட்டுக்காரருடன் உரையாடியபோது தமக்குத் தெரிந்த ஒருவர் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனதாகக் கூறி அதனை எடுத்துச் செல்லுமாறும் கூறியுள்ளார்.

வெளியிணைப்பு இயந்திரத்துடன் பொலிஸ் நிலையத்துக்கு வந்து அதன் உரிமையாளர் தான் கொடுத்த முறைப்பாட்டை மனிதாபிமான அடிப்படையில் மீளப் பெற்றுள்ளார். (வ-9)

# மண்டானில் வீதியின் இரு மருங்கிலும் நிழல் மரங்கள்

வடமராட்சிப் பகுதியின் தென் பிரதேச எல்லையான மண்டான் கடல் நீர் ஏரிப் பகுதியில் வல்லைப் பிரதேசத்துக்குச் செல்லும் பிரதேச பிரதான வீதியின் இருமருங்கிலும் நிழல் மரங்கள் நடப்பட்டு கூடுகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் களஞ்சியப் பகுதியினால் குறித்த அதிகார சபையின் தலைமையகத்தின் அனுசரணையுடன் இந்த நிழல் மரங்கள் நடப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேசத்துக்கு நிழல் தரும் மரங்கள் நாட்டும் திட்டத்தின் கீழ் இவை நடப்பட்டுள்ளதாக அந்தக் கூடுகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் தனிச் சிங்களத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-122)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு மேலும் ஒரு மருத்துவ நிபுணர்

தென்மராட்சி, ஏப்.30

சாவகச்சேரி மருத்துவம னைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி மேலும் ஒரு பொது மருத்துவ நிபுணர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

குறித்த மருத்துவமனையில் ஏற்கெனவே பொது மருத்துவ நிபுணர் கடமையாற்றுகின்ற போதிலும் அங்கு நடத்தப்படும் பொது மருத்துவம் மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் பெருமளவில் கிளினிக்குகளுக்கு வருகை தருவதாலும், கிளினிக்குக்கு வரும் ஆஸ்துமா நோயாளர்களுக்கென தனியான கிளினிக் நடத்த மருத்துவமனை நிர்வாகத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவ மனையில் கடமையாற்றிய பொது மருத்துவ நிபுணர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

குறித்த மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் தொடர்பாக பிரதேச மக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே சுகாதார அமைச்சால் குறித்த பொதுமருத்துவ நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ மனையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)


## இந்தியப் பொருள்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை

ஐரோப்பிய ஒன்றியம், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பழங்கள் மற்றும் சில காய்கறி வகைகளுக்குத் தடை விதித்துள்ளது.
இந்திய அல்போன்சா மாம்பழம் மற்றும் காய்கறிகளுக்கு எதிராக 28 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இந்திய மக்கள் மற்றும் வர்த்தகர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
சில வர்த்தகர்கள் கண்டனம் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (கு)

# இந்திய பிரதமரின் அலுவலகத்தில் தீ

### மின் கசிவினால் ஏற்பட்டதாகத் தகவல்

புதுடில்லி,ஏப் 30
இந்தியாவின் புதுடெல்லியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை திடீரென்று பரவிய தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.
கணினியில் ஏற்பட்ட மின் கசிவு இந்தத் தீ விபத்துக்கு காரணமென்று சந்தேகிக்கப்படுகின்றது.
இந்தத் தீ விபத்து ஏற்பட்ட வேளையில் பிரதமர் மன்மோகன் சிங் அலுவலகத்தில் இருக்கவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
மேற்படி அலுவலகத்தின் கீழ் தளத்தில் புகை எழுந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதன்போது, அலுவலகத்திலிருந்த ஆவணங்களுக்குச் சேதம் ஏற்படவில்லை எனப் பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (கு)



## காங்கிரஸ் - பா.ஜ.க மறைமுக உடன்பாடு

### கெஜ்ரிவால் குற்றச்சாட்டு

புதுடில்லி,ஏப் 30
பெண் வேவு பார்க்கப்பட்ட விவகாரம், றொபர்ட் வத்ரா சர்ச்சையை மேற்கோள் காட்டிய ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், காங்கிரஸும் பா.ஜ.கவும் மறைமுக உடன்பாடு கொண்டிருப்பதாகக் குற்றம்சாட்டினார்.
வாரணாசியில் மோடியை எதிர்த்துப் போட்டியிடும் அரவிந்த் கெஜ்ரிவால் நேற்று செய்தியாளர்களிடம் பேசியது:
மோடி போட்டியிடும் தொகுதியில் சோனியாவும், சோனியா போட்டியிடும் தொகுதியில் மோடியும் பிரசாரம் மேற்கொள்ளாதது ஏன்?
றொபர்ட் வத்ரா நில பேர விவகாரத்தில் நரேந்திர மோடி தனது நிலைப்பாடு குறித்து விளக்கம் அளிக்க வேண்டும்.
உண்மையிலேயே இந்த விவகாரத்தில் பா.ஜ.கவுக்கு அக்கறை இருந்தால், ராஜஸ்தானில் ஆளும் பா.ஜ.க அரசு, வத்ராவுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யாதது ஏன்?
அதேபோல், பெண் வேவு பார்க்கப்பட்ட விவகாரம் மற்றும்அதானிவிவகாரத்தில்பா.ஜ.கவுக்கு எதிராக கேள்வி எழுப்பிவரும் காங்கிரஸ், அது குறித்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளில் அழுத்தம் தராதது ஏன்?
பா.ஜ.கவும் காங்கிரஸும் பரஸ்பரம் குற்றம்சாட்டிக்கொள்கிறார்களே தவிர, எவ்வித நடவடிக்கைகளையும்எடுப்பதில்லை இதில் இருந்தே அவர்கள் கைகோர்த்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இரு கட்சிகளுக்கும் இடையே மறைமுக உடன்பாடு உள்ளது.
டில்லியில் ஷீலா தீட்சித், முகேஷ் அம்பானிக்கு எதிராக என்னால் வழக்குத் தொடர முடிந்தது. அப்படியிருக்க, கடந்த 4 மாதங்களாக வதேராவுக்கு எதிராக ராஜஸ்தானின் பா.ஜ.க அரசால் வழக்குப் பதிவு செய்ய முடியாததுஏன்? -என்றார் (கு)

# ஏமாற்றுக் கட்சி காங்கிரஸ்

புதுடில்லி,ஏப் 30
காங்கிரஸ் கட்சி ஏமாற்றுக் கட்சி. அக்கட்சியின் தேர்தல் அறிக்கை பொய்யானது என பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சாடியுள்ளார்.
ஹிமாச்சல பிரதேசத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட நரேந்திர மோடி:
நான் இவ்வாறு பேச விரும்பவில்லை. இருந்தாலும் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி ஏமாற்றுக் கட்சி. அக்கட்சியின் தேர்தல் அறிக்கை பொய்யானது என்றார்.
மோடி மேலும் பேசியதாவது:-
கடந்த 2009 இல் காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கையை வெளியிட்டபோது, ஆட்சிக்கு வந்து 100 நாள்களுக்குள் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதாக தெரிவித்தது. ஆனால் விலைவாசி உயர்வைகட்டுப்படுத்தவில்லை.
அப்படி என்றால் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை பொய் அறிக்கை தானே? தவறுகளை நீங்கள் மன்னிப்பீர்கள். ஆனால் ஏமாற்றுக்காரர்களை ஒருபோதும் நீங்கள் மன்னிக்கமாட்டீர்கள் என்பது தெரியும்.



மத்தியில் ஆள பாரதீய ஜனதா கட்சிக்கு ஒரு முறை வாய்ப்பளியுங்கள். காங்கிரஸ் கட்சிக்கு 60 ஆண்டுகள் கொடுத்த நீங்கள், எனக்கு 60 நாள்கள் தாருங்கள். நான் உங்களுக்காக சேவை செய்வேன். நாட்டுக்கு இப்போது தேவை ஆட்சித்தலைமை அல்ல மக்கள் சேவகனே. ஒரு சேவகனாக நான் உங்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன். அதற்கு உங்கள் ஆசி வேண்டும். நாட்டில் நிலையான ஆட்சி ஏற்பட 300 தாமரைகள் மலர வேண்டும். மக்கள் பா.ஜ.கவுக்கே வாக்களிக்க வேண்டும் என்றார். (கு)



உத்தர பிரதேச மாநிலம் ரேபரேலியில், தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட பிரியங்கா காந்தி மீது தொண்டர்கள் பூச்சொரிந்து அவரை வரவேற்றனர். (கு)

## வேலைவாய்ப்புக்கெனத் தனிப் பிரிவு சென்னை பல்கலைக்கழக வளாகத்தில்

### துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.தாண்டவன் தெரிவிப்பு

சென்னை, ஏப்ரல், 29
எதிர்வரும் கல்வி ஆண்டில் இருந்து சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் வேலைவாய்ப்புக்கென தனிப் பிரிவு தொடங்கப்படும் எனச் சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.தாண்டவன் தெரிவித்துள்ளார்.
சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ படித்த மாணவர்களுக்கு டி.சி.எஸ் மற்றும் ஹெச்.சி.எல் உள்ளிட்ட நிறுவனங்கள் தேர்வுகளை நடத்தி 60 மாணவர்களை தேர்வு செய்துள்ளன.
அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பணி ஆணை வழங்கும் விழா மற்றும் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி சென்னை பல்கலைக்கழக சேப்பாக்கம் வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
அங்கு கலந்துகொண்டு மாணவர்களுக்கு பணி ஆணைகளை வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து கூறுகையில்,
சென்னை பல்கலைக்கழகத்தில் 73 துறைகள் உள்ளன. இவற்றில், முக்கியமான துறைகளில் ஒன்றாக மேலாண்மை படிப்பு துறையும் விளங்குகிறது. தற்போது 60 மாணவர்கள் பணி ஆணைகளைப் பெற்றுள்ளனர். கிராமப்புற விவசாய குடும்பத்தில் இருந்து அதிகமான மாணவர்கள் வந்து படிக்கின்றனர்.
எனவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது முக்கியமானதாக இருக்கிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுத் தரும் நடவடிக்கைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது.
வரும் கல்வி ஆண்டில் இந்த வளாகத்தில் வேலைவாய்ப்புக் கென தனிப் பிரிவு ஒன்று புதிதாக தொடங்கப்படவுள்ளது. பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து துறை மாணவர்களின் விவரங்களும் பதிவு செய்யப்பட்டு நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல் ஹெல்த்கேர் மையமும் மாணவர்களுக்கு கவுன்சிலிங் அளிக்க சிறப்பு மையமும் உருவாக்கப்படும் என்றார். (கு-10)

## ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு; தடையை நீக்கி உயர்நீதிமன்று உத்தரவு

சென்னை,ஏப் 30
அதிமுக பொதுச் செயலாளரும் தமிழக முதலவருமான ஜெய லலிதா மீது பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணைக்கு வழங்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையை நீக்குவதாக இந்திய உயர் நீதிமன்றம் திங்களன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.
இந்த சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பில் அந்த வழக்கின் அ[illegible]ழக்கறிஞரான பவானி சிங்கின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், அவரால் அந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாக இயலவில்லை என்று அவர் சார்பில் தொடுக்கப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம், கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் தேதி அன்று சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணைக்கு 3 வார காலத் தற்காலிகத் தடைவிதித்து உத்தரவிட்டிருந்தது.
திங்களன்று உயர்நீதிமன்றத்தில் பவானி சிங்கின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் நாகேந்திர ராய், பவானி சிங்கின் உடல் நிலை தற்போது சரியாகியுள்ளதாகவும், ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக்குவிப்பு வழக்கில் பவானி சிங் முன்னிலையாகத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்ததை அடுத்து, இந்தச் சொத்து குவிப்பு வழக்கின் விசாரணை மீது வழங்கப்பட்டிருந்ததற்காலிகதடையை நீக்குவதாக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறபித்துள்ளது.
இந்த உத்தரவை பிறப்பித்த உயர்நீதிமன்ற நீதிபதி பி.எஸ். சௌஹன் மற்றும் ஜே.செல்மலேஷ்வர் ஆகியோர் அடங்கிய அமர்வு, அடுத்த கட்ட விசாரணைகளில் பவானி சிங் தொடர்ந்தும் முன்னிலையாக வேண்டும் என்றும், எந்த காரணங்களை காட்டியும் அவர் முன்னிலையாவதிலிருந்து விலகக்கூடாது என்றும் அறிவுறுத்தியது.
தமிழக முதல்வர் ஜெயலலிதா 1991ஆம் ஆண்டிலிருந்து 1996ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தமிழக முதல்வராக இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாக கிட்டத்தட்ட 66.65 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை குவித்துள்ளதாகத் தொடரப்பட்டுள்ள சொத்துக்குவிப்பு வழக்கின் இறுதிகட்ட விசாரணை தான் தற்போது நடந்து வருகிறது.
அந்த வழக்கில் அரச வழக்கறிஞர் அவருடைய இறுதி வாதங்களை முன்வைக்க தாமதம் செய்ததற்காகவும், நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாவதிலிருந்து தவறியதற்காகவும், பவானி சிங்குக்கு கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி அன்று கிட்டத்தட்ட 60,000 ரூபா அபராதம் விதித்து சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
இந்த தீர்ப்பை எதிர்த்து பவானி சிங் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு தள்ளுபடி ஆனதை அடுத்து அவர் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தார். (கு)

## நடு வானில் தீப்பிடித்தது ஆஸ்திரேலிய விமானம்!

### 93 பயணிகள் உயிர் தப்பினர்

கான்பரா.ஏப். 30
ஆஸ்திரேலியாவில் பயணிகள் விமானம் ஒன்று நடுவானில் தீப்பிடித்து எரிந்தது. விமானி சாதுரியமாக விமானத்தைத் தரையிறக்கியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தின் ஜெட் பயணிகள் விமானம் ஒன்று நேற்று முற்பகல் 10.45 மணிக்கு 93 பயணிகளுடன் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள பரோ தீவை நோக்கிப் பயணித்தது.
இந்த விமானம் வானில் பறக்கத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே விமானத்தின் இயந்திரம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது.
எரிபொருள் தீப்பிடித்து இயந்திரத்தில் பற்றி தீ பரவியதாகத் தெரிகிறது. எனினும், விமானி சாதுரியமாக விமானத்தைத் தரையிறக்கியதால் விமானம் விபத்தில் இருந்து தப்பியது. இதனால் 93 பயணிகள் உயிர்பிழைத்தனர். (த)



பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியிலுள்ள பேசியர்ஸ் நகரில் பல்லாயிரக் கணக்கான முட்டைகளைப் பயன்படுத்தி பெரிய முட்டைப் பொரியல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த முட்டைப் பொரியல் தயாரிப்பு நிகழ்வில் ஆயர் ரொபர்ட் லீ கோல் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர். (த)

## பெண்களுக்கு மரியாதை ஐக்கிய அரபு முதலிடம்



டுபாய்,ஏப் .30
பெண்களை மரியாதையாக நடத்தும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடான ஐக்கிய அரபு அரபு இராச்சியம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.132 நாடுகளிடையிலான வளர்ச்சி மற்றும் நலன்புரி ஒப்பீட்டு ஆய்வினை மேற்கொண்ட உலக பொருளாதார அமைப்பின் உலகளாவிய செயற்றிட்ட சபையே இத் தகவலை வெளியிட்டுள்ளது.
'நாங்கள் பெண்களை மதிக்கிறோம். நாட்டின் முக்கிய பங்காளர்களான பெண்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களை மதிக்கிறோம். பல்வேறு துறைகளில் ஆண்களை விட அதிகமாக பெண்களால் பங்களிப்புச் செய்ய முடிகின்றது. ஐக்கிய அரபு இராச்சிய சமூகம் பெண்களின் சக்தியை முழுமையாக அடைவதற்கு உதவி புரிகின்றது' என துணை ஜனாதிபதியும் அமைச்சருமான ஷேக் மொஹமட் பின் ரஷித் அல் மக்தூம் தெரிவித்துள்ளார். இதேவேளை 54 அளவீடுகளை கொண்டு மேற்கொள்ளப்பட்ட மொத்த சமூக வளர்ச்சிச் சுட்டியில் மத்திய கிழக்கு நாடுகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ள ஐக்கிய அரபு இராச்சியம் உலகளவில் 37ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. (த)

# மாயமான மலேசிய விமானம் வீழ்ந்தது பாக்கு நீரிணையில்

## ஆஸ்திரேலிய நிறுவனம் பரபரப்புத் தகவல்

கான்பரா.ஏப். 30
காணாமற்போன மலேசிய விமானத்தின் பாகங்களைப் பாக்கு நீரிணையில் கண்டு பிடித்துள்ளதாக ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.
காணமற்போன மலேசிய விமானத்தின் பாகங்களைப் பாக்குநீரிணை பகுதியில் தமது நிறுவனத்தினர் கண்டு பிடித்துள்ளதாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கடல் ஆய்வு நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.
இந்து சமுத்திரத்தில் தற்போது தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் பகுதியில் இருந்து 5000 கிலோமீற்றர்களுக்கு அப்பால் இந்தச் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.
காணாமற்போன மலேசிய விமானத்தை தேடி தமது நிறுவனம் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி தனியான தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்ததாக ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் பகுதியை தளமாகக் கொண்ட ஜியோறி சோனன்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.
இந்தத் தேடுதலில், தற்போது தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் பகுதியில் இருந்து 5000 கிலோ மீற்றர் தொலைவில் விமானத்தின் பாகங்களை கண்டுபிடித்துள்ளதாக குறித்த நிறுவனம் அறிவித்துள்ளதாக, ஆஸ்திரேலியாவின் ஸ்ரார் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
சுமார் 2,000,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் தேடுதல் நடவடிக்கைகளை தமது நிறுவனம் முன்னெடுத்ததாக ஜியோறிசோனன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.
செய்மதிப் புகைப்படங்கள், விமானத்தில் இருந்து பெறப்பட்ட புகைப்படங்கள், அணு மின்அலை உள்ளிட்ட தரவுகளின் உதவியுடன் இருபதுக்கும் மேற்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விமானத்தின் சிதைவுகளைக் கண்டு பிடித்ததாக குறித்த நிறுவனத்தின் பேச்சாளர் டேவிட் போப் அறிவித்துள்ளார்.
அணு உலைகள் மற்றும் நீர்மூழ்கிகளை கண்டறிய பன்படுத்தும் தொழில்நுட்பத்தை தமது நிறுவனம் அதிகளவில் பயன்படுத்தியதாக அவர் கூறியுள்ளார்.
தாம் கண்டுபிடித்த சிதைவுகள் மலேசிய விமானத்தினுடையவை என்பதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ள போதிலும், அது தொடர்பாக நூற்றுக்கு நூறுவீதம் முடிவுக்கு வருவதற்கு ஆய்வுகளை தொடர வேண்டும் என ஜியோறிசோனன்ஸ் நிறுவனத்தின் பேச்சாளர் டேவிட் போப் அறிவித்துள்ளார்.
இதேவேளை, இந்த அறிக்கை தொடர்பாக தமக்கு இதுவரை தகவல் கிடைக்கவில்லை என மலேசிய சிவில் விமானத் துறை பணிப்பாளர் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.
குறித்த தகவலை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே அது தொடர்பில் கருத்து வெளியிடமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# ரஷ்ய துணைப் பிரதமர் உட்பட 15 பேருக்கு எதிராகத் தடைகள்

## ஐரோப்பிய ஒன்றியம் அதிரடி

பிரசல்ஸ்.ஏப் .30
ரஷ்யாவின் துணைப் பிரதமர் உட்பட 15 பேருக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் தண்டனைத் தடைகளை விதித்துள்ளது.
உக்ரைனின் ஸ்திரத்தன்மையைக் குலைக்க முயலுபவர்கள் என தாம் நம்புவோருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதமாக அது இந்த தடைகளை அறிவித்துள்ளது.
ரஷ்ய ஆயுதப் படைகளின் தலைமை அதிகாரி, ரஷ்ய உளவுத்துறை இயக்குநகரகத்தின் இயக்குநர், கிழக்கு உக்ரைனில் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உக்ரைன் பிரி வினைவாதிகள் சிலர் ஆகி யோரும் இந்தத் தண்டனைத் தடைகளுக்கு இலக்காகியுள்ளனர்.
ஆனால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமெரிக்கா அறிவித்திருந்த தண்டனைத் தடைகளுக்கு இலக்காகியிருந்தோர் அளவுக்கு முக்கிய நபர்களின் பெயர்கள் தற்போதைய ஐரோப்பிய ஒன்றியப் பட்டியலில் இடம்பெறவில்லை.
அதாவது முன்னணி தொழிலதிபர்கள் பெயர்களோ நிறுவனங்களின் பெயர்களோ ஐரோப்பிய பட்டியலில் இல்லை. தவிர ஐரோப்பிய ஒன்றிய பட்டியலில் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளவர்கள், முடக்கக் கூடிய விதமான சொத்துக்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கொண்டுள்ளனரா என்பதும் தெளிவாகத்தெரியவில்லை. (த)

## மூழ்கிய கப்பலிலிருந்து தப்பிச் சென்றார் கப்டன்

சியோல்.ஏப் .30
400 பயணிகளுடன் கடலில் மூழ்கிய தென்கொரிய கப்பலின் கப்டன் தப்பிச் செல்லும் காணொலி ஒன்றைத் தென் கொரிய கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.
69 வயதுடைய கப்டனும் அவருடன் மற்றுமொருவரும் கப்பல் மூழ்கும் தருணத்தில் சிறிய படகொன்றில் தப்பிச் செல்வது அந்தக் காணொலியில் பதிவாகியுள்ளது.



தப்பிச் செல்லும் கப்டன்

இதுவரை 300 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்கள் உள்ளடங்கலாக100 பேரின் நிலைமை தொடர்பில் இது வரை தகவல்கள் எதுவும் இல்லை.
இதேவேளை குறித்த கப்பலின் கப்டன் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தென்மராட்சியில் தொடர்கிறது மணல் அகழ்வு குறிப்பிட்ட சிலரே விடாது 'அச்சமின்றித் தொழில்'

## உரிய நடவடிக்கை இல்லாததுதான் காரணமா?

யாழ்ப்பாணம், ஏப் .30

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற டிராக்டரை கொடிகாமம் பொலிஸார் துரத்திச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைப்பற்றினர். எனினும் அதனைச் செலுத்திச் சென்றவரான நிமலன் தப்பியோடிவிட்டார்.

அவரைத் துரத்திச் சென்ற பொலிஸாரின் வாகனத்துக்கு ஆணிகள் பொருத்தப்பட்ட பலகைகளை இனந்தெரியாதவர்கள் வீதியில் வீசியெறிந்ததனால் பொலிஸ் வாகனத்தின் 'சில்லின்' காற்றுப் போய்விட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை முன்னிரவு பாலாவி வடக்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை நிமலன் என்பவரே அவ்வாறு தப்பியோடியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் முன்னரும் ஒரு தடவை மணல் ஏற்றிச் சென்றபோது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டே பிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அவர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் தொடர்ந்து சட்டவிரோத செயலில் ஈடுபட்டு வருகிறார். அங்கு அனேகமான நாள்களில் பலரும் மணல் 'கொள்ளை'யில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்பின்னரும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறைவாகவேயுள்ளது. இந்தப் பகுதிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கூட அது தொடர்பில் அக்கறை கொள்வதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிப்பதோடு, முன்னர் ஒரு தடவை சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவர்களை தமிழ் பேசும் பொலிஸார் இருவர் கைது செய்திருந்தபோதும் அந்த இருவரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அந்த இருவரும் கொடிகாமம் பொலிஸ் பிரிவில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பாலாவி வடக்கில் நடந்த சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

கொடிகாமம் பொலிஸார் அங்கு சென்ற போது சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர்கள் வாகனங்களுடன் தப்பியோடியதாகவும், துரத்திச் சென்ற பொலிஸாரின் வாகனம் வந்த பாதையில் ஆணி பொருத்திய பலகைகளை வீதியில் வைத்து வாகனத் தின் ரயர்கள் காற்றுப் போகச் செய்யப்பட்ட தாகவும், பின்னர் அங்கு நின்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தமது வாகனத்திலிருந்து இறங்கி தப்பிச் சென்ற வாகனத்தை துரத்திச் சென்றதாகவும் இறுதியில் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வாகனத்தைக் கைப்பற்றியதோடு அதன் சாரதியையும் கைது செய்ததாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும் எவரையும் தாம் கைது செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த சனிக்கிழமை கைப்பற்றப்பட்ட குறித்த டிராக்டர் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-4-9)


63ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டுவிழாவும்

உயர்திரு சபா. குகதாசன்

"சாமஸ்ரீ தேசமானிய" (அகில இலங்கை சமாதான நீதிவான்). இயக்குநர்-குகன் கல்வி நிறுவனம்.



எமது நிறுவனத்தின் பணிப்பாளரும் சிறந்த சமூக. சேவையாளருமான உயர்திரு சபா. குகதாசன் அவர்கள் இலங்கையின் அதிஉயர் விருதான "சாமஸ்ரீ தேசமானிய" விருதை பெற்று பெருமை சேர்த்ததோடு, இன்று (30.04.2014) தனது 63ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.

Best Wishes

அவரை மேலும் பல்லாண்டு காலம் உடல் உள நலத்தோடு வாழ்ந்து பல உயர் விருதுகள், பட்டங்கள் பெற்று கல்வி, சமூக பணியாற்ற இறையருள் வேண்டி உளமார வாழ்த்துவதோடு, பாராட்டு விழா எடுத்து மகிழவுள்ளோம்.

குகன் கல்வி நிறுவனம், ஆவரங்கால், புத்தூர். ஆசிரியர்களும், ஊழியர்களும்.


### மே தினக் கூட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸுடன் இணைந்து நடத்தும் சர்வதேச தொழிலாளர் தின ஊர்வலமும் பொதுக் கூட்டமும் மே மாதம் முதலாம் திகதி கர வெட்டி தபாற் கந்தோருக்கு அருகிலுள்ள ஞான வைரவர் ஆலய முன்றிலில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. (க)

# வறட்சி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 30

தற்போது யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக வெப்ப நிலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக பயிர்ச் செய்கைத்துறை எதிர்நோக்கும் சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கக் கூடிய பொருத்தமான தந்திரோபாயங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கான செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன சுற்றாடல்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆர்வமுள்ள விவசாயிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், விவசாயத்துறை சார்ந்த விற்பன்னர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆசிரியர்கள் போன்றவர்களை இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் கி. சிறீபாலசுந்தரம் அழைப்பு விடுத்துள்ளார். (ஒ-9)


வாகனம் விற்பனைக்கு

PT - XXXX தொடரிலக்கமுடைய Maximo Mahendra Ice creamவான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 450 4620/077 814 5652 (47466) (12.5.6)

கட்டார் Air - Ways (கட்டார் Air Port)

Trolly boys - 350 பேர் தேவை.
தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
நாள் ஒன்றுக்கு 8 மணித்தியால வேலை.
மாதாந்தம் இலங்கை ரூபாவில் 50,000இற்கு மேல் சம்பாதிக்கலாம்.

(43276) (12.5.6) தொடர்பு: 077 788 1239



அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகங்கள்



மாணவர்களே!
85 நவீன நாடகங்களையும் 14 நாடக நூல்களையும் அச்சிட்டு வெளியிட்ட கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடகங்களையும் யாழ்சேவை ஒலிபரப்புகின்றது. அவற்றைக் கேட்டு சமூக நாடகங்களை எழுதவும், நடிக்கவும், தயாரிக்கவும் கற்றுக் கொள்ளுங்கள். (47465) (3.6.4)



40 ஆண்டுகள் பணி நிறைவில் வாழ்த்து

அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம்



இறைபணி அழைத்தல் ஏற்று- திரு
மறை தனை சாற்றி
பணிவாழ்வில் நாற்பது ஆண்டுகள்
இனிதாகக் காண்கின்ற
அருட்குருவே எங்களின்
பெருமைக்கு உரியவரே- நின்
பணிக்காலம் எம் தலத்தின்
பொற்காலம் தந்தையே
போற்றுகின்றோம் உமை நாம்
வாழ்த்தி மகிழ்கின்றோம்
ஊற்றாய் பெருகிட நின்பணி
உன்னத தேவனை
வேண்டுகின்றோம்.

Congratulation

இளவாலை புனித யூதா ததேயு ஆலய பங்குத் தந்தையும், பங்கு மக்களும். (47470)(5.6.3)


### மகா கும்பாபிஷேகம்

துன்னாலை வடக்கு, ஆயில் நின்றொல்லை அருள்மிகு வல்லியானந்தப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.06 மணி முதல் மு.ப.10.36 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள் ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் 3ஆம் திகதி சனிக் கிழமை முதல் ஆரம்பமா கின்றன.

4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஒ-173)


நாகபூஷணி திருமண சேவை

"பதிவுகள் யாவும் இலவசம்"

(28.04.2014 முதல் 04.05.2014 வரை)

உயர்தொழில், அரச, தனியார்துறை உள்நாட்டு/ வெளி நாட்டு மணமக்களை மிகச் சிறந்த முறையில் பொருத்தமாக உடன் தெரிவு செய்யலாம்.

T.P. 021 222 9306, 077 138 7596, 075 554 6000
15/11, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Email - nakapoosanywedding@gmail.com (47425) (4.6.3)


### நாய்க்கடிக்கு ஆளாகியவர்களுக்கு வழங்கப்பட்டது ஏ.ஆர்.வி. தடுப்பூசி

வெவ்வேறு இடங்களில் வளர்ப்பு நாயின் கடிக்கு இலக்கான ஐந்து பேரும், தெருநாய்க்கடிக்கு ஆளான ஒருவரும், பூனைக்கடிக்கு ஆளான ஒருவரும் ஏ.ஆர்.வி. மருந்து ஏற்றுவதற்காக அண்மை யில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர் மேலும் தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக நாய்க ளுக்கு விலங்கு விசர் நோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் விலங்கு விசர் தடுப்பூசிகளை வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றாதவர்கள் உடனடியாக உரிய அலுவலகத்துக்குச்சென்று தடுப்பூசிகளை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-36)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



27.04.2014 ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற எம் அன்புச் செல்வங்கள் இறைவன் திருவருளால் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சகல விதமான செல்வங்களுடனும் சிறப்புக்களுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.



Congratulation

திருமதி வித்தியா லெட்சுமி உமாசுதசர்மா (B.A)

திருமதி ஜெகஜனனி ஆனந்தகிருஷ்ணசர்மா(B.A) (47457) (4.3.6)

குடும்பத்தினர்.



இலங்கையின் முன்னணி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கிலப்பாடநெறிகள் ஆரம்பமாகின்றன.

SPOKEN ENGLISH
IELTS/A1/B1/B2
SPOKEN SINHALA

புதுவருடத்தினை முன்னிட்டு 20% வரையான கட்டணக்கழிவு வழங்கப்படுகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன....

03.05.2014 @ 9.00 A.M

அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

City & Guilds APPROVED CENTRE

E-CITY COLLEGE OF ENGLISH

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C/13589)

0212217106/0774924166/0773400418

# போரால் பெரும் துயரங்களை அனுபவித்தது வன்னி மண்ணே

## கிளிநொச்சியில் யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி,ஏப்.30

வடக்கு, கிழக்கு மண் கடந்த காலப் போரால் பல துன்பங்களை அனுபவித்த மண். அதிலும் வன்னி மண் கிழக்கு மாகாணத்தை விட அதிகளவு பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசமாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் உறவுகளால் உருவாக்கப்பட்ட எழுகை அமைப்பினூடாக உலருணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.



பார்வையற்ற ஒருவருக்கு உலர் உணவுப் பொதி வழங்கினார் யோகேஸ்வரன் எம்.பி.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பார்வையிழந்தாலும் இன்று உறுதியுடன் வாழ முடியும் என்பதை வன்னியில் உள்ள பார்வையற்றோர்கள் நிரூபித்துள்ளனர்.

எமது தாயக மண்ணில் இருந்து போரால் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் எமது மக்களின் துன்பங்களை மறக்காது அவர்களின் வாழ்வியலைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனையுடன் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் ஒன்றிணைந்து அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

எந்தவித குறைபாடுகளும் இல்லாது இருக்கின்ற முழு மனிதர்களை விட பார்வையற்றோர்கள் மிகவும் நல்ல நிலையில் வாழுவதை அவதானிக்க முடிகின்றது. அது அவர்களின் அயராத முயற்சி. விழிப்புலன் இன்றி இருந்தாலும் பலர் நல்ல நிலையில் பட்டதாரி களாகவும் உயர்பதவிகளிலும் இருக்கின்றனர்.

கடந்த கால போரால் நாங்கள் பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்திருக்கின்றோம். போரால் தாய், தந்தையர்களை இழந்த சிறுவர்கள் பல பேர் எம்மத்தியில் காணப்படுகின்றனர். அவர்களின் எதிர்காலம் கட்டியெழுப்பப்பட வேண்டும்- என்றார்.

இதேவேளை கிளிநொச்சி, பரந்தனில் அமைந்துள்ள வன்னி பார்வையற்றோர் சங்கத்தின் ஊடாக வன்னியில் உள்ள பார்வையற்றோருக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் பார்வையற்றோருக்கு மாதாந்தம் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வன்னி பார்வையற்றோர் சங்க அலுவலகத்தில் வைத்து பார்வையற்ற 125 பேருக்கு தலா 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கலந்து கொண்டு உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்தார். (ச-55)

## தீயால் வேலிகள் நாசம்

முல்லைத்தீவு, ஏப்.30

பண்டாரவன்னிக் கிராமத்தில் மர்மமான முறையில் ஏற்பட்ட தீயால் 25 ஏக்கர் விவசாயக் காணியின் சுற்றுவேலிகள் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தத் தீ விபத்து ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவின் உதவியுடன் சிவில் பாதுகாப்புக் குழுவால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பண்டாரவன்னிக் கிராமத்தில் குறிப்பிட்ட பகுதியில் கடந்த 16 ஆம் திகதி திடீரென தீப்பற்றிக் கொண்டதால் மக்கள் பதற்றமடைந்தனர்.

அதனையடுத்து உடனடியாக ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் சிவில் பாதுகாப்புக்குழுக்களை இணைத்து தீயைகட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்தனர். எனினும் வயலைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலிகள் எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-500)

## எரிந்தது கடை

வவுனியா,ஏப்.30

வவுனியா, ஏ-9 வீதி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டப்பொருள்கள் விற்பனை நிலையமொன்று சனிக்கிழமை தீப்பற்றி எரிந்துள்ளது.

உரிமையாளர் கடையில் உள்ள சுவாமிப் படத்துக்கு விளக்கேற்றிவிட்டு கடையை மூடிவிட்டுச் சென்றுள்ளார். அதன் பின்னர் கடைக்குள் இருந்த எலி விளக்குத் திரியை எடுத்து சென்று கட்டப்பொருள்களுக்குள் போட்டதையடுத்து கடை தீப்பற்றியுள்ளது. அதனையடுத்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலிருந்த பொலிஸார் தண்ணீர் பவுசரின் உதவியுடன் தண்ணீர் ஊற்றி தீயணைத்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தால் 40 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதமடைந்துள்ளன என்று கடை உரிமையாளர் தெரிவித்தார். இந்தத் தீ விபத்து நடந்த இடத்தை வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர் பார்வையிட்டுள்ளனர். (ச-402)

## உடைந்த தளபாடங்களை திருத்திய மாணவர்கள்

கிளிநொச்சி,ஏப்.30

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் 2015 கலைப் பிரிவு மாணவர்கள் உடைந்த தளபாடங்களை திருத்தி மீளப்பயன்படுத்துவதற்கு கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நிலவி வந்த தளபாட பற்றாக்குறையை நீக்கும் வகையில் அவர்கள் செயற்றிட்டத்தின் மூலம் முன்மாதிரியாக உடைந்த நிலையில் காணப்பட்ட 200 கதிரை மற்றும் மேசைகளைத் திருத்தி பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கையளித்துள்ளனர்.

அதிகளவான பாடசாலைகளில் பழுதடைந்த தளபாடங்கள் மீளப் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்ற நிலையில், இந்த மாணவர்களின் முன்மாதிரியான செயற்பாட்டை கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. (ச-55)



வவுனியா ஏ-9 வீதியில் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்திருந்த 'ஓமந்தை ஹாட்வெயார்' என்ற வர்த்தக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இரவு திடீரென தீ பரவி அங்கிருந்த பொருள்கள் எரிந்து கருகி நாசமாகியுள்ளன. (ஓ-402)

## கொங்கிறீட் வீதியில் பயணிப்பது ஆபத்து

கிளிநொச்சி,ஏப்.30

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீட் வீதிகள் மக்களுக்கு உயிராபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய அபாய நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளின் இரு புறமும் மண் அணை அமைக்கப்பட வேண்டும். ஆனால் வீதி நிர்மாணப்பணிகளைமேற்கொண்டோர் குறிப்பிட்ட மண் அணைகளை அமைக்கவில்லை. அதனால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

குன்றும் குழியுமான வீதியில் பயணிக்கும்போது விபத்து ஏற்பட்டால் உயிரிழப்பு குறைவு. ஆனால் கொங்கிறீட் வீதியில் பயணிக்கும் போது ஆபத்துக்கள் அதிகமாக வாய்ப்புண்டு என்று மக்கள் தெரிவித்தனர். (ச-18)

## சேதமடைந்த வீதி; மீனவர் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.30

மாந்தை மேற்கு, பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாப்பாமோட்டை கிராமத்தில் ஏ-32 பிரதான வீதியிலிருந்து கடலுக்குச் செல்லும் வீதி பாதிப்படைந்துள்ளதால் மீனவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த வீதி நீண்ட நாள்களாக புனரமைக்கப்படாமல் உள்ளதால் கடற்றொழிலின்போது மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களை சந்தைப்படுத்துவதற்கு எடுத்துச் செல்வதில் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.



புனரமைப்பு இல்லாத வீதி

இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை முன்வைக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதியை புனரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## விஷ ஜந்துகளின் உறைவிடமாகின கைவிடப்பட்ட வாகனங்கள்

### ஆறுமுகம் வித்தியாலயத்தில் அவலம்

*முல்லைத்தீவு, ஏப்.30*

*ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலய வளாகத்தில் கைவிடப்பட்ட வாகனங்களை மூடி காடுகள் வளர்ந்துள்ளன. அதனால் விஷ ஜந்துக்களின் உறைவிடமாக அவை காட்சியளிக்கிறது. இந்த வாகனங்களுக்குள் உள்ள உதிரிப் பாகங்களினால் டெங்கு பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.*

*இது குறித்து ஏற்கெனவே ஊடகங்களில் செய்திகள் வெளி வந்தும் கூட இதுவரை எவரும் வாகனங்களை அப்புறப் படுத்த முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.*

*இது குறித்து வித்தியாலய அதிபரிடம் கேட்டபோது:-*

*இந்த வாகனங்கள் அப்புறப்படுத்தாது இருப்பதால் தமக்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை -என்றார். (ச-500)*

## வழங்கிய கணினிகள் பயன்படுத்தப்படவில்லை

### அசமந்தப்போக்கே காரணம் என்கின்றனர் அதிகாரிகள்

பூநகரி, ஏப்.30

கிளிநொச்சி பூநகரி கறுக்காய் தீவு அ.த.க. பாடசாலைக்கு வழங்கப்பட்ட கணினிகள் 3 ஆண்டுகளாக மாணவர்களால் பயன்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலைக்கு வழங்கப்பட்ட கணினிகள் தறப்பாளால் மூடிக்கட்டி வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்தக் கணினிகளை இயக்க வழங்கப்பட்ட ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் ஏன் பயன்படுத்தப்படவில்லை என்று அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாடசாலை நிர்வாகத்தின் அசமந்தப் போக்கே கணினிகள் பயன்படுத்த முடியாமைக்கு காரணமாக அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது. (ச-18)

# மட்டக்களப்பு நகரை அழகுபடுத்த வேலைத்திட்டம் ஆரம்பம்



மட்டக்களப்பு நகரை அழகுபடுத்த மரக் கன்றுகளை நட்டுவைத்தனர் மாநகர சபை உறுப்பினர்கள்

மட்டக்களப்பு,ஏப்.30

மட்டக்களப்பு நகரைப் பசுமையாக வைத்திருக்கும் திட்டத்தை மட்டக்களப்பு மாநகரசபை ஆரம்பித்துள்ளது என்று மாநகர ஆணையாளர் எம். உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகர முகப்பு நுழைவாயிலின் மணிக்கூட்டுக் கோபுரத்தை அண்டிய பகுதிகளில் மரங்களை நடும் வேலைத் திட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக அழகு தரும் 200 பசுமைத் தாவரங்கள் நடப்பட்டன. அதற்கு மேலதிகமாக மட்டக்களப்பின் முக்கிய வீதிகளின் இரு மருங்குகளிலும் நிழல் தரும் மரங்கள் நட்டு வைக்கப் பட்டன.

வாவியால் சூழப்பட்டுள்ள மட்டக்களப்பு நகரை பசுமரத் தாவரங்களால் அழகுபடுத்திப் பராமரிப்பதே மாநகர சபையின் நோக்கம் என்று மாநகர ஆணையாளர் கூறினார். (ச)

## பட்டதாரிகள் போராட்டம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள்

மட்டக்களப்பு,ஏப்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் வெளிவாரி மற்றும் உள்வாரிப் பட்டதாரிகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகம் முன் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2011 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்கள் வேலையில் உள்வாங்கப்பட்டு 2 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்த நிலையில் எமக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை என்றுகூறி வேலையற்ற பட்டதாரிகள் இணைந்து பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்று செவ்வாய்க்கிழமை நேர்முகப்பரீட்சைக்கு மாவட்டச் செயலகத்துக்கு வருமாறு ஒவ்வொரு பட்டதாரிக்கும் உதவி மாவட்டச்செயலரால் கையொப்பமிட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நேர்முகப்பரீட்சைக்காக மாவட்ட செயலகத்துக்கு வந்தபோது விளம்பரப்பலகையில் நேர்முகத் தேர்வுக்கான திகதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து 186 பட்டதாரிகளும் மாவட்டச் செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பட்டதாரிகள் சங்கத் தலைவர் உ.உதயகாந் தெரிவித்தார்.

வேலை கிடைக்கும் வரை போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ச)

# சமூகச் சீரழிவுகள் கிழக்கில் அதிகரிப்பு

## அரச அதிபர் சாள்ஸ் கவலை

மட்டக்களப்பு,ஏப்.30

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு சமூகச் சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன என்று மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் நிதிக்குரிய ஆவணங்கள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மதுபாவனை மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு, பாடசாலை செல்வதில் மாணவர்கள் ஆர்வம் காட்டாமை, சிறுவயது திருமணம், இளவயதுக் கர்ப்பம் எனப் பல்வேறு சமூகச் சீரழிவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றன.

கடந்த 2 வருட கால இடைவெளிக்குள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல நகரங்களை ஒன்றிணைக்கும் 3 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதில் படுவான்கரையையும் எழுவான்கரையையும்இணைக்கும் பாலமான மண்முனைப் பாலம் அண்மையில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப் பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைகளுக்காக 618 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 2,500 வீடுகள் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன.



அரச அதிபர் சாள்ஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள இடரைத் தடுப்பதற்காக உலக வங்கியின் நிதி உதவியுடன் அரசால் 800 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அணைக் கட்டுக்கள், நீர்ப்பாசனத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற்ற தேசத்தின் மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் 1,300 மில்லியன் ரூபா நிதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம் ஏனைய மாவட்டங்களை விடவும் அபிவிருத்தி கண்டுவருவதை மட்டக்களப்புக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சமூகச் சீரழிவுகளும் இடம்பெறுகின்றன.

சமூகச் சீரழிவுகளை எதிர்காலத்தில்இல்லாமல்செய்ய அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ச)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 31.03.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்
செல்வத்துரை யோகராசா
அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (30.04.2014) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
செல்வத்துரை யோகராசா

இல.38, சங்கிலியன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


# தொற்றா நோய்களால் உயிரிழப்பு அதிகம்

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

அட்டாளைச்சேனை,ஏப்.30

கல்வி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்கப்பட்டு வரும் முக்கியத்துவம் விளையாட்டுத் துறைக்கு வழங்கப் படுவதில்லை. அதனால் நாட்டில் 70 வீதமான உயிரிழப்புக்கள் தொற்றா நோய் காரணமாக ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.

சுகாதாரப் பழக்கவழக்கமுள்ள நல்ல ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதன் மூலம் நாட்டில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். தற்போது உடற்பயிற்சி, விளையாட்டுக்கள் ஆகியவற்றில் நாட்டம் கொள்ளாமையால் அதிகளவான மக்கள்நோயாளர்களாக காணப்படுகின்றனர். அதனால் அதிகளவான பணம்வைத்திய சிகிச்சைகளுக்குச் செலவாகின்றது என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாண சபையால் விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
செல்வரத்தினம் சிவபாலன்

தோற்றம் 24 ★ 09 ★ 1931
மறைவு 30 ★ 04 ★ 2013

எமது அரும் துணைவனாய், தந்தையாய், ஆசிரியனாய், வழிகாட்டியாய், நண்பனாய், ஒரு நல்ல மனிதனாய், ஆன்மபலம் தந்த காவலனாய் வாழ்ந்து எம் உயிருடன் கலந்து இன்றும் எம்மைவழிநடத்திக் கொண்டிருக்கும் அமரர் செல்வரத்தினம் சிவபாலன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினத்தில் அவரின் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்.

'சிவாலயம்'
உடும்பிராய் தெற்கு, உடும்பிராய்.

குடும்பத்தினர்.

# தமிழர்களின் அரசியல் பலத்தை எடுத்துக்காட்ட அணி திரளுங்கள்

## மனோ கணேசன் அழைப்பு

கொழும்பு,ஏப்.30

நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள மே தின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் தமிழ்மக்கள் அணிதிரண்டு, தமிழின ஜனநாயக அரசியல் பலத்தை எடுத்துக்காட்ட வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ள கட்சியின் மே தின நிகழ்வுகள் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த மேல் மாகாண சபைத் தேர்தலில் எமது சொந்தச் சின்னத்தில் நாம் தனித்துவமாக பெற்றுக் கொண்ட 51,000 வாக்கு சாதனைக்கு அணி சேர்க்கும் முகமாக, ஜனநாயக மக்கள் முன்னணியின் மேதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் மக்கள் அணிதிரண்டு வந்து கலந்துகொள்ள வேண்டும்.

அதன் மூலம் தலை நகரில் எங்கள் தமிழின ஜனநாயக அரசியல் பலத்தை எடுத்துக் காட்ட வேண்டும்.

அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவது, மலையக மக்களின் காணி-வீட்டுரிமை, உழைக்கும் மக்களின் உழைப்புக்கேற்ற ஊதியம், இன - மதவாதங்களை எதிர்ப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாம் ஒன்று சேர்ந்து குரல் எழுப்பி தலைநகரை அதிர வைக்க வேண்டும்.

நாளை வியாழக்கிழமை நடைபெறும் மே தின நிகழ்வுகள் பிற்பகல் 12.30 மணிக்கு ஜிந்துப்பிட்டி வீதி முருகன் ஆலயத்துக்கு எதிரிலிருந்து ஊர்வலத்துடன் ஆரம்பமாகவுள்ளது.



மனோ கணேசன்

ஜிந்துப்பிட்டி வீதியிலிருந்து ஆம்பமாகும் ஊர்வலம் கன்னாரத் தெரு, ஆண்டிவால் தெரு, கதிரேசன் தெரு, வரகா சந்தி, அந்தோனியார் வீதி, ஜம்பட்டா வீதி, சங்கமித்தை வீதி, புதுச் செட்டித் தெரு, விவேகானந்தா வீதி, சென்ட்ரல் வீதி, ஆட்டுப்பட்டித் தெரு வழியாக சென்று மீண்டும் ஜிந்துப்பிட்டி வீதி முருகன் ஆலய எதிரில் அமைந்துள்ள மைதானத்தை அடையும். இந்த மைதானத்தில் மாலை 4 மணிக்கு மேதின எழுச்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாத்திரைக்கு சென்றவர் சாவு

கொழும்பு,ஏப்.30

சிவனொளிபாதமலை யாத்திரையில் ஈடுபட்டிருந்த பக்தர்கள் சிலர் வழுக்கி விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. சிவனொளி பாதமலைக்குச் செல்லும் வழியிலுள்ள இந்திகட்டுபஹன என்னும் இடத்தில் வைத்தே இந்த பக்தர்கள் வழுக்கி விழுந்துள்ளனர் என்று பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவத்தில் அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார். காயமடைந்த இருவரும் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# 470 பேருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.30

நிர்வாக சேவையைச் சேர்ந்த 470 பேருக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்று அரச சேவைகள் தொழிலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளினால் இலங்கைக்கு வழங்கப்படும் அதிகளவான புலமைப் பரிசில்களை இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களின் வினைத்திறன் இன்மையினால் ஆண்டுதோறும் வெளிநாடுகளினால் வழங்கப்படும் 30 வீதமான புலமைப் பரிசில்கள் விரயமாகின்றன என்று இந்த ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

**வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் போதும் நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்**

வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் போதும் நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இந்த ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது. (ச)



மதப்பிணக்குகளைக் கையாளும் விசேட பொலிஸ் குழுவின் பணிகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிரதமர் தி.மு.ஜயரட்னவால் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச)

# மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொலிஸ் பிரிவு தேவையில்லை

## பொன்சேகா, விஜித ஹேரத் எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.30

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த தனியாக பொலிஸ் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏதேனும் அமைப்பு அல்லது இயக்கங்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாட்டில் சட்டங்கள் காணப்படுகின்றன.

பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க பொலிஸாருக்கு அதிகாரமுண்டு.

ஏதேனும் ஒரு சம்பவம் இடம் பெறும்போது அதற்கு தீர்வு காண அரசியல் நோக்கத்துடன் பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டால், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

ஒவ்வொரு சேனாக்களையும் பாதுகாப்பதற்காகப் பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டால் அதில் பயனில்லை. அதன் மூலம் மத நல்லிணக்கம் ஒரு போதும் ஏற்படப் போவதில்லை.

நாட்டில் தற்போது உள்ள சட்டங்களைப் பொலிஸார் உரிய முறையில் நடைமுறைப்படுத்தினாலேயே பிரச்சினைகள் ஏற்படுவதனைத் தடுக்க முடியும்- என்றார்.



சரத் பொன்சேகா



விஜித ஹேரத்

**பொது பலசேனாக்களைப் பாதுகாப்பதற்காகப் பொலிஸ் பிரிவு உருவாக்கப்படுவதால் பயனில்லை. அதன் மூலம் மத நல்லிணக்கம் ஒரு போதும் ஏற்படாது.**

இதேவேளை மத செயற்பாடுகள் குறித்த பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டதனை ஒரு நகைச்சுவையாகவே நோக்குகிறது என்று ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

ஒரு புறத்தில் அரசு உத்தியோகப் பற்றற்ற பொலிஸாருக்கு அதிகாரங்களையும் அனுசரணையையும் வழங்கி வருகின்றது என்று ஜே.வி.பி. பரப்புரைச் செயலர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அதன் காரணமாகவே உயர் பொலிஸ்அதிகாரிகள்வேடிக்கை பார்க்கும்போதே உத்தியோகப் பற்றற்ற பொலிஸார் சண்டித்தனம் காட்டுகின்றனர் என்று அவர் கூறினார்.

கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்று அவர் தெரிவித்தார். இந்த நிலையில் தனியான பொலிஸ் பிரிவு உருவாக்கி மத செயற்பாடுகளைக் கண்காணிப்பது நகைப்புக்குரியது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தபால் கட்டணங்கள் விரைவில் திருத்தம்

கொழும்பு,ஏப்.30

அடுத்த மாதத்துக்குள் தபால் கட்டணங்களில் திருத்தம் செய்யப்படவுள்ளது என்று தபால் மா அதிபர் ரோஹண அபேரட்ன தெரிவித்தார்.

தபால் கட்டணத் திருத்தம் குறித்து ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னர் புதிய தபால் கட்டணங்கள் குறித்து அறிவிப்புவெளியிடப்படும்என்று அவர் கூறினார். (ச)

# மாநாட்டுக்கு இணையாக கலாசாரக் கண்காட்சிகள்

## 7 முதல் தொடர்ந்து 3 தினங்க்ள்

கொழும்பு,ஏப்.30

உலக இளைஞர் மாநாட்டுக்கு இணையாக கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்று நாள்கள் கலாசார கண்காட்சிகள் நடத்தப்படவுள்ளன என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கண்காட்சிகள் எதிர்வரும் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணியிலிருந்து இரவு 10 மணி வரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை உலக இளைஞர் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கு இணையாகவே இந்தக் கண்காட்சிகள் நடைபெறவுள்ளன. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வரும் வெளிநாட்டு இளைஞர், யுவதிகள் இலங்கையிலுள்ள கலாசார பண்பாடுகள், கலை நிபுணத்துவங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் உலக இளைஞர் மாநாட்டின் முக்கியத்துவத்தை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்ல வைப்பதை நோக்காகக் கொண்டே இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேசிய நல்லிணக்கத்துக்கு உதவ வேண்டும் தேசிய கீதம்

தேசிய கீதம் குறித்த சர்ச்சை மீண்டும் ஆரம்ப மாகியிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் குறிப்பாக தமிழ் மக்களும் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட வேண்டும் என்று எம்மக்கள் விரும்புவதில் தவறு ஒன்றும் இல்லை.

இன்று நேற்று அல்ல டிஎஸ்சேனநாயக்கா காலத்திலிருந்தே தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் தமிழில் தேசிய கீதம் பாடும் மரபு பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

போர் நடைபெற்ற மற்றும் இயக்கங்கள் தலை தூக்கியிருந்த காலத்தில் தேசிய கீதம் என்பது கைவிடப் பட்டிருந்த காலம் ஒன்றிருந்தது. தொடர்ந்து வந்த இராணுவ கெடுபிடிகளின் காரணமாக அரச வைபவங்களில் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. போர் ஓய்ந்த பின்னரும் அந்த நிலைமை நீடிப்பது கவலைக்குரியது.

இலங்கையில் தேசிய கீதமானது சிங்களத்தில் உருவாக்கப்பட்டு இசை அமைக்கப்பட்டிருந்தாலும் அதன் பொருள் பிசகுபடாமலும் இசை பிசிறுபடாமலும் தமிழிலும் பாடப்பட்டு வந்துள்ளது.

இது தமிழ் மக்கள் ஏதோ முரட்டுத்தனமாக தாமே வலிந்து தேசிய கீதத்தை தமிழில் பாட முனைகிறார்கள் என்பது போல் தெற்கில் பரப்புரை செய்யப்பட்டுள்ளது. அது தமிழிலும் பாடப்படுவதற்கு அரசமைப்பிலேயே அதிகாரம் இருப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள். எனவே முன்போலவே தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் சகல நிகழ்வுகளிலும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்று வடக்கிலுள்ள அரச நிறுவனங்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சுற்றறிக்கை அனுப்பவிருப்பதாக வந்துள்ள செய்தி வரவேற்புக்குரியது.

அரச நிகழ்வுகளுக்கு இராணுவ அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் வரும்போது அவர்களுக்காக சிங்களத்தில் தேசிய கீதம் பாட வேண்டும் என்று அதிகாரிகள் கருதுவார்களானால் அல்லது அதில் கலந்து கொள்ளும் தமிழ் அமைச்சர்கள் கருதுவார்களானால் அது அவர்களின் அடிமைப் புத்தியை அல்லது இயலாமையையே எடுத்துக்காட்டும். அரசமைப்பில் உள்ள உரிமையைக் கூட விட்டுக் கொடுத்துவிட்டு ஏமாளிகளாய்த்தான் இவர்கள் தொடர்ந்தும் இருக்கப் போகிறார்களா என்று கேட்க வேண்டியிருக்கிறது.

தேசிய கீதத்தின் இசை வடிவம் சிங்களம்– தமிழ் இரண்டிலும் ஒரே விதமாக அமைந்திருப்பதால் சிங்களவர் சிங்களத்திலும், தமிழர் தமிழிலும் ஏக காலத்தில் பாடுவதில் சங்கடம் இருக்காது. சில பாடசாலைகளில் மற்றும் சில வைபவங்களில் தேசிய கீதம் வாயால் பாடப்பெறாமல் அதன் இசை வடிவம் மட்டுமே ஒலிக்கப்படுவதைப் பார்க்கின்றோம். அந்த இசையில் சிங்களத்திலுள்ள கீதமா அல்லது தமிழில் உள்ள கீதமா இசைக்கப்படுகின்றது என்பதை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அதேவிதமாக ஒரே சமயத்தில் சிங்களம் தெரிந்தவர்கள் சிங்களத்திலும் தமிழ் தெரிந்தவர்கள் தமிழிலும் பாடலாம் என்ற ஒரு முறை வகுக்கப்பெறுமானால் அது நடைமுறையில் வரும்போது தேசிய ஒருமைப்பாட்டுக்கான நல்லிணக்கத்துக்கான ஒருபடி முறையாகவும் அதனை வளர்த்தெடுக்க முடியும். அது மட்டுமல்ல நிகழ்வுகளில் எந்த மொழியில் முதலில் பாட வேண்டும் என்ற பிரச்சினைக்கும் முற்றுப்புள்ளி வைத்ததாக அமையும்.

தேசிய கீதத்தில் வரும் நமோ நமோ என்ற சொற்கள் சிங்களமோ அன்றில் தமிழோ அல்ல. அவை வட மொழிச் சொற்கள். இந்துக்கள் தங்கள் முக்கிய தெய்வங்களை ஆராதிக்கும்போது 'நமோ' என்ற சொல்லையே பாவிக்கிறார்கள். உ–ம் நமோ நாராயணா, ஓம் நமச்சிவாய போன்றவை. நமோ என்பதன் கருத்து வணக்கம் என்பதாக ஜுபிலி தமிழ் பேரகராதி தெரிவிக்கின்றது. அதேபோல் "மாதா" என்பதும் வட மொழிச் சொல்லே. அதனை தாயே என்று தமிழ் தேசிய கீதத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். மாதா என்ற சொல்லை இந்திய தேசிய கீதத்திலும் காணலாம்.

இந்திய தேசிய கீதம் ஒரு சிறுபான்மை மக்களின் வங்காள மொழியில் மகாகவி ரவீந்திரநாத் தாகூரினால் இயற்றப்பட்டது. அந்த நாட்டிலுள்ள 25 க்கும் மேற்பட்ட மாநிலங்களையும், மொழி சார் மக்களையும் அவர்களின் கலை கலாசார விழுமியங்களையும் இணைத்து ஒன்றாக வைத்திருக்கும் சக்தியை அந்தக் கீதம் பெற்றிருப்பது ஆச்சரியமாகும்.

அந்தவிதமான ஓர் உணர்வையும் சக்தியையும் இந்த நாட்டில் ஏற்படுத்துவதாக தேசிய கீதம் அமைய வேண்டும். மக்களின் ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் குலைப்பதற்கு தேசிய கீதம் இடம் தரலாகாது. அதற்கு வழிவகுக்கும் விதத்தில் நாட்டின் தலைவர்கள் செயற்படுவதும் வரவேற்கத்தக்கதல்ல.

## போர் வெற்றி நினைவகங்கள்

# பாதிக்கப்பட்டவர்களின் காயங்களை ஆற்றாது

வன்னியில் இராணுவ வீரர் ஒருவர் ஒரு கையில் ஏ.கே 47 ரகத் துப்பாக்கியுடனும் மறுகையில் இலங்கைத் தேசியக் கொடியுடனும் நிற்பதைச் சித்தரிக்கின்ற வகையில் கல்லால் சிலை செதுக்கப்பட்டுள்ளது. இயந்திரத் துப்பாக்கியில் புறா ஒன்று அமர்ந்துள்ளது.

தமிழ்ப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையிலான போர் மே 2009 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது போர் வெற்றியை நினைவுகூரும் விதமா கவே இது அமைக்கப்பட்டுள்ளது.

போர் வெற்றி நினைவுச் சின்னத்தில் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் வன்னியில் வாழும் பெரும்பான்மை மக்களின் மொழியான தமிழில் எந்தவொரு வாசகமும் எழுதப்படவில்லை.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் தற்போது இங்கு பயணம் செய்யும்போது, பல்வேறு வேறுபாடுகளைக் காணமுடிந்தது. தெற்கு மற்றும் மேற்கில் வாழும் மக்களைப் பொறுத்தளவில் போரின் முடிவென்பது தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான அச்சத்தை நீக்கியுள்ளது. தற்போது இலங்கையின் தென்பகுதி வாழ் பெற்றோர் தமது பிள்ளைகளை முன்னாள் போர் வலயத்துக்குக் கூட்டிச் செல்கின்றனர். இவர்கள் பஸ்களில் பயணம் செய்து இந்த இடங்களைப் பார்வையிடுகின்றனர்.

இலங்கையின் மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் கடந்த சில ஆண்டுகளில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை, போக்குவரத்து, கட்டுமானம் போன்றவை மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கொழும்பில் புதிய சொகுசு விடுதிகள் அமைக்கப்பட்டு இவை தமக்கிடையே போட்டி போடும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால் இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் நாளாந்தம் தமது வாழ்வைக் கழிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இங்கு புதிய வீதிகள், ரயில் பாதைகள், நிர்வாகக் கட்டடங்கள் போன்றவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் புதிய கடைத் தொகுதி ஒன்று மிக விரைவாகக் கட்டப்பட்டுள்ளமை உள்ளடங்கலாக பல்வேறு தனியார் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளச்செப்பனிடப்பட்ட முல்லைத்தீவு, கண்டி வீதிகளில் இலங்கை இராணுவத்தினரின் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிவில் காவற்துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்குப் பதிலாக சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள போர் நினைவகமானது எந்தவொரு வெற்றியையும் மக்கள் மனதில் பதிக்கவில்லை. மாறாக கணவன்மார், பிள்ளைகள் மற்றும் சகோதரர்களை இழந்த மக்களின் கசப்பான தோல்வியாகவே இது காணப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளால் படைக்கு ஆட்சேர்க்கப்பட்டவர்கள், இலங்கை இராணுவத்தின் பாரபட்சமற்ற கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களுக்கு ஆளானவர்கள் எனத் தமது அன்பானவர்களை இழந்து வாழும் மக்களின் கசப்பான தோல்வியாகவே இந்த வெற்றி பார்க்கப்படுவதாக மனித உரிமை அமைப்புக்கள் சாடியுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் வாழும் சமூகங்களுக்கிடையில் பிரிவினையை உண்டாக்கியுள்ளன. பொதுவான மொழிநடையைப் பயன்படுத்துவதற்கான படிமுறையைக் கண்டுபிடிப்பதே வினைத்திறன் மிக்க தொடர்பாடலுக்கான முதலாவது நகர்வாகக் காணப்படுகிறது.

போருக்குப் பின்னரான மீளிணக்கப்பாட்டு முயற்சியில், இந்தப் பொதுவான மொழிநடை என்பது சமூகங்களுக்கிடையிலான பிரிவினையைத் தீர்ப்பதற்கான பாலமாக உருவாக்கப்பட வேண்டும். இதன்மூலம் மக்களுக்கிடையில் நிலவும் விரோத மனப்பாங்கு தீர்க்கப்படும். இலங்கை அமைச்சர்களாலும் சிங்களவர்களாலும் கைக்கொள்ளப்படும் மேற்குலக பன்மைவாதமும் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களால் கைக்கொள்ளப்படும் நவீன காலனித்துவம் என்பதும் போரில் பங்குகொண்ட இருதரப்புக்களாலும் இழைக்கப்பட்ட மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களைத் தீர்த்து ஒரு நிலையான உறுதியான அடித்தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்காது.

மிகத் தீவிரமான கருத்துக்கள் வெற்றி கொள்ளப்பட்டு மீளிணக்கப்பாடு நோக்கி நகர்வதற்கு இலங்கை அரசாங்கமோ அல்லது தமிழ்த் தலைவர்களோ தமது அரசியல் அடையாளங்களைக் கைவிட வேண்டிய தேவையில்லை. ராஜபக்ஷ சகோதரர்கள் பயங்கரவாதத்தை ஒழித்ததன் மூலம் உள்நாட்டில் தமது ஆட்சியைப் பலப்படுத்தியுள்ளதாகப் போர் வெற்றியைக் குறிக்கும் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசு தான் போர் வலயத்தில் பூச்சிய மக்கள் இழப்புக் கொள்கையைப் பயன்படுத்தியதாகவும் இதில் மக்களுக்கு எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை எனவும் அறிவித்த போதிலும் பின்னர் மனிதாபிமான நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கையில் மிகக் குறைந்தளவில் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாகக் கூறியது. சிங்களவர்கள் மத்தியில் ஒரு பலமான தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பெருமைக்குரிய வெற்றியாளர், தனது அரசு விட்ட தவறுகளை ஏற்றுக்கொண்டு இதற்குப் பொறுப்பானவர் களைத் தண்டித்திருக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது உறுப்பினர்கள் தமிழ்ப் புலிகளின் வரலாற்றுடன் எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வேதனைகளைக் களைந்தெறிவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையில் விரும்பினால், ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அண்மையில் கூறியதுபோன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் குடும்பங்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயக்கம் காட்டக்கூடாது.

போரின் போது கொல்லப்பட்ட மற்றும் காணாமற் போன அனைத்து மக்களின் நினைவாகவும் கொழும்பில் நினைவாலயம் ஒன்றை அமைத்தது நல்லதொரு தொடக்கமாகும்.

போரில் என்ன நடந்தது என்பது தொடர்பான உண்மையை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளத் தவறக் கூடாது. விளம்பரப் பலகைகளில் புகழுரைத்துள்ளமை போன்று புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற மத்திய அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துவதற்கு இவ்வாறான நினைவகம் ஒன்று தலைநகரான கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் முக்கியமானதாகும். வெவ் வேறு பெயர்களில் ஒரே தெய்வங்களை பௌத்தர்களும் இந்துக்களும் வழி படுகிறார்கள் என அண்மையில் இடம் பெற்ற ஒளிப்படக் கண்காட்சியில் காண்பிக்கப்பட்டமை போன்று, இலங்கையில் பின்பற்றப் படுகின்ற பிரதான நான்கு மதக் கடவுள்களின் சிலைகள் தலைநகர் கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்தில் அமைக்கப்பட முடியும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச்சில் இலங்கை மீது அனைத்துலக சுயாதீன போர்க் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதானது இலங்கையில் திறந்த, வெளிப்படையான, மதிப்புமிக்க அரசியல் விவாதத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதற்கு உதவவேண்டும். இதேபோன்று பல்வேறு சமூகங்களுக்கிடையில் மும்மொழியில் உரையாடக் கூடிய வாய்ப்புக்களை ஊக்குவிப்பதற்கு மிகப்பலமான அனைத்துலக ஆதரவு கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்த அடிப்படை முயற்சிகளின் மூலம், இலங்கை அரசுக்கும் உண்மையைக் கண்டறியும் தென்னாபிரிக்காவின் பொறிமுறைக்கும் இடையில் தொடர்பைப் பேணுவதன் மூலம் அரசின் செல்வாக்குடன் சாத்தியமான சுயாதீன நிறுவகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான வழி பிறக்கவேண்டும்.

இலங்கையில் உறுதியான மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் இடம்பெற வேண்டும் என அந்நாட்டு அரசு மீது அழுத்தம் கொடுப்பதற்கு இந்தியா இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இலங்கையில் அரசியல் அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும் மற்றும் கடந்த ஆண்டுத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்தியா அழுத்தத்தை வழங்க முடியும். இவை யிரண்டும் இந்தியாவின் நீண்ட கால இலக்காகக் காணப்படுகின்றது.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட்டு இலங்கை அரசும் தமிழ்த் தலைவர்களும் இணைந்து செயற்படுவதற்கு மீளிணக்கப்பாட்டு முயற்சிகள் உதவும். அனைத் துலக சமூகத்தின் அழுத்தத்தால் தற் போது இலங்கை அரசு சில பிரச்சி னைகளைத் தீர்க்க முன்வந்துள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பெண் சிங்கள இராணுவச் சிப்பாய்கள் அவர்களது மேலதிகாரிகளால் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள நிலங்களை விடுவிப்பதற்கும் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்களுக்கான மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இவை உள்ளடக்கப்பட்டுள்ளன. மன்னிப்பு மற்றும் விசுவாசம் ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த காலத் தவறுகள் மற்றும் மீறல்கள் ஆராயப்படும் போது மீளிணக்கப்பாடு சாத்தியமாகிறது. போர் வெற்றி நினைவகங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மட்டும் நோக்காகக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூலம் நாட்டில் ஏற்பட்ட வடுக்களை ஆற்ற இயலாது.

*புதினப் பலகைக்காக நித்தியபாரதி.*

# சிறுபான்மைச் சமூகங்களுக்கு தேவைப்படுவது சமவுரிமை என்பதேயாகும்

**தந்தைசெல்வாவின் 37ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு ஆற்றிய உரை**

## ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண

தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகள் என்ன? அவர்கள் எம்மோடு ஒரே பஸ்ஸில் பிரயாணிக்கிறார்கள். ஒரே தேநீர் கோப்பையைத்தானே உபயோகிக்கின்றோம் என்று கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட பரந்த அனுபவம் மிக்க ஒரு சிங்கள துறைசார் நிபுணர் ஒருவர் என்னிடம் கேள்வி எழுப்பினார். அதுதான் பிரச்சினையே! தேநீர்க் கோப்பையைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கும் நீங்கள், அரச அதிகாரத்தைப் பகிரத் தயாராக இல்லை என நான் பதிலளித்தேன். அதற்கு அவரிடமிருந்து மறுபேச்சு எழவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரும் தமிழ் இனத்தின் தேசிய தலைவர் என அழைக்கப்படுபவருமான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்ற நாமத்தைக் கொண்ட தந்தை செல்வாவின் 37ஆவது சிரார்த்ததினம், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு 'தேசியப் பிரச்சினை அனைத்தும் அரச அதிகாரம் பற்றியதே' என்ற தலைப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மகாராணி சட்டத்தரணியும் இலங்கைத் தமிழர்களின் பிரசித்தி பெற்ற தலைவருமான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் 37 ஆவது நினைவு நாளையிட்டு இந்த நினைவுப் பேருரையை ஆற்றுவதற்காக என்னை அழைத்த எஸ்.ஜே.வி. நினைவுச் சபையினருக்கு எனது நன்றிகள்.

தோழர் பேனாட் சொய்ஸாவிற்குப் பின்னர் - சென்ற மாதம்தான் அவரது பிறந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது - செல்வநாயகம் நினைவுப் பேருரையை ஆற்ற அழைக்கப்பட்ட இரண்டாவது சிங்களவர் நான்தான் எனத் தெரிந்து கொண்டேன். தோழர் பேனாட்டைப் பின்பற்றுவதில் மகிழ்ச்சியடையும் அதேவேளை, இரு இனங்களுக்கும் இடையிலான பிரிவினை தொடர்வதையிட்டு வருந்துகிறேன். அந்தப் பிரிவினையை நாம் இல்லாதாக்கி இணைந்து கொள்ள வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்கள் பரந்து வாழும் நாடுகளில் தேவைப்படுவது சமவுரிமை என்பதேயாகும். அப்படியான சமூகங்கள் தமது காத்திரங்களுக்கு அமைவாக சட்ட வாக்கத்திலும் நிறைவேற்று அதிகாரத்திலும் உரிய பிரதிநிதித்துவத்தைக் கேட்டு நிற்கின்றன. அத்துடன் சமவுரிமைக்கான அரசமைப்பு உத்தரவாதங்களையும் பாரபட்ச மற்ற நிலைப்பாட்டையும் வற்புறுத்துகின்றன. வேலைவாய்ப்பில் தமக்குரித்தான பங்கினை எதிர்பார்க்கின்றன. அவர்கள் தமது மொழியை உபயோகிக்கும் உரிமையை வேண்டி நிற்கின்றனர்.

இப்படியான ஒரு சமூகம் புவியியல் ரீதியில் ஓரிடத்தில் செறிந்து வாழும்போது இப்பிரச்சினை முற்றிலும் வேறுபட்ட தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

ஒன்றாகச் சேர்ந்து வாழும்போது, அதில் ஒரு சமூகம் தனது கலாசாரத்தை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தி, அடையாளப்படுத்திக் காண்பிக்க விரும்புகிறது. அந்த வகையில் சுயாட்சி முறையாக அரச அதிகாரத்தில் ஒரு பங்கினை வற்புறுத்துகிறது. 'சேர்ந்து இருத்தல்' என்ற விடயம்தான் இந்தக் கோரிக்கையின் நடத்தையை மாற்றுகிறது.

அந்தக் கோரிக்கை எப்போதும் குறைகளுடன் தொடர்புபட்டதல்ல. சொல்லப் போனால் இழப்புக்களின் துயரங்கள் காணப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது முக்கியமற்றதாகக் காணப்படுகிறது. கலாசாரத் தனித்துவம் என்பதிலிருந்தே கோரிக்கை பிறக்கின்றது. எனினும், குறைகள் காணப்படுமிடத்து, கோரிக்கை மேலும் வலுப்படுத்தப்படுகின்றது.

ஐக்கிய இராச்சியத்தில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. என்றாலும் ஒற்றையாட்சி நடைமுறை உள்ளது. உயர் நீதிமன்றத்தில் நீதிபதி பார்னோஸ் ஹேல், 'அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட சபை தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துக்குள் நின்று செயற்படும் வரை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபையாக மதிக்கப்பட வேண்டும்.சாதாரண பொது நிறுவனம் மாதிரியல்ல' என்று கூறினார்.

சமஷ்டி, மத்திக்கும் அதன் கீழ் அடங்கியுள்ள பகுதிகளுக்குமான உறவைச் சீர்படுத்தும் அரசமைப்பைக் கொண்டிருப்பதால் ஒரு வகையில் ஐக்கிய இராச்சியம் சமஷ்டி நாடாகியுள்ளது.

இதனால் ஸ்பெயின், பெல்ஜியம், ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் தமது இன ரீதியான அரசியல் பிரச்சினைகளை பூரணமாகத் தீர்த்துள்ளன எனக் கூறுவதற்கில்லை. புதிது புதிதாகப் பிரச்சினைகள் தோன்றத்தான் செய்கின்றன. அவற்றைச் சமாளிக்கத்தான் வேண்டும். கற்றலோனியா, பிளாண்டாஸ் மற்றும் ஸ்கொட்லாந்தில் பிரிவினைவாதக் கோரிக்கைகள் இன்றுமுள்ளன. அவை அரசற்ற தேசங்களுக்கு நல்ல உதாரணங்களாகக் காணப்படுகின்றன.

**இலங்கை : அரச அதிகாரம் பற்றிய படிப்பினை**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளில் தமிழர்களின் கோரிக்கையானது தேசிய மட்டத்தில் அதிகாரப் பகிர்வு என்பதாக இருந்தது. அப்போது நாடு (சிலோன்) பிரித்தானிய காலனியாக இருந்தது. முன்னரே தீர்மானிக்கப்பட்ட விகிதாசாரத்தின் அடிப்படையில் சட்ட சபையில் தங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் ஒரு முறைமையை தமிழர்கள் முன்வைத்தனர்.

அரைவாசி பிரதிநிதித்துவம் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் எஞ்சிய அரைவாசிப் பிரதிநிதித்துவம் ஏனைய சமூகங்களுக்கும் என்ற - 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற கோரிக்கை - 1930 களில் எழுந்தது. எனினும், இது ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படைக்கு மாறானது.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்புக்கான கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்தவர்கள் தமிழர்கள் அல்லர். பின்னாள்களில் சிங்கள சார்பு இலங்கை சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்துப் பிரதமராக வந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காதான் அதை முதலில் பிரேரித்தார்.

'சிலோன் மோர்னிங் லீடர்' பத்திரிகையில் ஆறு கட்டுரைகளை எழுதியும், யாழ்ப்பாணத்தில் பொது உரையில் அது பற்றிக் குறிப்பிட்டும் அவ்விட யத்தை அவர் முன்வைத்தார். இவை எல்லாம் 1926 இல் நடந்தது. டொனமூர் ஆணைக்குழு நாட்டுக்கு விஜயம் செய்தபோது கண்டியச் சிங்களவர்கள்தான் தாங்கள் தனித் தேசத்தவர்கள் என்று குறிப்பிட்டு சமஷ்டி ஏற்பாட்டை முன்வைத்தார்கள்.

வடக்குத் தமிழர்கள் தேர்தலைப் பகிஷ்கரித்தனர். தமிழர்கள் பங்குபற்றிய 1936 தேர்தலின் பின்னரான அரசவையில் இடம்பெற்றிருந்த சிங்களப் பெரும்பான்மையினர். (இடதுசாரிப் போக்குடைய சமசமாஜக் கட்சியின் என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா போன்ற ஒரு சிலரைத் தவிர்த்து) நிறைவேற்றுக் குழுக்களின் தலைவர்கள் அனைவரும் சிங்களவர்களாக வருவதை உறுதிப்படுத்தும் விதத்தில் அதற்கான தேர்தலை தந்திரமாக்கிக் கொண்டனர்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் அரச அதிகாரத்தை யார் தக்கவைத்துக் கொள்ளப் போகின்றார்கள் என்பதைத் தமிழர்கள் தெரிந்துகொண்ட முதல் படிப்பினையாக இது பெரும்பாலும் அமைந்தது. இந்த அனுபவம், பிரதிநிதித்துவ உத்தரவாதத்தைக் கோரும் திசையை நோக்கித் தமிழர்களை உந்தியது.

தனியான அரசு ஒன்றை உருவாக்கும் உரிமை உட்பட்ட சுயநிர்ணய உரிமையுடன் தனியான தேசத்தவர்களாகத் தமிழர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை முதன் முதலில் முன் வைத்தது ஒரு தமிழ்க் கட்சியல்ல. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிதான். தானும் ஓர் அங்கமாக இருந்த இலங்கை தேசிய காங்கிரஸிடம் தனது கட்சியின் சார்பில் 1944 இல் தான் சமர்ப்பித்த மகஜரில் 'சமஷ்டி அரசமைப்பு' குறித்து அது பிரஸ்தாபித்திருந்தது. எனினும் உத்தேச சமஷ்டிக் கட்டமைப்புப் பற்றிய விவரம் எதுவும் அதில் இடம்பெற்றிருக்கவில்லை.

அரசமைப்பு சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்காக பிரிட்டிஷ் அரசினால் நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு 1944 இல் சுயாட்சி பற்றியோ அல்லது எஞ்சியோரின் பிரதிநிதித்துவம் பற்றிய ஒரு முறைமை குறித்தோ எந்தப் பரிந்துரையையும் செய்யவில்லை.

1947 இல் சுதந்திரத்துக்கு சில மாதங்களுக்கு முன்னர், அப்போது பிரிட்டிஷாரால் வழங்கப்பட்டிருந்த சோல்பரி அரசமைப்புக்குக்கீழ், நடத்தப்பட்ட தேர்தலின் பின்னர், அச்சமயம் இருந்த தமிழர்களின் ஒரேயொரு கட்சியான தமிழ்க் காங்கிரஸ், பழைமைவாத ஐக்கிய தேசி யக் கட்சியுடன் கூட்டரசு ஒன்றில் இணைந்தது.

1949 டிசெம்பர் 18 ஆம் திகதி சமஷ்டிக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்ட உரையில் செல்வநாயகம் பின்வருமாறு கூறினார்.

இதுதான் நாங்கள் கேட்கும் தீர்வு: தமிழ் பேசும் சுயாட்சி மாகாண அலகையும் சிங்கள சுயாட்சி மாகாண அலகையும் உள்ளடக்கி இரண்டுக் கும் பொதுவான மத்திய அரசுக்கு வழிசெய்யும் சமஷ்டி யாப்பு ஒன்றை இலங்கைக்குக் கொண்டு வரவேண்டும். சிறிய தமிழ் பேசும் தேசம் அழிந்து அல்லது பெரிய தேசத்தால் சிதைக்கப்பட்டுப் போவ தைத் தவிர்ப்பதற்கான ஆகக் குறைந்த ஏற்பாடாக இதுவே அமைய முடியும்.

அதனால் எவருக்கும் - குறிப்பாக சிங்களவர்களுக்கும் கூட - அநீதி இழைக்கப்படமாட்டாது. ஒரு மனிதனின் ஆளுமையின் பூரண விருத்திக்கு அவன் தான் வாழும் நாடு தன்னுடையது என்றும், நாட்டின் அரசு தனதே என்றும் உணர்ந்து கொள்வது அவசியம். இலங்கையின் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த உணர்வு இன்று இல்லை. தங்களின் பிரதேசத்தை தாங்களே ஆளும் உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு அந்த அரசு தமக்குச் சொந்தமானது என அவர்கள் முழுமையாக உணர வேண்டும். முஸ்லிம்கள் தாம் வாழும் பகுதிகள் தமிழ் பேசும் மாகாணத்துடனா அல்லது சிங்களம் பேசும் மாகாணத்துடனா இணைக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அவர்களுக்கு பூரண சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

1952 இல் தொடர்ந்த தேர்தல்களில் இரண்டு ஆசனங்களில் மட்டுமே சமஷ்டிக் கட்சியினால் வெற்றி பெறமுடிந்தது. செல்வநாயகம் தாமே காங்கேசன்துறையில் தோல்வியடைந்தார். தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளரிடம் அல்ல, ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரிடம். நாற்பதுகளில் கிடைத்த அனுபவங்கள் இருந்த போதிலும் வடக்கு, கிழக்கிலிருந்த தமிழர்கள் தீர்க்கமான முறையில் சமஷ்டி முறையை நிராகரித்து, கொழும்புக்கு மீண்டும் சென்று ஐ.தே.கட்சியுடன் அதிகாரத்தைப் பகிர்வதற் கான ஆணையை தமிழ்க் காங்கிரஸுக்கு வழங்கினர்.

1955 எல்லாவற்றையும் மாற்றியமைத்து விட்டது. தெற்கின் இரு பிரதான கட்சிகளான ஐ.தே.க. மற்றும் சுதந்திரக் கட்சி என்பன ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக வேண்டும் என்றன. மற்றொரு பொதுத் தேர்தல் அண்மித்த வேளையில் இரு கட்சிகளும் தனிச் சிங்களம் எனத் தமது நிலையை மாற்றிக் கொண்டன. இது சமஷ்டிக் கட்சிக்கான ஆதரவை மேம்படுத்தியதுடன் 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரிகளின் கூட்டணியுடன் இலங்கை சுதந்திரக் கட்சி தெற்கில் அமோக வெற்றி பெற, சமஷ்டிக் கட்சி வடக்கு, கிழக்கில் அமோக வெற்றி பெற்றது. அம்முறை தமிழ்க் காங்கிரஸ் இரண்டு இடங்கள் மட்டுமே பெற்று அவமானப்பட நேரிட்டது. இந்தத் தோல்வியிலிருந்து அது மீளவேயில்லை.

1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக்கப்பட்டது. தமிழர்களும் இடதுசாரிகளும் அதனை எதிர்த்து நிற்க, டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா தீர்க்கதரிசனமாக 'இருமொழிகள் - ஒரு தேசம்; ஒரு மொழி - இரு தேசங்கள்' என முழங்கினார். அந்த எச்சரிக்கை செவி மடுக்கப்படவில்லை. பெரும்பான்மையினர் மீண்டும் அரச அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதைக் காட்டினார்கள். முரண்பாடு முடுக்கி விடப்பட்டது.

வடமாகாணம் ஒரு பிராந்தியத்தை உருவாக்கும் அதேசமயம் கிழக்கு மாகாணம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்தியமாக வகுக்கப்படவும், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பிராந்தியங்கள் மாகாண எல்லைகளைத் தாண்டி ஒன்றுபட வாய்ப்பளிக்கவுமான ஏற்பாட்டையும் அது கொண்டிருந்தது. சில குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றம் தனது அதிகாரத்தை அந்தப் பிராந்தியங்களுக்கு ஒப்படைக்கவும் வழிசெய்யப்பட்டது. ஆனால் பொலிஸ் அதிகாரம் அதில் அடங்கவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தம் பிரபலமடைந்தது. பலரும் அறிந்து கொண்டபோது கடும்போக்கு பௌத்தபிக்குகளும், ஐ.தேகவும் மிக மூர்க்கமாக அதனை எதிர்த்து, பிரதமரை அதைக் கிழித்தெறிவதற்கு நெருக்குவாரப் படுத்தினர். நிலைமை மோசமடைந்து உச்சக்கட்டமாக 1958 இனக் கலவரம் வெடித்தது. இரண்டு சமூகங்களும் மேலும் தூர விலகிச் சென்றன.

1965 ஆம் ஆண்டுத் தேர்தலை அடுத்து, தமிழ்க் கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிரும் நிலைக்கு ஐ.தே.க.தள்ளப்பட்டது. பிரதமரான டட்லி சேனநாயக்கா செல்வநாயகத்தோடு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார் (டட்லி - செல்வா ஒப்பந்தம்). மாவட்ட சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைப் பகிர்வதிலும் தமிழ் மொழிப் பிரயோகத்தில் சில விட்டுக் கொடுப்புக்களை வழங்கவும் சேனநாயக்கா முன்வந்தார்.

குடியேற்றம் தொடர்பான விடயத்தில், வடக்கு, கிழக்கில் இனி மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களில் இரண்டு மாகாணங்களிலும் உள்ள நிலமற்றவர்களுக்கு முன்னுரிமையும், அதைத் தொடர்ந்து இரண்டு மாகாணங்களிலும் உள்ள தமிழர்களுக்கும், அதன்பின் ஏனைய மாகாணத்தவர்களுக்கும் என தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கும் ஏற்பாட்டுக்கு அவர் இணங்கினார். 1968 இல் மாவட்ட சபைகளுக்கான வெள்ளை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தன் பங்குக்கு அதனை எதிர்க்க, அக்கட்சியின் கூட்டணிப் பங்காளிகளான இடதுசாரிகளும் அதனுடன் இணைந்து கொண்டனர். எதிர்ப்புக் காரணமாக அறிக்கை வாபஸ் பெறப்பட, சமஷ்டிக் கட்சியும் விரைவில் அரசிலிருந்து வெளியேறியது.

இந்தப் பின்னடைவுகளுக்கு மத்தியிலும், பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தங்களின் தோல்வியின் பின்னரும் கூட, தனிநாடு பற்றிய தீர்க்கமான பேச்சு ஏதும் எழவேயில்லை. கடைசியில் 1970 இல், சமஷ்டிக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், நாட்டைக் கூறுபோட விரும்பும் வேட்பாளர்களுக்கு எதிராக வாக்களிக்கும்படி தமிழ் மக்களைக் கோரியது. இன ரீதியாக சமாதானத்தை எட்டுவதற்கு மட்டும்தான் சீர்திருத்தம் அவசியம் என்பதல்ல. அரசமைப்பின் மேன்மை, உரிமைச் சட்டங்கள், தேர்தல் சீர்திருத்தம், சுயாதீனமான நீதித்துறை, சட்டத்தின் ஆட்சியை மீள ஏற்படுத்துதல், உயர் பதவிகளுக்கான நியமனங்கள் மற்றும் சுயாதீனமான நிறுவனங்கள் விடயத்தில் தேசிய இணக்கப்பாடு ஆகிய எல்லாவற்றிலும் அது கவனிக்கப்பட வேண்டும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: கடினமான காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். மனத் தைரியம் அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.



**இடபம்**: பணியாள்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது.



**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.



**கடகம்**: நீண்ட நாள்களாக தடைப்பட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும்.



**சிங்கம்**: தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும்.



**கன்னி**: குடும்பத்துக்கு தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் கௌரவம் அந்தஸ்து உயரும். துக்கமும், துன்பமும் நீங்கும்.



**துலாம்**: தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். திறமை வெளிப்படும். பல வகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.



**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பதன் மூலம் வீண்பழி ஏற்படாமல் தடுக்கப்படும். அனுபவபூர்வமான அறிவுதிறன் கூடும்.



**தனுசு**: குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். மற்றவர்களின் உதவி கிடைப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.



**மகரம்**: முன்னேற்றம் காண அனுபவபூர்வமான அறிவு கைகொடுக்கும். வீண் அலைச்சல் குறையும். காரியத் தடை நீங்கும். மனம் நிலை கொள்ளாமல் தவிக்கும் நிலை வரலாம். கௌரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும்.



**கும்பம்**: தொழில் கூட்டாளிகளுடன் அனுசரித்துச் செல்வது நன்மைதரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளைக் கவனிப்பது நல்லது. வீண் அலைச்சலும் கூடுதல் உழைப்பும் இருக்கும்.



**மீனம்**: குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு அதனால் நிம்மதி குறையலாம். கௌரவம் அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. மனத் தைரியம் அதிகரிக்கும். சகல காரியங்களும் சாதகமாக நடந்து முடியும்.

## நாளை

**சித்திரை-18 வியாழக்கிழமை | 01.05.2014**

திதி: துதியை பி.ப.12.06 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப.10.38 வரை

சுபநேரம்: 07.27-08.57 வரை
இராகுகாலம்: 01.27-02.57 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து... கர்ம யோகம்



தூல, சூட்சுமப் பொருள்களிலிருந்து ஆன்மாவைப் பிரித்து நிறுத்துவதே இலட்சியம். இது நிறைவேறி விட்டால், தான் என்றும் தனியாகவே இருந்ததை ஆன்மா அறிந்துகொள்ளும் தன்னை மகிழ்விக்க வேறு யாரும் தேவையில்லை என்பதையும் அது உணர்ந்து கொள்ளும். நமக்கு மகிழ்ச்சி அளிப்பதற்கு வேறு யாரையாவது எதிர்பார்க்கும் வரை நாம் அடிமைகளே. தான் சுதந்திரமானது என்பதையும், தனது நிறைவுக்கு எதுவும் தேவையில்லை என்பதையும், கட்டுப்பட்ட இந்த நிலை தனக்கு அவசியமில்லை என்பதையும் ஆன்மா என்று அறிகிறதோ, அன்றே விடுதலை அல்லது 'கைவல்யம்' பெற்று விடுகிறது.

மனிதர்கள் பணத்தைத் தேடி அதன் பின்னே ஓடுகிறார்கள், அதற்காகச் சகோதரர்களை வஞ்சிப்பதற்கும் தயங்குவதில்லை. இவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டால், விரும்பினால் பல்லாயிரம் ரூபாய்களைச் சம்பாதிக்கும் அளவுக்குச் சில ஆண்டுகளில், இவர்களது ஒழுக்கம் பெரிதும் முன்னேறி விடும். அந்த நிலையில் இவர்கள் சங்கல்பத்தால் உலகையே அடக்கி ஆள இயலும். ஆனால், நாம் அறிவிலிகளாகவே இருக்கிறோம்.

ஒருவன் தன் பிழைகளை உலகறியப் பேசுவதால் என்ன பயன்? அதனால் அந்தப் பிழைகளைப் போக்கிவிட முடியாது. வினைப்பயனை அனுபவித்தே தீர வேண்டும். இதனால், ஒவ்வொருவரும் முயன்று நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். அறிவும் ஆற்றலும் மிக்கவர்களிடம் தான் உலகம் இரக்கம் காட்டுகிறது. மக்கள் சமூகத்துக்கும் இயற்கைக்கும் செய்யப்பட்ட சேவைகள் மட்டுமே எந்த வகையிலும் செய்பவனைக் கட்டுப்படுத்தாதவை.


எந்த வகைக் கடமையையும் அலட்சியமாக நினைக்கக் கூடாது. தாழ்ந்த வேலை செய்வதால் ஒருவன் தாழ்ந்தவனாகவோ, உயர்ந்த வேலை செய்வதால் ஒருவன் உயர்ந்தவனாகவோ ஆகிவிடமாட்டான். செயலின் சிறுமை பெருமைகளால் ஒருவனைப் பற்றித் தீர்மானிக்கக் கூடாது; அந்தச் செயல்களை அவன் எவ்வாறு செய்கிறான் என்பதைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். செய்யும் முறையும் திறமையுமே ஒருவனைக் கணக்கிட உதவுபவை. தொழிலைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நாளும் பயனற்றவை பேசும் பேராசிரியரை விட, மிகக் குறைந்த நேரத்தில் உறுதியும் அழகும் வாய்ந்த செருப்பைத்தைக்கும் தொழிலாளியே சிறந்தவன்.

# மூளையின் செயற்பாடுகளை இனிமேல் நிறுத்தலாம்

ஒளி உணர்வுகள் மூலம் நரம்புச் செயற்பாடுகளை நிறுத்தி மூளையின் செயற்பாடுகளை நிறுத்தும் புதிய கண்டுபிடிப்பை விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ளனர்.

ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூத்த விஞ்ஞானியான கார்ல் டீசெரோத் என்பவர் கடந்த 2005 ஆம் ஆண்டு ஒப்டோ ஜெனிடிக்ஸ் என்ற தனது தொழில்நுட்பத்தின் மூலம் ஒளி உணர்வுகளைக் கொண்டு மூளை செல்களின் செயற்பாடுகளை நிறுத்துவது எப்படி என்று கண்டுபிடித்தார்.

இதைஅடிப்படையாகக்கொண்டு உலகில் உள்ள பல ஆராய்ச்சியாளர்கள் மூளை செல்கள், இதயத்தின் செல்கள் மற்றும் ஸ்டெம் செல்கள் குறித்து ஆய்வு செய்து வந்தனர்.



ஒளி உணர் புரதங்களைக் கொண்டு மூளையின் செல்களை அணைக்கும் வகையில் தற்போது முன்னேற்றம் தரும் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர்.

எனினும் ஒளி உணர் புரதங்களைக் கொண்டு செல்களை செயற்படச் செய்வதில் வெற்றி பெற முடிந்ததே தவிர செல்களை நிறுத்தச் செய்யும் முயற்சியில் வெற்றிகிடைக்கவில்லை.

தற்போது டீசெரோத்தின் குழு ஒளி உணர் புரதங்களைக் கொண்டு மூளையின் செல்களை அணைக்கும் வகையில் தற்போது முன்னேற்றம் தரும் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை நிகழ்த்தியுள்ளனர். இந்த புதிய கண்டுபிடிப்பின் மூலம், மூளை சுற்றுகள் எப்படி நடக்கின்றன, சிந்திக்கின்றன மற்றும் எப்படி உணர்ச்சி வசப்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று மனித வளத்துக்கான தேசிய சுகாதார நிறுவனத்தின் தலைவரான தோமஸ் இன்செல் கூறியுள்ளார்.

இந்த புதிய தொழில்நுட்பம் மூளை சம்பந்தமான சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்று கூறப்படுகிறது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 7 | 2 | | 4 | 8 |
| | 7 | | | | 6 | | | 9 |
| 4 | 8 | 9 | | | 1 | | | |
| | | 8 | 4 | | | | 6 | 5 |
| | | | 2 | 8 | 5 | | | |
| 2 | 5 | | | | 9 | 1 | | |
| | | | 1 | | | 6 | 9 | 7 |
| 9 | | | 6 | | | | | |
| 1 | 4 | | 3 | 9 | | | | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 1 | 8 | 5 | 4 | 7 | 9 | 2 |
| 8 | 5 | 2 | 7 | 9 | 1 | 3 | 6 | 4 |
| 9 | 4 | 7 | 2 | 6 | 3 | 8 | 5 | 1 |
| 1 | 6 | 5 | 9 | 3 | 2 | 4 | 8 | 7 |
| 7 | 8 | 4 | 5 | 1 | 6 | 9 | 2 | 3 |
| 2 | 9 | 3 | 4 | 8 | 7 | 6 | 1 | 5 |
| 4 | 7 | 6 | 1 | 2 | 9 | 5 | 3 | 8 |
| 3 | 2 | 8 | 6 | 4 | 5 | 1 | 7 | 9 |
| 5 | 1 | 9 | 3 | 7 | 8 | 2 | 4 | 6 |

# தாண்டிக்குளத்தில் வீடு புகுந்து தங்கச் சங்கிலிகள் அறுப்பு

## தந்தை, மகள் தாக்குதலுக்குள்ளாகி காயம்

வவுனியா. ஏப்.30

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் கடந்த வாரம் இரவு வேளையில் கத்தி, பொல்லுகளுடன் வீடு ஒன்றுக்குள் புகுந்த இருவர் தந்தையையும் மகளையும் தாக்கி விட்டு இரு தங்கச் சங்கிலிகளை அறுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

வீட்டில் கணவன், மனைவி இரு பெண் பிள்ளைகள் இருந்துள்ளனர். இரவு வேளை நாய் தொடர்ச்சியாகக் குரைத்துக் கொண்டிருந்தது. ஆள்களின் நடமாட்டம் குறித்து எதுவும் தெரியவில்லை. ஆனால், திடீரென வீட்டின் பின்புறம் எரிந்து கொண்டிருந்த மின் குமிழ் அடித்து நொறுக்கப்பட்ட சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து வீட்டு முன்புறத்தில் நின்ற தந்தை, மகள் இருவரையும் அங்கு வந்த இனந்தெரியாத இருவர் தாக்கினர். மகள் அணிந்திருந்த சங்கிலியை அறுத்தெடுத்தனர். அங்கு வந்த தாயின் சங்கிலியையும் பறித்தெடுத்தனர். பின்னர் அங்கிருந்து ஓடிவிட்டனர்.

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த தந்தை ப.சிவராசா (வயது - 66), மகள் சி.நிரோசா இருவரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதே வேளை அபகரிக்கப்பட்ட சங்கிலிகளில் ஒன்று மறுநாள் காலை வீட்டின் பின் புறத்தில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-421)



திருநெல்வேலி அருள்மிகு நீலாயதாக்ஷி காயாரோஹண தேவஸ்தான தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக நடைபெற்றது. தேரில் அம்பாள் உலா வந்து அடியார்களுக்கு அருள்காட்சி கொடுத்தார். (ஒ-7)















## தேவை

ஆலயம் ஒன்றிற்கு
பூசகர் தேவை.
தொடர்பு: 077 737 7799 (47464) (12.3.6)

## காணி விற்பனைக்கு

சங்கானை பிளாக்கர் வீதியில் உள்ள 20 பரப்பு மேட்டுக் காணி பனை மரங்களுடன் விற்பனைக் குண்டு. தோட்டம் செய்வதற்கு, அரிசி மில் போடுவதற்கு உகந்தது.
தொடர்பு: 052 225 8433
S.செல்வநாதன்
20, பிரதான வீதி, தலவாக்கலை (47442) (3.6.4)

## கடைகள் வாடகைக்கு

இல.340, கே.கே.எஸ் வீதியில் ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கு அருகில் அமைந்திருக்கும் மேல்மாடியும் கடையும் (12 அடி அகலமும் 20 அடி நீளமும்) அதனை அண்மித்த பகுதியில் மற்றும் 5 கடைகளும் வாடகைக்குள்ளன. (47443) (3.6.4)
தொடர்பு: 077 479 0956, 077 272 5155

## வீட்டுடன் கடை விற்பனைக்கு

கடற்கரை வீதி, குருநகரில் நான்கு புதிய கடையுடன் கூடிய சகல வசதிகளுடனான வீடு உடன் விற்பனைக்குண்டு. (47460) (12.3.6)
தொடர்பு:077 538 6295/077 551 5588.

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் ரவுனில் இருந்து 1½km தூரத்தில் மானிப்பாய் றோட்டில் புதிதாக கட்டிய வீட்டில் கீழ்வீடும் மேல்மாடி வீடும் வாடகைக்குண்டு.
A/C, CAR PARK வசதிகளும் உண்டு.
தொடர்பு: 077 770 7465 (47471)(3.6.4)

## மலிவு

கட்டடப்பொருள்கள்
ஆன்லைன் ஸ்ரோரில்.
077 278 8899 (47472) (3.6.4)
www.ammatraders.com

## தேவை

நெல் கொள்வனவு செய்யப்படும். 20 அந்தர் தராசு உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 772 2215 (47431) (4.3.6)

## வீடு விற்பனைக்கு

கரவெட்டி வடக்கு அந்திரான் முருகன் கோயிலடியிலுள்ள இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள மாடி வீடு சகல வசதிகளுடன் பாதுகாப்பான சூழலில் உடன் விற்பனைக்குண்டு. (46517) (46.6.3)
தொடர்பு: 078 327 2670,077 187 8250

## வேலை ஆள்கள் தேவை

* எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளரும், பொதி செய்யவும் ஆள்கள் தேவை. இலவச தங்குமிடவசதியும், மாத சம்பளமாக ரூபா 19,000 வழங்கப்படும்.
* எமது யாழ்ப்பாண ஸ்தாபனத்திற்கும் விற்பனையாளர் தேவை. மாத சம்பளம் ரூபா 12,000 வழங்கப்படும்.

**வயது 18 லிருந்து 22 வரை.**

தொடர்பு: 11- A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 3857** (47407) (12.3.6)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA
## FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

### Diploma in Marketing Management-2014

Applications are invited from eligible candidates for registration of the above course to be conducted by the Faculty of Management Studies & Commerce.

**Duration of the Course: One year (Weekends)**
**Medium of Instructions : Tamil**
**Admission Requirements: Candidate must posses three passes inG.C.E (A/L) Examination.**
**Fees: Programme Fee will be Rs.29, 000/=**
**Including:**

| | |
|---|---|
| Registration | -1,500.00 |
| Tuition Fees | -22,500.00 |
| Examination Fees | -5,000.00 |
| TOTAL | -29,000.00 |

**Closing Date of Application - 25.05.2014**

**Application Forms**

Application form could be obtained from the Assistant Registrar, Admission Branch on a Payment of Rs.250.00 at the Shroff Counter or at People's Bank-Jaffna University Branch. Duly filled application should be forwarded on or before **25.05.2014** to the **Assistant Registrar, Admission Branch, University of Jaffna.** Please Write **"Application for Diploma in Marketing Management"** on the top left side of the envelop

**Registar**
**University of Jaffna**

(சி/13599)(3.6.4)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதி
## கல்வியியல் முதுமாணி - 2014/15 (அணி XI)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

01. அனுமதிக்குரிய தகைமைகள்:
  ★ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்''

  அத்துடன்

  ★ ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு அனுபவம்.

02. தெரிவு முறைமை:
  எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
  (எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்)

| | | |
|---|---|---|
| கற்கைக் காலம் | : | ஒருவருடம் |
| மொழி மூலம் | : | தமிழ் |
| கற்கைநெறிக் கட்டணம் | : | 75,000/= |
| விண்ணப்பப் படிவக் கட்டணம் | : | 1,000/= |

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தைச் செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப் படிவத்துக்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 × 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விவரங்கள் www.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தளவசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக பிரதியெடுக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/= பெறுமதியான காசுக்கட்டளையை / மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''கல்வியியல் முதுமாணி 2014/15 விண்ணப்பம்''** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 30.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு அனுப்புதல்வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும் சரியாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் மற்றும் விண்ணப்ப முடிவுதிகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
25.04.2014

(சி.13597) (45.6.3)

## அக்கராயன் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## அக்கராயன்குளம்

**பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்**

(கூ.ஊ.ஆ.குழுவின் சுற்றுநிருபம் 66/2006 இன்படி)

பதவி: பொதுமுகாமையாளர்,
பதவிக்குறியீட்டு எண்: 101/06
சம்பளக் குறியீட்டு எண்: 11950 -15300
155×10-180×10

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பள குறியீட்டின் பதவியில் 03 வருங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளக் குறியீட்டின் பதவியில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனங்களில் முகாமைத்துவ தர பதவியில் 08 வருட பணி அனுபவம் இதில் குறைந்தது 02 வருட சிரேஷ்ட முகாமையாளர் தர பதவியில் பணியாற்றிய அனுபவம்.

**அல்லது**

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரச் சான்றிதழ்/ க.பொ.த. (உயர் தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனங்களில் முகாமைத்துவப் பதவியில் 10 வருட அனுபவம் இதில் 02 வருடம் சிரேஷ்ட முகாமையாளர் தர பதவியில் பணியாற்றிய அனுபவம்.

**வயதெல்லை:** 21-45 (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

**பிணைப்பணம்:** சங்கத்தால் கோரப்படும் ரொக்கம், ஆதனப்பிணைசெலுத்தவேண்டும்.
பதவி நிரந்தரமானதும் இரண்டு வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டதுமாகும்.

**நிபந்தனைகள்:**

(அ.) கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது கடமை யாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பிக்கவேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அண்மையில் பெற்றநற்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.விண்ணப்பப்படிவங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர்குழுவுக்கு உரிமையுண்டு

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை சுயமாகத் தயாரித்து **தலைவர், அக்கராயன் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம், அக்கராயன் குளம், கிளிநொச்சி** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் 15.05.2014 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் விண்ணபத்துக்கான பதவியைக் குறிப்பிடல் வேண்டும்.

நெறியாளர் குழு ஆணைப்படி

வே.விஜயரத்தினம்
தலைவர்,
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்குளம், கிளிநொச்சி.

(41252) (45.6.3)

30 APR 2014

## மரண அறிவித்தல்



### திருமதி பொன்னுப்பிள்ளை நவரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியை)

மீசாலை மேற்கு, ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுப்பிள்ளை நவரத்தினம் 27.04.2014 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் நவரத்தினம் (கூட்டுறவு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், சுவர்ணா, SN.ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், வளர்மதியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக இன்று (30.04.2014) புதன்கிழமை மு.ப.10.00 மணி தொடக்கம் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின் பி.ப.04.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக தெஹிவளை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள்.**
87 - 3/4, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
(சி13745)(12)(3.6)

## சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் பேச்சுத்திறன்

### விரைவில் அறிமுகமாகவுள்ளது

வலி. வடக்கு, ஏப்.30

அடுத்தாண்டு முதல் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் ஒரு பகுதியாக பேச்சுத் திறன் அறிமுகம் செய்யப்படவுள்ளது. பேச்சுத் திறனுக்கு 25 புள்ளிகள் வழங்கப்படவுள்ளது. அதற்கு மாணவர்களை தயார்படுத்தும் வகையில் விசேட செயலமர்வுகள் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுடைய அனைத்துப் பாடசாலைகளிலும் இந்தத் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும், ஆங்கில பாட ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்கள், ஆங்கில பாட வளவாளர்கள் மூலம் இந்தச் செயலமர்வை நடை முறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(வ-86)

## வெற்றி அளித்தது 'எஸ்' திட்டம்

வலி.வடக்கு, ஏப்.30

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடந்தாண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இடையே அறிமுகம் செய்யப்பட்ட 'எஸ்' திட்டம் வெற்றியளித்துள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராசா தெரிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் அதிகளவான மாணவர்கள் கடந்தாண்டுகளை விட கணித மற்றும் விஞ்ஞான பாடத்தில் சித்தி அடைந்துள்ளதுடன் பரீட்சை பெறுபேறுகளும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் வட மாகாண மட்டத்தில் 8 ஆம் இடத்தில் இருந்த வலிகாமம் கல்வி வலயம் இம்முறை 2013 ஆம் ஆண்டு பெறுபேற்றின் அடிப்படையில் 6 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (வ-86)

### முச்சக்கரவண்டி குத்தகைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள முச்சக்கரவண்டி நீண்டகால/குறுகிய கால குத்தகைக்கு அல்லது வாடகைக்குண்டு. யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: **071 550 7109**
(47477)(3.6.4)

### அறை வாடகைக்கு

திருநெல்வேலியில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு அறை வாடகைக்கு உண்டு. உடன் தொடர்புகளுக்கு:

**077 051 7494**
(47482)(10.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி செல்லத்துரை



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், இத்தாலி Lecce ஐ வதிவிடமாகவும் கொண்ட தவமணிதேவி செல்லத்துரை 25-04-2014 வெள்ளிக் கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி (பாப்பா- இத்தாலி), ஜெயந்தி (ஜேர்மனி), ஜெயசிறி(சிறி-ஜேர்மனி), ஜெயகாந்தன் (ஜெகன்- சுவிஸ்), ஜெயரூபன் (கோபால்- இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், றோசம்மா, கமலாதேவி, செல்வம், ரஞ்சிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மரட்ணம் (ரவி), சுபேந்திரன், ஜெயானந்தராஜா (ஜெயா), தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (30-04-2014) புதன்கிழமை காலை 9:30 மணியளவில் Cimitero Di Lecce, 73100, Italy எனும் முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
ரவி-(இத்தாலி) +390832387626
ஜெயந்தி-(ஜேர்மனி) +490303744569
சிறி- (ஜேர்மனி) செல்லிடப்பேசி: +493037445698
ஜெகன்-(சுவிற்சர்லாந்து) +41622930139
ஜெயரூபன்- (இத்தாலி) +390832387626 (47225)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்
''ஈஸ்வரி வாசம்''
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்

புதிய மாணவர்களுக்கான
கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்தல்
**2012/2013**

2012/2013 கல்வியாண்டுக்கான புதிய மாணவர்களின்
கல்வி நடவடிக்கைகள் அனைத்தும்
05.05.2014 **திங்கட்கிழமை** அன்று ஆரம்பமாகும்.

**பணிப்பாளர்,**
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு.

**065 222 2663**
(சி1106)(12.3.6)



## நவாலியூர் அருள்மிகு களயோடை கண்ணகிஅம்மன் திருப்பணிச் சபையினரின் அறிவித்தல்

### அம்பாள் அடியார்களே!

கும்பாபிஷேகம் முடிவுற்றபின் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மிகுதி வேலைகள் செய்வதற்கு தங்களால் இயன்ற பொருள், பண உதவிகள் செய்யுமாறும் அத்தோடு ஆலயத்தில் உள்ள பழைய பொருள்கள் ஏலத்தில் விற்கப்படும்.

**11.05.2014 அன்று ஞாயிற்றுக்கிழமை**
ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

சகலரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்வதோடு, இப்பொருள்களை ஆலயத்தில்
**01.05.2014 தொடக்கம் 10.05.2014 வரை**
பார்வையிடலாம் எனத் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.
(சி121101)(12.3.6)

**திருப்பணிச் சபையினர்**
களயோடை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்,நவாலி.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அமைச்சரின் போர்ப் பிரகடனம்

........விவசாயமா. குடிநீரா என்ற பிரச்சினை வரும்போது குடிநீருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அது தவிர்க்கப்படமுடியாது. எனவே யாழ்ப்பாணக் குடிநீர்த் தேவைக்கு இரணைமடு நீர் வழங்கப்படும்போது வரட்சிக் காலங்களில் குளத்து நீரை அதிகமாக எடுக்கவேண்டிவரும். அதன் காரணமாக இரணைமடு நீர்மட்டம் வெகுவாகக் குறைவடையும். இதனால் கிளிநொச்சிக் கிணறுகளில் கூட நீர் வற்றி விடும் அபாயம் தோன்றும். குடிநீர் கூட இல்லாத நிலையில் கிளிநொச்சியின் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிபெயரும் நிலை உருவாகும்.

அதேவேளையில் இந்தியாவின் காவிரி நீர்ப்பிரச்சினை போன்று யாழ்ப்பாண மக்களும். கிளிநொச்சி மக்களும் இரணைமடுவால் முரண்பட்டு. மோதும் நிலையும் உருவாகும்.

இத்தகைய பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கிளி நொச்சி மக்களையும் உணவுக்கும் குடிநீருக்கும் கையேந்த வைக்கும் இரணைமடுத் திட்டத்தைத்தான் அமைச்சர் டக்ளஸ் எப்படியும் நிறைவேற்றப் போவதாகத் துள்ளிக் குதிக்கிறார்.

அவருக்கு இரணைமடுக் குளத்தை மாகாண சபையிடமிருந்து பறித்து மத்திய அரசிடம் கொடுத்துவிடவேண்டும் என்பதுதான் பிரதான இலட்சியம். கிளிநொச்சி விவசாயிகள் பற்றியோ. யாழ்ப்பாணக் கிணறுகள் சவர்த்தன்மையடைவது பற்றியோ அவர் கவலைப்படுவதில்லை........

## எல்லாமே காவிதான்

### பொலிஸும் பொதுபலசேனவும்

ஒரு அமைச்சரின் செயலகம் நாட்டின் நிர்வாகத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எல்லோருமே அறிவார்கள். அது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெனச் சில சிறப்புரிமைகளும் உண்டு. அவற்றையெல்லாம் மீறி ஒரு குழுவினர் அமைச்சுக் காரியாலயத்துக்குள் புகுந்து மூன்றரை மணி நேரம் அதைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்துள்ளனர். இதன் மூலம் இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கு எவ்வளவு தூரம் சீர்கெட்டுப் போயுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும் .

பொதுபல சேனாவினர் மூன்றரை மணி நேரம் அங்கிருந்து தேடுதல் நடத்தியபோதும் பொலிஸார் தலையிட்டு அவர்களை வெளியேற்ற முயற்சிக்கவில்லை. சாதாரணமாக ஒரு சிறு சம்பவம் இடம்பெற்றாலும் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் , குண்டாந்தடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் என......




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்க அங்கத்தவரும்
நிர்வாக சபை உறுப்பினருமாகிய
சங்கானை பிரதேச செயலகத்தில்
கடமையாற்றும்

### செல்லன் சிவபாலன்

அவர்கள் போட்டிப் பரீட்சைக்கூடாக
நிர்வாக கிராம உத்தியோகத்தராக
(அதிசிறப்பு தரம் SUPRA G.N)
பதவி உயர்வு பெற்றமையைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்
37, அன்னசத்திரலேன், கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

## சலூன்களை மூடி 'லீவு' வழங்குக!

யாழ்ப்பாணம், ஏப்.30

மேதினத்தை முன்னிட்டு நாளை முதலாம் திகதி யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் அன்றைய தினம் தொழில் நிலையங்களை மூடி விடுமுறை வழங்குமாறு சங்கச் செயலாளர் அ.அல்பேட் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ)

## வீடு புகுந்து தாக்கியதில் கணவன், மனைவி காயம்

தென்மராட்சி, ஏப்.30

இனந்தெரியாதோர் வீடு புகுந்து தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவரும் அவரது மனைவியும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கைதடி - நுணாவிலில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஸ்ரீபன் (வயது -30), அவரது மனைவியான ஸ்ரீபன் கலைச்செல்வி (வயது-27) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவமனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## மாணவர், பெற்றோருடன் கல்வி வலயத்தினர் சந்திப்பு

**சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு**

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பெற்றோர் சந்திப்பு செயற்றிட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தென்ம ராட்சி கல்வி வலயத்தால் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வலயத்தால் ஆரம்பிக்கப்பட்ட பெற்றோர் சந்திப்பின் பயனாக கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டதால் இவ்வருடம் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் செவ் வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டு எதிர் வரும் 14 ஆம் திகதி வரை 32 பாடசாலைகளில் முதற் கட்டமாக நடத்தப்படவுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தில் வலயத்தில் உள்ள 32 பாடசா லைகளில் பி.ப. ஒரு மணி தொடக் கம் மாலை 4 மணி வரை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்க ளின் பெற்றோருடன் வலயக் கல்வி அலு வலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாட ஆசி ரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர், பாட, வகுப்பு ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துரை யாடல் நடத்துவர். ஒவ்வொரு மாணவனும் மாத, தவணைப் பரீட் சைகளில் பெற்ற புள்ளிகள் பாட ரீதியாக பெற் றோருக்கு வாசித்துக் காட்டப்படும். மாணவர் களின் கற்றல் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகக் கருத்துக்கள் பெற்றோரிடம் கேட்கப்படும். பெற்றோர் தமது பிள்ளையின் கல்வியில் கவனம்செலுத்துவதுடன் பிள்ளைகளின் அன்றாடச் செயற்பாடுகளில் கவனத்தை ஈர்க்கு மாறும் அறிவுரை கூறப்படுகிறது. (வ-9)

## ஒட்டுசுட்டான் ம.வியில் இன்று 4 ஆவது ஆண்டு நிறைவு விழா

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் 40 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ந.கருணாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் 'மகுடசோதி" புத்தக வெளியீடும் பரிசளிப்பும் இடம்பெறும். பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். (ஒ-500)

---

ஓம் ஸ்ரீ விஸ்வப் பிரம்மனே நமஹ

# நனைந்த விழிகள் நினைவுகள் சுமக்க நகர்ந்தது ஓராண்டு



தாய் மகிழ்ந்தது 17 - 01 - 1933

தாரம் கதறியது 11 - 05 - 2013

அமரர் விஸ்வப் பிரம்மஸ்ரீ

## செல்லத்துரை-பத்மநாதன்

(சமாதான நீதிவான்)

*எங்கள் குடும்பத்தலைவன் எமைப்பிரிந்த ஓராண்டை நினைந்துருகி நிற்கும் இன்றைய நாளில் (30.04.2014) எமதில்லத்தில் நடைபெறும் சமயக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் எம்மோடு உடனிருக்கத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (47473)(5.6.3)

குடும்பத்தினர்.
021 222 0052

---

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் இராஜசிங்கம்



யாழ்.கரவெட்டி கிழக்கு, கடுக்காயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராஜசிங்கம் 21.04.2014 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொண்ணு தம்பதியரின் அன்பு மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரன், சுகிர்தா, கிருத்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிங்கராசாவின் அன்புச் சகோதரரும், வாசுகி,ரவீந்திரன் (இந்திரன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்,நடராசா மற்றும் சின்னப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசன்யா,பிரவீணா,சயந்தன், கவிந்தன், கயானி ஆகியோ ரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.05.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.66, கடுக்காய்,
கட்டை வேலி, கரவெட்டி. (47475)(5.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
0777 697 185

---

# மரண அறிவித்தல்

## செல்வன் இராசநாதன் பிரதீபன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராசநாதன் பிரதீபன் 26.04.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசநாதன் மற்றும் மதிமலர் தம்பதியரின் புதல்வனும், அரவிந்தன் (கனடா), அர்ஜின் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2014) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.36, மெமோறியல் வீதி,
மானிப்பாய். (47469)(12)(3.6)

தகவல்: தாய் (மதிமலர்).
075 066 3419

---

# மரண அறிவித்தல்

## கனகசபை சுப்பிரமணியம் (செல்லையா அண்ணா)

(முன்னாள் அலுமினியம் தொழிற்சாலை ஊழியர்)



போயிட்டியைப் பிறப் பிடமாகவும் மயிலிட்டி வடக்கு, 8 ஆம் வட்டாரத்தைப் புகுந்த இடமாகவும் இடம்பெயர்ந்து கோண்டாவில் நெட்டிலிப்பாயில் வசித்து தற்போது பன்னாலையில் வசித்து வந்தவருமாகிய கனகசபை சுப்பிரமணியம் 29.04.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் போயிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகசபை-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், மயிலிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், தங்கரத்தினத்தின் (பவாக்கா) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன் (முன்னாள் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்) மற்றும் சயந்தன்(ஆசிரியர்- யா/ அருணோதயக்கல்லூரி, முன்னாள் பிரதி அதிபர்- யா/மகாஜனக்கல்லூரி, மெய்யியல் அளவையியல் விரிவுரையாளர்- புதிய உயர் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜெயரஞ்சன் (பிரான்ஸ்), ஜெயந்தன் (ஆசிரியர்- யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசக்தி(ஆசிரிய ஆலோசகர் 2 ஆம் மொழி- சிங்களம் வலிகாமம் கல்வி வலயம்), சூரியகலா(பிரான்ஸ்), பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராம், அபிசயனி, அபிசரண், திவ்யா, சௌமியா, ஜீவேஸ், கிருண்யா, ஆரகன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவபதி பன்னாலை தெல்லிப்பழை இல்லத்தில் (ஆசிரியர் சயந்தன் இல்லம்) இன்று (30.04.2014) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவபதி"
பன்னாலை, தெல்லிப்பழை.
T.P:021 205 9701, 071 847 4684

தகவல்:
மனைவி: க.தங்கரத்தினம் (பவாக்கா)
பிள்ளைகள்: (47474)(3.6.4)
சு.சயந்தன், சு.ஜெயரஞ்சன், சு.ஜெயந்தன்.

---

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கனகரட்ணம் (நாககனி ஸ்ரோர்-வவுனியா)



வட்டுக்கோட்டை, கலைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகரட்ணம் 26.04.2014 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குருசாமி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல் நாயகியின் அன்புக் கணவரும், நாககனிநாதன்(சுவிஸ்), தயாளினி (இலங்கை), தயாநிதி(பிரான்ஸ்), தயாநந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,இராசரத்தினம், தையல்முத்து , திருநீலகண்டர், செல்வவிநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கல்பனா, சதானந்தசிவம், யோகராசா,புவனச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,சரஸ்வதி, சீனிவாசகம், குணரஞ்சிதமலர், திலக்வதி, தங்கவடிவேல், மல்லிகாவதிஅம்மா, ரோசமலர்,தவராஜசிங்கம், சந்திரமலர் ஆகியோரின் மைத்துனரும், சஜிதன், ஜனன், ஜானகி, யசிந்தா, வேணுகா(யாழ்.பல்கலைக்கழக 4ஆம் வருட மாணவி),யதுசன், கிருஷிகா (வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தி யாலய மாணவி), பிறேமினி, பிரியா,ஜனனி, கஜனன், பிருந்தா,நர்மதா ஆகியோரின் பாசமிகு பேரனும், தேனுகா, றுக்சிகா,வர்சன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2014) புதன்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல. 11, குட்செட் வீதி, வவுனியா இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
நாககனிநாதன் (மகன்) - 0041 916467734
தயாளினி (மகள்) - 0094 24 222 3186
0094 77 963 0943
தயாநிதி (மகன்) - 0033 143 040 813
தயாநந்தினி (மகள்) - 0044 1322 839 220

இல. 11, குட்செட் வீதி,
வவுனியா. (43275)(5.6.3)

# மரண அறிவித்தல்



## திருமதி ஜெயவதனி (வவி) ஞானேந்திரன்

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயில் வசித்து தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமான ஜெயவதனி ஞானேந்திரன் (11.04.2014) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்கண்டு (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அருமை மகளும், ஞானேந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும், பிரணவன், பிரியந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவஞானசேகரம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வயிரமுத்து தம்பதியரினதும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி முருகேசு தம்பதியரினதும் பேர்த்தியும் சிவகுமார் (தம்பி - பிரான்ஸ்), அன்புச் சகோதரியும், சர்மிளாவின் (இந்தியா) மைத்துனியும், கபிலன், தாட்சாயினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2014) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு "Funererium De Pontiose 01, Place De, Pare Aux, Charetteas 95300, Pontoicse France"இல் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். அதேவேளை ஆத்ம சாந்திப் பிரார்த்தனையானது அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : வயிரமுத்து நாகேந்திரம் (வேரி)
ஸ்ரீமுருகன் கபே (மாவிட்டபுரம்)

[illegible],
021 790 2846,077 563 2346 (47478)(45.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## ஜெயமணி கோபாலசிங்கம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயமணி கோபாலசிங்கம் நேற்று (29.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, ஜீவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கரன் (பிரித்தானியா), காலஞ்சென்ற ஜெயக்கோபால் மற்றும் ஜெயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷாந்தினியின் அன்பு மாமியும் டயன் சனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று(30.04.2014)புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சாம்பலோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலி,காரைநகர். (47481)(5.6.3) தகவல்: இ.நிருபராசா (மைத்துனர்)

# மரண அறிவித்தல்

## Dr. கந்தப்பு நடராசா



வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. கந்தப்பு நடராசா நேற்று முன் தினம் (28.04.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை, தர்மரட்ணம், வள்ளி நாயகி மற்றும் துரைராசா, பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரரும், உதயகுமார் (CEO, HTN Information System), ரவிக்குமார் (பொது முகாமையாளர் PPDP Pvt.Ltd), Dr. ஜெயகுமார் (வைத்திய அதிகாரி, யாழ் போதனா வைத்தியசாலை), அஜந்தா (கனடா), ஜெயந்தா (உள்ளூராட்சி உதவியாளர், ஆளுநர் செயலகம் வடமாகா ணம்) ஆகியோரின் அன்புத் தந்தை யும், ரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), Dr. மாலினி (RMO, மத்திய மருந்தகம் -ஹாலிஎல), சரளா (ஆசிரியை, சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்), பாஸ்கரன் (கனடா), சோமராஜ் (நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர், Oxfarm) ஆகியோரின் மாமனாரும், நிதூஷன், அபிநயா, விதூஷன், பானுகா, ஜோஷிகா, கீர்த்திகன், கம்சிகா, கருணிகா, பிரவீணா, பிரதூஷா, பிரதீஸ், நிலோத்தமன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.05.2014) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"துவாரகா", மூளாய் வீதி, மூளாய்.
தொ.பே.இல: 021 225 0329 (47479) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் (மொந்திரோவை) வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வேலுப்பிள்ளை நடராசா (பாலசுந்தரம்)

(முன்னாள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர், முன்னாள் மண்டைதீவு கிராமசபை அங்கத்தவர்)



திதி: 30.04.2014



அன்னையின் மடியில் 12.04.1927

ஆண்டவன் அடியில் 22.04.2012

இறைவனடி சேர்ந்து
ஈரண்டு காலமாகிவிட்டதைய்யா
நாம் சேர்ந்திருந்த காலங்களின்
செழுமைகளை நினைத்தே
காலந்தனைக் கழிக்கின்றேன்

வாழ்நாளில் நாம் வசந்தமாய் வாழ்ந்திடவே
வழி அமைத்து வைத்தீரே.....
உம்மைப் பிரிந்து உருகுகின்றோம் அப்பா!
ஆண்டு இரண்டாக.....

பிள்ளைகள் போல் எம்மைப்
பாசத்துடன் அரவணைத்த
பாசமிகு மாமாவே....
இரண்டாண்டு காலம்
உருண்டோடி விட்டதே உமைப்பிரிந்து

காலம் முழுவதும் நாம்
களிப்புடனே வாழ்ந்திட
வேண்டுமென.....
எண்ணிய எம் தாத்தாவே
எங்கே நீர் சென்றீரோ?
ஈராண்டு காலம்

ஆண்டிரண்டு சென்றாலும் நீங்காது உம்
நினைவுகள் எம் நெஞ்சம் உள்ளவரை.....


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல்: மகன் பாலேந்திரா [ராசன் - சுவிஸ்], 0041 2196 41637

(தீ4109)(12.3.6)

## வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்



அமரர்

**முருகேசு அரியபுத்திரர்**

தோற்றம்: 29.07.1921

மறைவு: 01.04.2014

கடந்த 01.04.2014 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகேசு அரியபுத்திரர் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 01.05.2014 வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மந்திலாவத்தை,
அல்வாய் மேற்கு, திக்கம்.

குடும்பத்தினர்.

## அறிவித்தல்




இங்கு காட்டப்பட்டிருக்கும் (Expo marketing) குடும்ப மருத்துவ காப்புறுதி அட்டை விநியோகித்தல் நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டாமென கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

24.04.2014க்கு பின்பு கொள்வனவு செய்யப்படும் அட்டைகளுக்கு நொதன் சென்றல் வைத்தியசாலை பொறுப்பல்ல என்பதை அறியத்தருகின்றோம்.




# அரசியல் தலையீடுகளின்றி வழங்கப்பட்ட முதல் நியமனம்

## *அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை புகழ்கின்றார் மாநகர சபை முதல்வர்*

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்ட தற்காலிக ஊழியர்கள் 87 பேருக்கான நிரந்தர நியமனங்கள் மாநகர சபையின் வரலாற்றிலேயே எந்தவித அரசியல் தலையீடு இன்றி வழக்கப்பட்ட முதலாவது நியமனம் என்று புகழாரம் சூட்டியுள்ளார் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா.

நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தின் போதே இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார் முதல்வர். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது. "யாழ்.மாநகரசபை வரலாற்றில் முதன்முறையாக எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி வழங்கப்பட்ட நியமனம் என்றால் அது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்ட நியமனம் தான். தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான கல்வித்தகைமை குறைக்கப்பட்டது ஊழியர்களின் நிலையை அறிந்து வழங்கப்பட்ட நியமனம். எல்லோருக்கும் கேள்வி கேட்கும் உரிமையுண்டு. ஆனால் ஆளும் தரப்பு முறைகேடு செய்தது என்பதில் உண்மையில்லை. தற்காலிக ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் பெறும் ஊழியர்களின் பெயர்ப்பட்டியல் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாநகர சபை நிர்வாகத்தில் தொழிற்சங்கம் தலையிட முடியாது. அதேவேளை தொழிற்சங்கத்திற்கு ஒருபோதும் நாம் அடிபணியோம்"- என்று தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் தற்காலிக ஊழியர் களாக பணியாற்றிவந்த 87 பேருக்கு நேற்று முன்தினம் மாநகரசபையில் வைத்து அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிரந்தர நிய மனம் வழங்கப்பட்டது. இந்த நியமனத்தின் போது ஆளும் தரப்பினர் நிர்வாக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர் என் றும் மாநகரசபையின் நேர்முகத்தேர்வில் பங்குகொண்டிருந்ததோடு. 3 வருடங்களாக யாழ்.மாநகரசபையில் வேலை செய்தவர் என்று ஆணை யாளரினால் சிபார்சு செய்யப்பட்டவருக்கும் கூட நிரந்தரநியமனம் வழங்கப்படவில்லை. ஆனால் நேர்முகத்தேர்வுக்கு வராதவர்களுக்கும் இங்கு பணியாற்றாதவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி உறுப்பினரான ந.ராஜதேவன் குற்றம்சாட்டியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதமாகவே இவ்வாறு தெரிவித்துள்ளார் மாநகர சபை முதல்வர். (ற)

## இலங்கை - பஹ்ரெயின் ஒப்பந்தங்கள் கைச்சாத்து

கொழும்பு,ஏப்.30

இலங்கைக்கும் பஹ்ரெயினுக் கும் இடையில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் விளையாட்டு, கலை மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் அடிப் படையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

கொழும்பு பல்கலைக் கழகம் மற்றும் பஹ்ரெயின் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கிடையில் மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தங்களில் இலங் கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பஹ்ரெயின் சார்பில் பஹ்ரெயின் ஒலிம்பிக்குழுத் தலைவரும் இளைஞர் மற்றும் விளையாட்டு சுப்ரீம் கவுன்சில் தலைவருமான ஷெய்க்நாசர் பின் ஹமத் அல் கலீபா ஆகியோரும் கைச்சாத்திட்டனர். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## சாவகச்சேரி வணிக நிலையங்கள் நாளை மூடப்படும்

தென்மராட்சி, ஏப். 30

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வணிக நிலைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும் பொருட்டு நாளை மே தினத்தன்று சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட் பட்ட வணிக நிலையங்கள் ஞாயிறு தினங்கள் போன்று அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த ஏனைய வணிக நிலையங்கள் மூடப் பட்டிருக்கும் என்றும் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அன்றையதினம் அக்ஷய திருதியை என்பதால் நகை விற்பனை நிலையங்கள் வியாபாரத்திற்காக திறந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## வேலையாள் தேவை

பாம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆள் தேவை.

0759880000

## வேலையாள்கள் தேவை

இணுவில் கிராமத்தில் உள்ள தொழில் நிலையத்திலும், வீட்டிலும் பணிபுரிவதற்கு 30 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0776197656, 0774723121

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில்
27.04.2014
ஞாயிற்றுக்கிழமை
நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில்

செல்வி **சுமித்திரா ஜெகநாதன்** (BA)

பட்டம் பெற்றமையை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினரும், நண்பர்களும்

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

பேராசிரியர் கலாநிதி

**வசந்தி அரசரத்தினம்**

மேலும் மேலும் வாழ்நாள்
துணைவேந்தராக
வாழ்த்துக்கள்
உங்கள் சேவையில்,
கடமையில் துணிவில்,
நேர்மையில் வாழ்வு
பெற்ற சாட்சியமாய்
இருக்கும்.

*மருத்துவபீட மாணவன்*

நரேந்திரன்
0777730840




## Words Of Peace

உள்ளே உள்ள நண்பனை அறிந்து கொள்ளுங்கள்.
இந்த நட்பு எப்போதுமே நிலைத்திருக்கும் .

**Prem Rawat**

For more details
Call 0117250001 bet 3 pm - 10 pm
Get free dvd.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியர்
திரு. கருணாநிதி அவர்களின் தாயார்

**மாரிமுத்து சீதை**



2014.04.26 சனிக்கிழமை அன்று தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/வேலணை மத்திய கல்லூரி,
ஆசிரியர், நலன்புரி சங்கம்

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போரால்

பட்ட பல்வேறு ஆவணங்கள் பாப்பரசரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் வந்து பார்வையிடுமாறு மறைமாவட்ட ஆயர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு பாப்பரசர் சம்மதித்துள்ளதாகவும், இந்தப் பயணத்தின் போது மன்னாரிலுள்ள மடுத் தேவாலயத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. மன்னார் மடுத் தேவாலயத்தில் வைத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-5)

### இன்று

மணித்தியாலங்களுக்கு மழைக்கான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தென்துருவத்திலிருந்து வரும் காற்றும் வடதுருவத்திலிருந்து வரும் காற்றும் இடைவெப்ப வலயத்தில் சந்திக்கும் இடம் இலங்கையின் மேலே உள்ளதால் இலங்கைக்கு இடியுடன் கூடிய காலநிலை நிலவுவதோடு மழை பெய்யும். திடீரென காற்று அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. கரையோரங்களிலும் அதிக மழை எதிர்பார்க்கப்படுவதோடு திடீரென கடல் கொந்தளிப்பும் காணப்படும்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ந-4)

### கூட்டமைப்பை

டிப்படையில் தமிழரசுக் கட்சி சார்பில் மாவை. சேனாதிராசாவும், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனும், புளொட் சார்பில் த.சித்தார்த்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இதன் சட்ட ஆலோசகராக எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஐ.நா. தீர்மானத்தின் பின்னரான நிலைமை மற்றும் தென்னாபிரிக்க அனுசரணையுடனான பேச்சு என்பன தொடர்பிலும் ஆராயப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் கொள்கைகள் - பயணங்கள் - அது தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்கு விசேட குழு அமைக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவற்றை விட கட்சியின் ஒருங்கிணைப்புக் குழு வடக்கு மாகாண முதலமைச்சரை தெரிவதற்காக கடந்த வருடம் அமைக்கப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு 8 மாதங்களாகியும் அதன் கூட்டம் ஒழுங்கு முறையாக நடத்தப்படவில்லை.

எனவே கூட்டம் ஒழுங்காக நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய ஒவ்வொரு மாதத்தின் 3 ஆவது வெள்ளிக்கிழமையில் கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது''- என்று தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. ஒருங்கிணைப்புக் குழுவில் 21 பேர் உள்ள போதும், 13 பேரே சமுகமளித்திருந்தனர்.

(ந-5)

### தப்பியோடிய



பெண் வேடத்தில் சந்தேகநபர்

சத்தைச் சேர்ந்த 28 வயதான ஜெயபாலன் ஸ்டென்லி ரமேஸ் என்ற இந்த சந்தேகநபர், வவுனியா, குட்செட் பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் பெண் வேடமணிந்து சுற்றித் திரிகின்றார் என்று வவுனியா பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற புலனாய்வுத் தகவலை அடுத்தே கைது செய்யப்பட்டார் என்றும், அவர் கைது செய்யப்படும் போது சிவப்பு நிற சுடிதார் அணிந்து பொய் முடியிட்டு தொப்பி அணிந்திருந்தார் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

ஆயுதங்களை வைத்திருந்தார், கொள்ளைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த நபர், இந்த மாதம் முதலாம் திகதி அல்சர் நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆயினும் கடந்த 20ஆம் திகதி இரவு 11 மணியளவில், அவர் வைத்தியசாலையிலிருந்து தப்பித்து விட்டார் என்று அறிவித்த பொலிஸார் அவரைக் கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தனர்.

(ந)

### அதிகரிக்கப்படாத

தில்லை என்று அறிவித்துள்ளது யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

"உள்வாரிக் கற்கை நெறிகள் மாத்திரமன்றி, வெளிவாரிப் பரீட்சைகளது விடைத்தாள்களையும் திருத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளோம். வெளிவாரிப் பரீட்சை ஒன்று தற்போது நடைபெற்று முடிந்துள்ளது. எதிர்வரும் மாதம் மற்றொரு பரீட்சை இடம்பெறவுள்ளது. தவிர 3 ஆவது வருட மாணவருக்கான பரீட்சை வினாத்தாள்களையும் தாம் தயாரிக்கப் போவதில்லை''- என்றும் அந்தச் சங்கம் மேலும் அறிவித்துள்ளது.

(ந-4)

### தனித்திருந்த

குறித்த மூதாட்டியின் கணவர் சில மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்து விட்டார். மூதாட்டி மட் டுமே இப்போது தனித்து வசித்து வருகின்றார். மதிய நேரம் அவரது வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அவரது கழுத்தில் கத்தியால் வெட்டிவிட்டு சங்கிலி, காப்புகள் எனச் சுமார் 5 பவுண் நிறையுடைய நகைகளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர். மூதாட்டி காயத்துடன் மெல்ல நகர்ந்து வீட்டின் வெளிவாயிலுக்கு வந்ததை அடுத்தே அயலவர்கள் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூதாட்டி தற்போது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அச்சுவேலிப் பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ந-4-400-17)

### கொலையல்லாத

இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றின் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஸக்கிரியஸ் ஜேசுதாசன் என்பவருக்கே கொட்டனால் அடித்துக் கொலையல்லாத சாவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரும் அவரது மகளும் குற்றஞ்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் மீதான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது. அங்கு விசாரணை இடம்பெற்று குறித்த பெண் கொலையல்லாத சாவு ஏற்படுத்தினார் என்று நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது. அவரது மகள் விடுதலை செய்யப்பட்டார்.

(ந-4)

### மன்னார்

நிபுணர் டி.எல்.வைத்தியரெட்ண தலைமையிலான குழுவினர் குறித்த 81 எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்களை அநுராதபுரம் கொண்டு சென்றனர். அதன் போது விசேட குற்றப்புலனாய்வுப்பிரிவினரும் மன்னார் வைத்தியசாலையில் பிரசன்னமாகியிருந்தனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வரை திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து 81 மனித எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. அவை இதுவரை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணத்தின் உத்தரவிற்கமைவாக மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. (ந-56)

### காணிகளை

கள் அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்த 'உலக நடன தினம் 2014' நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது:

"இலங்கையில் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்க்க வேண்டும். அதேவேளை மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்க்க வேண்டும் என்ற அபிப்பிராயத்துடன், ஜனாதிபதியினதும் அமைச்சர்களினதும் வேண்டுகோளுக்கு அமைவாக முதற் தடவையாக இலங்கையில் நடத்தப்படும் 'உலக நடன தினம்' யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் விசேடமான ஒரு பரிந்துரை காணப்படுகின்றது. அதாவது நாட்டிலுள்ள இனங்களுக்கிடையிலான ஒற்றுமை , அவர்களின் புரிந்து ணர்வுகள், பரஸ்பர நம்பிக் கைகளையும் வளர்க்கும் முகமாக நாங்கள் செய்ய வேண்டிய பல்வேறு காரணிகளுக்கு மிகப் பிரதானமான ஒரு காரணி நமது கலை கலாசாரம். அதனூடாக அந்தக் துறையை நாம் முன்னேற்ற முடியும் என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

எமது அமைச்சு கலை, கலாசாரத்தின் ஊடாக இனங்களுக்கிடையேயான பகை உணர்வுகளை மறைத்து அதனூடாக நல்லதொரு புரிந்துணர்வை வளர்க்கக் கூடிய வகையில் அனைத்து பணிகளையும் ஆற்றி வருகின்றது. அந்த வகையில்உலக நடன தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலே இரு கலை, கலாசார நிலையங்களை நாங்கள் திறந்து வைக்கின்றோம். அதாவது அமைச்சு மேற்கொண்டு வருகின்ற இனங்களுக்கிடை யேயான புரிந்துணர்வை வளர்க்கக் கூடிய கலை, கலாசாரத் திட்டத்தினூடாக வளர்க்கக் கூடிய திட்டத்தின் ஒரு நடவடிக்கையாகவே இந்த இரு கலாசார நிலையங்களும் திறந்துவைக்கப்படுகின்றன.

நான் இங்கு விசேடமாக அமைச்சர் டக்ளஸ், ஆளுநர் சந்திரசிறி, யாழ்.மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். அதாவது இங்கு இருக்கின்ற அனைத்துப் பிரதேச செயலகங்களில் இருந்தும் எங்களுக்கொரு காணி ஒதுக்கப்பட்டால் அந்தந்த பிரதேச செயலகங்களை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு கலாசார நிலையங்களை அமைக்க முடியும். அதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு இவ்விடத்தில் வேண்டுகோளாக சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கையின் மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஜனாதிபதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வடமாகாண ஆளுநர் சந்திரசிறியும் தேர்தல் மூலம் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட க.வி.விக்னேஸ்வரனும் இங்கு ஒன்றாக அமர்ந்திருக்கின்றார்கள். இதனைப் பார்க்கும்போது மத்திய மற்றும் மாகாண அரசும் அரச சேவை ஆணைக்குழுவும் ஒன்று கூடியிருக்கின்றனர். அதேவேளை இங்கு வந்திருக்கின்ற ஒருங்கிணைக்கப்பட்ட மக்களின் எழுச்சியும் சேர்ந்து இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எழுச்சியை உருவாக்கி உள்ளது.

பல்வேறு காரணங்களால் அழிக்கப்பட்ட இந்துக் கோவில்களை இங்கு கண்டேன். அவற்றையும் நாங்கள் புனரமைப்புச் செய்வதற்கு மத்திய அமைச்சின் கீழும் கலாசார அமைச்சின் கீழும் பெரும் நிதியை ஒதுக்கீடு செய்து உதவ முன்வந்திருக்கின்றேன்.

வெளிநாடுகளுக்கு அநேகமாக நடனக் கலைஞர்களை அனுப்பி வைக்கின்றது எமது அமைச்சு.இத்தனை காலமும் தென்பகுதி மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்தே அனுப்பப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து நடன, நர்த்தனக் குழுக்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவில்லை.

எனவே இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை மட்டுமன்றி ஒற்றுமையை வளர்க்கக்கூடிய ஒரு நடனக் குழுவை யாழ்ப்பாணத்தில் இருந்து தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பின்னர் அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப நாம் தயாராகவுள்ளோம்"- என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அபதிபர் சுந்தரம் அருமைநாயகம், கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித் கனுகல, அரச நடனக் குழுத் தலைவர் ஆரியரத்ன களு ஆராய்ச்சி, இலங்கை கலைக்கழகத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் முதியன்சேதிசாநாயக்க, கலை, கலாசார அமைச்சின் செயலாளர் வசந்த ஏக்க நாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலை, கலாசார துறைசார்ந்து வைர முத்து சிவராமலிங்கம், கிரு சாந்தி ரவீந்திரா, விமல் நயனா னந்த ஆகியோருக்கு கௌரவ விருதுகள் வழங்கப்பட்டன.

(ந-10)

### வடக்கு

முன்னெடுப்பது என்று கேள்வி எழுப்பியுள்ளார் யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.சோதிலிங்கம்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம், சபையின் கேட்போர் கூடத்தில்நேற்று நடைபெற்றது. அதன்போது குருநகர் இராஜசிங்கம் வீதி வீதியோரக் குடியிருப்புக்களை அகற்றுவது தொடர்பான விவாதம் உறுப்பினர்களிடையே இடம்பெற்றது.

குருநகர் வீதியோரக்குடியிருப்பை குடியிருப்பாளர்களின் அனுமதியுடன் வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்ற பிரேரணையை எதிர்கட்சி உறுப்பினர் மேரியம்மா சபையில் முன்வைத்தார். எனினும் அதனை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

"மாநகர சபையின் ஆட்சிக் காலம் முடியும் தருவாயில் இப்படியான பிரச்சினைக்குரிய விடயங்களைப்பற்றி பேச வேண்டாம். சபைக்கு எழுத்து மூலமான கோரிக்கையை அப்பகுதி மக்கள் முன் வைத்தால் அது தொடர்பாக ஆராயலாம்'' என்று தெரிவித்தனர் ஆளுங்கட்சி உறுப்பினர்கள். அப்போது கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ். சோதிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாநகர சபை முதல்வர், "குறித்த குடியிருப்பாளர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தான் குடியமர்த்தினர் என்று தமக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டது'' என்று தெரிவித்தார். எனினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதனை மறுத்தனர்.

(ந-14)

### வடமாகாண

கல்வித்துறையில் முறைகேடான வகையில் பல்வேறு விடயங்களை அந்தக் குழு செய்துள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

வடக்கு மாகாணசபையின் எட்டாவது அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது. அப்போது வடக்கு மாகாணசபை ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரனின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்ற முன்னர் வடக்கு மாகாண கல்வி நிர்வாக - கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள், அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைமையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தக் குழு கல்வி அபிவிருத்திக்காக நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டிருந்தது என்று அறிய முடிகின்றது. அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான பதவி நியமனங்கள், பதவி உயர்வுகள் ஆகியவற்றின் விளைவே எங்களுடைய கல்வி நிர்வாக சீர்கேட்டுக்கும், மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கும் காரணம் என்ற பரந்தளவிலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே இந்தக் கல்விக் குழு, தான் வகித்த பொறுப்புக்களையும், சொத்துக்களையும் கல்வி அமைச்சரிடம் கையளித்துள்ளதா ?.

கல்வி நிர்வாக மட்டத்தில் இவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடான பதவி நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் சீர் செய்யப்பட்டுள்ளதா? என்று சர்வேஸ்வரன், கல்வி அமைச்சரிடம் எழுப்பினார்,

அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், "இந்தக் கல்விக் குழுவானது தனிப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் செல்வாக்கினால் உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களே இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றார்கள். அரசியல் அழுத்தங்கள் ஊடாக பல்வேறு விடயங்களை அவர்கள் செய்கின்றார்கள் என்பதையும் எம்மால் அறியக் கூடியதாக உள்ளது.

மேற்படி கல்விக் குழு முறையாக மத்திய மற்றும் மாகாண கல்வி அமைச்சுக்களினால் உருவாக்கப்படவில்லை. இதனால் இவர்கள் வகித்த பொறுப்புக்களும், சொத்துக்களும் எங்களுக்கு வழங்கப்படவில்லை. அங்கீகாரம் பெறாத ஒரு கல்விக் குழுவினுடைய சொத்துக்களை நாம் பொறுப்பேற்பதும் பொருத்தமானதாக அமையாது. அவர்களால் வழங்கப்பட்ட முறைகேடான பதவி உயர்வுகள் தொடர்பில் எதுவும் ஆராயப்படவில்லை. முறைப்பாடுகள் கிடைப்பவை மட்டுமே ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்"- என்று தெரிவித்தார்.

(ந-5)

# வடமாகாண மரதன் ஓட்டத்தில் வவுனியா, கிளிநொச்சி முதலிடம்




மரதன் ஓட்டத்தில் வெற்றிபெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்.30

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான மரதன் ஓட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சாளினியும், ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரீ.அன்ரனி டெல்மனும் முதலாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வவுனியா நகர சபை முன்றிலிலிருந்து ஆரம்பமான மரதன் ஓட்டப் போட்டி புளியங்குளம் வரை சென்று மீண்டும் ஆரம்ப இடத்தை வந்தடைந்தது.

42கிலோமீற்றர் தூரம்கொண்ட மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரீ.அன்ரனிடெல்மன் 2 மணித்தியாலங்கள் 46 நிமிடங்கள் 36 செக்கன்களில் ஓடி முடித்து முதலாமிடத்தையும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஜெயந்தன் 2 மணித்தியாலங்கள் 52 நிமிடங்கள் 32 செக்கனில் ஓடி முடித்து இரண்டாமிடத்தை யும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எச்.ஏ.பி.திசாநாயக்க 2 மணித்தியாலங்கள் 58 நிமி டங்கள் 29 செக்கனில் ஓடி முடித்து 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சாளினி 3 மணித்தியாலங்கள் 39 நிமிடங்கள் 21 செக்கன்களில் ஓடி முடித்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

சாளினி 2013 ஆம் ஆண்டு 4 மணித்தியாலங்கள் 9 நிமிடங்கள் 43 செக்கன்களில் ஓடி புரிந்த சாதனையை இந்த முறை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.நேர்மதி 4 மணித்தியாலங்கள் 8 நிமிடங்கள் 38 செக்கன்களில் ஓடி இரண்டாமிடத்தையும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.வனோஜா 4 மணித்தியாலங்கள் 12 நிமிடங்கள் 43 செக்கன்களில் ஓடி முடித்து மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியினர் 26 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கிளிநொச்சி மாவட்ட அணியினர் 17 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியினர் 17 புள்ளிகள் பெற்று முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (கு-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.30

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் திக்கம்முனை விளையாட்டுக் கழக மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன. இதில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ்விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)

***

யாழ்ப்பாணம், ஏப்.30

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)

## கிண்ணத்தைத் தனதாக்கியது புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா

யாழ்ப்பாணம், ஏப்.30

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திய தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பறவை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோவும் கௌரவ விருந்தினராக அநுராதபுரம் உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் சாகரவும், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் நவநீதன், லீக்கின் செயலாளர் மருத்துவர் சண்முகராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு-23)

# விறுவிறுப்பான ஆட்டத்தில் வென்று அரையிறுதிக்குச் சென்றது டயமன்ஸ்



ஆட்டத்தில் ஒரு காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.30

மைதானம் பார்வையாளர்களால் நிறைந்திருக்க பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உதயன் பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் அணியும், பலாலி விண்மீன் அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் போட்டி ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியைச் சேர்ந்த டேமியன் தமது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.

அதற்குப் பதிலடி கொடுப்பது போல் டயமன்ஸ் அணியின் வீரர் மதுசூதனன் மத்திய பகுதியில் வைத்து கோல் கம்பங்களை நோக்கி உதைத்த பந்தொன்று எவ்வித தட்டுத் தடங்கலும் இன்றி நேராக கோல் கம்பங்களுக்குள் புகுந்து சரணடைந்தது.

இதனைத் தொடர்ந்து இரு பகுதி அணியினரின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. இரு பகுதியினரும் முன்னேறுவதும், பின்வாங்குவதுமாக இருந்தனர். இச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் விண் மீன் அணி வீரர் யூட் கோல் ஒன்றை அடிக்கும் நோக்குடன் பந்தொன்றை வேகமாகத் தட்டிச் சென்ற போது, டயமன்ஸ் அணியின் கோல் பரப்புக்குள் வைத்து அவ்வணி வீரர் பீமா தடுத்தாட முற்பட்ட போது பந்து அவரது கையில் பட்டுவிட்டது. இதனால் எதிரணிக்குத் தண்டனை உதை வழங்கப்பட்டது. இதன் போது நடுவரால் வழங்கப்பட்ட தீர்ப்பு தவறானது என டயமன்ஸ் அணி வீரர்கள் நடுவரிடம் ஆட்சேபம் தெரிவித்த போதும் அது நிராகரிக்கப்பட்டது.

தொடர்ந்து தமக்கு வழங்கப்பட்ட தண்டனை உதையை சரியான முறையில் கோலாக்கி அணிக்கு உற்சாகமூட்டினார் யூட். ஆனால் அந்த உற்சாகம் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் விண்மீன் கோல் பகுதிக்கு வெளியே அவ்வணி வீரரின் கைகளில் பந்து பட்டுவிட்டது. இதனால் வழங்கப்பட்ட நேர் உதையை பீமா உதைத்தார். ஆனால் அது எதிரணியில் பட்டுத் திரும்பி வந்தது. உடனடியாக விரைந்து செயற்பட்ட பீமா தனது பலத்தைப் பயன்படுத்தி பந்தை கோல் கம்பங்களை நோக்கி உதைக்க அது குழலில் இருந்து வெளியேறிய ஷெல் போலச் சென்று கோல் கம்பங்களுக்குள் புகுந் தது. இதனை அடுத்து 2:2 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் விண்மீன் அணி வீரர்களின் ஆட்டத்தில் மாற்றம் காணப்பட்டது. இதனால் இப்பகுதியில் பெரும் பகுதி அவர்களுடைய கட்டுப்பாட்டிலேயே பந்து இருந்தது. ஆட்டம் தொடங்கி 2ஆவது நிமிடத்தில் விண்மீன் அணியினருக்கு கோல் அடிப்பதற்கு 2 சந்தர்ப்பங்கள் கிடைத்தன. கோல் காப்பாளர் முன்னேறிய நிலையில் தடுத்தாடுவதற்கு எவருமற்ற சூழலில் பந்து கிடைத்தும் அதனைக் கோலாக்காது தவறவிட்டனர் விண்மீன் அணியினர். இதனால் மைதானத்தில் உள்ளேயும் வெளியேயும் பரபரப்பான சூழல் காணப்பட்டது. இப் பரபரப்பான சூழலில் டேமியன் 3ஆவது கோலைப் போட அவர்களுடைய ஆதரவாளர்கள் கூக்குரலிட்டு ஆர்ப்பரித்தனர்.

இவர்களுடைய ஆர்ப்பரிப்பால் சினமடைந்த டயமன்ஸ் அணியின் தடுப்பாட்டக்காரர் உசானந் முன்னேறிவர கணக்காகப் பந்தொன்று அவரது காலுக்குள் அகப்பட்டது. அதனைச் சரியாகக் கணித்து கோல் கம்பங்களுக்குள் புகுத்தினார். இதனால் 3:3 என்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது. இவ்வாறு மாறி மாறி இரு அணிக்கும் கோல்கள் போட உற்சாகமடைந்த ஆதரவாளர்கள் எதிரணிகளைப் பார்த்து கேலி செய்வதும் கூக்குரலிடுவதுமாக மைதானம் ஒரே அமர்க்களமாக இருந்தது.

இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் விண்மீன் வீரர்களால் கோல்நோக்கி அடிக்கப்பட்ட பல பந்துகள் டயமன்ஸ் அணியின் கோல் காப்பாளர் கொலின்சால் தடுக்கப்பட்டன. இதனால் அவர் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார்.

ஆட்டம் 3:3 என்று சமநிலையில் முடிந்ததால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் டயமன்ஸ் அணியைச் சேர்ந்த அரவிந், மதுசுதன் அரவிந்தன் மற்றும் பிறேம்குமார் ஆகியோரும் விண்மீன் அணியைச் சேர்ந்த டேமியன், யூட் ஆகியோரும் கோலாக்க 7:5 என்ற கோல் கணக்கில் வென்று டயமன்ஸ் அரையிறுதிக்கு முன்னேறியது.

(கு-400)



பத்ரிநாத்

# ட்ராவிட்டை பின்பற்றுகிறேன்

இந்திய கிரிக்கெட் வீரர் பத்ரிநாத், தாம் ராகுல் ட்ராவிட்டை பின்பற்றி விளையாடுவதாக மாவட்ட கிரிக்கெட் சங்க நிகழ்ச்சியில் கூறியுள்ளார்.
திண்டுக்கல் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில், மாவட்ட அளவில் நடந்த கிரிக்கெட் போட்டிகளில் கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கு இடையே நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கும், சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இந்திய கிரிக்கெட் வீரர் பத்ரிநாத் கூறுகையில்; நான் சிறுவயதில் இருந்தே கிரிக்கெட் மீது அளவு கடந்த ஆர்வம் கொண்டவன்.
எனது விளையாட்டு, இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல் ட்ராவிட் ஆட்டத்தை போல் இருப்பதாக பலர் கூறுகிறார்கள்.
நான் ராகுல் ட்ராவிட் ஆட்டத்தை மிகவும் ரசிப்பேன். எதிர்வரும் காலத்தில் அவரைப் போலவே வரவேண்டும் என்று என் சிறுவயதில் இருந்தே ஆசைப் பட்டேன். அதன்படி அவருடைய ஆட்டத்தை பின்பற்றி விளையாடி வருகிறேன். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது எனக் கூறியுள்ளார். (த)



# சுப்பர் ஓவரில் கொல்கத்தாவை வெற்றி கொண்டது ராஜஸ்தான் ரோயல்ஸ்

சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் உட்பட 8 அணிகள் பங்கேற்றுள்ள 7ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும், மற்றைய அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளே-ஓவ் என்ற இறுதிப் போட்டிக்கு முன்னைய சுற்றுக்கு தகுதி பெறும். இந்த நிலையில் அபுதாபியில் நேற்று 19ஆவது லீக் ஆட்டத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ்-ஷேன் வாட்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.
இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது . இதன் படி முதலில் களம் இறங்கிய ராஜஸ்தான்அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5இலக்குகள் இழப்புக்கு 152 ஓட்டங்களைக் குவித்தது.
அந்த அணியில் அதிகபட்சமாக ரஹானே 59 பந்துகளில் 72 ஓட்டங்களைக் குவித்தார். கொல்கத்தா அணி தரப்பில் வினய் குமார் 2இலக்குகளையும் மோர்கல், சொகைப் அல் ஹசன் ஆகியோர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இதையடுத்து 153 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்காக கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கம்பீர் பிஸ்லா களமிறங்கினர். பிஸ்லா 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற களம் புகுந்த கலிஸ் 13ஓட்டங்களிலும் மனீஷ் பாண்டே 19 ஓட்டங்களிலும் கம்பீர் 45 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேற களமிறங்கிய சுரேஸ்குமார் யாதவ் சொகைப் அல் கசன் ஆகியோர் அதிரடியாக ஆடி அணியை வலுவான நிலைக்கு கொண்டுசென்றனர் . இச்சூழ் நிலையில் இறுதி 2 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் யாதவ் 31 ஓட்டங்களுடனும் உத்தப்பா வினாய் குமார் ஆகியோர் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்து வெளியேறினர். இதில் 4 ஓட்டங்கள் பெறப்பட ஆட்டம் இறுக்கமடைந்தது. இறுதிப் பந்து பரிமாற்றத்தில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது 11 ஓட்டங்களே பெறப்பட்டன. இறுதியில் 20 பந்துப்பரி மாற்றங்களில் 8 இலக்குகள் இழப்புக்கு 152 ஓட்டங்களைப் பெற்று போட்டியைச் சமன் செய்தது. பந்துவீச்சில் பல்கினர் 3இலக்குகளையும் பர்வின் தம்பே 2 இலக்குகளையும் றிச்சர்ட்ச பறியா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். அடுத்து வழங்கப்பட்ட சுப்பர் ஓவரிலும் இரு அணியினரும் ஓட்டங்களைப் பெற்றதனால் பவுண்டரிகள் அடிப்படையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக பல்கினர் தெரிவு செய்யப் பட்டார். (40



விராட் கோஹ்லி

# தேர்தலில் வாக்களிக்க மறந்தார் கோஹ்லி

தேர்தல் விழிப்புணர்வு பிரசாரத்தின் தூதுவராக திகழ்ந்த இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லியே வாக்குப் போடவில்லை என அவர் மீது விமர்சனங் கள் எழுந்துள்ளன.
கடந்த 10ஆம் திகதி அன்று டெல்லியில் நடந்த தேர்தலின் போது விராட் கோஹ்லி வாக்குப் போடவில்லை. வாக்குப் போடுவது ஜனநாயகக் கடமை என்பதை வலியுறுத்தும் தேர்தல் ஆணைக்குழு விழிப்புணர்வுப் பிரசாரத்தில் விராட் கோஹ்லி தூதுவராகக் கடந்த ஆண்டு இருந்துள்ளார்.
இந்த ஆண்டு புதிய வாக்காளர்கள் வாக்களிப்பது கடமை பற்றிய விழிப்புணர்வு பிரசாரத்தின் தூதுவராகவும் இருந்துள்ளார்.
டெல்லியில் ஓட்டுப்பதிவு நடந்த அன்றைய தினத்தில் கோஹ்லி பெங்களூரில் இருந்துள்ளார். வாக்களிப்பின் முக்கியத்துவத்துவத்தை உணர்த்திய விராட் கோஹ்லியே வாக்களிக்காதமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.
இது குறித்து டெல்லி தேர்தல் கமிஷனர் நசீம் கூறுகையில், எந்த ஒரு இந்தியக் குடிமகனும் வாக்களிப்பதா அல்லது இல்லையா என்பதை அவர் தான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் தேர்தல் ஆணைக்குழுவின் தூதுவராக நியமிக்கப்பட்டவர் விராட் கோஹ்லி. ஜனநாயக ரீதியில் கடமையாற்றுவது அவரது தலையாய பணியாகும் என்று கூறியுள்ளார். (த)



குமார் சங்கக்கார

# டர்ஹம் அணியில் குமார் சங்கக்கார

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார இங்கிலாந்தைச் சேர்ந்த டர்ஹம் கழகத்துக்காக விளையாடவுள்ளார்
கழகங்களுக்கிடையிலான தொடரில் சங்கக்கார யோக் ஷயர் மற்றும் சசெக்ஸ் ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகளிலே டர்ஹம் அணிக்காக விளையாடவுள்ளார்.
இதன் காரணமாக இலங்கை அணி அயர்லாந்து அணியுடன் மோதும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் சங்கக்கார விளையாடமாட்டார் எனத் தெரிவிக் கப்படுகிறது.
மே 14 ஆம் திகதி டர்ஹம் அணி பங்கேற்கும் போட்டிகளுக்குப் பிறகு இலங்கை அணியுடன் சங்கக்கார இணைந்து கொள்வார் என அறிவிக் கப்பட்டுள்ளது.
தனக்குக் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுவதாக சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.
முதலில் கழகங்களுக்கிடையிலான போட்டியில் டர்ஹம் கழகத்துக்கு எதிராகதான் யோக் ஷயர் அணிக்காக விளையாடியதாகவும் இந்த முறை யோக் ஷயர் அணிக்கெதிராக விளையாடவுள்ள தையும் நினைவு கூர்ந்துள்ளார். (த)

# மும்பை அணியில் மீண்டும் பொண்டிங்

ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வரும் மும்பை இந்தியன்ஸ் அணியில் முன்னாள் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் மீண்டும் இணைந்துள்ளார்.
கடந்த ஐ.பி.எல் தொடரில் வலுவான அணியாக திகழ்ந்த மும்பை இந்தியன்ஸ் அணி தற்போது விளையாடி வரும் போட்டிகளில் தொடர் தோல்விகளைத் தழுவி வருகிறது. விளையாடிய நான்கு போட்டிகளிலும் தோல்வியடைந்து புள்ளிகள் அட்டவணையில் கடைசி இடத்தில் உள்ளது.
இதைத் தொடர்ந்து கடந்த தொடரில் அந்த அணிக்காக விளையாடிய பொண்டிங் இந்தத் தொடரில் மும்பை அணியின் ஆலோசகராக இடம்பெற்றுள்ளார்.
மும்பை அணியின் ஆலோசகராக அணியில் இணைந்துள்ள பொண்டிங் இது தொடர்பாக கூறுகையில், மும்பை அணியுடன் இணைந்து மீண்டும் செயல்படுவதை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். கடந்த தொடர் எனக்கு மிகச்சிறந்த ஒன்றாக அமைந்தது என்று கூறியுள்ளார். (த




ரிக்கி பொண்டிங்

## வளவாளர் தேவை

வவுனியாவில் ஆங்கில மொழி கற்கைநெறி போதிக்கக் கூடிய பகுதிநேர வளவாளர் தேவை.
ஆசிரிய சேவையில் உள்ளவர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்

தொடர்பு :- 0766695552

---

**SKY** COMPUTER SALE



IBM FULL SET
12,900/=
1 YEAR WARRANTY
(FREE H.PHONE /CAMARA
89, KANDY ROAD
JAFFNA (NEAR KACHCHERI)
021 222 1417 / 0750698608

---

**DIGITAL COLOUR PRINTING** Indigo 12 COLOUR - 2800dpi

New Syenthetic Album Print
10 x 30 -12 x 30 - 225.00
4R ( 4x6) - 8.50 - invitation,visiting card
A4 - 12.00 -A3 - 25.00
A2 - 75.00 -A1 -150.00
(minimum order 100 print)

200YEARS NOT COLOUR FADE

மூர்த்தி டிஜிற்றல்கலர் லாப்
62/20,ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்- 021 221 9399

---

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam -Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**EVENING & WEEKEND CLASSES STARTS ON**

| 03.05.2014 | 05.05.2014 | 07.05.2014 |
|---|---|---|
| @11.30 - 02.30PM | @02.00 - 05.00PM | @03.00 - 05.00PM |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

---

**ECONOMICS HALL**
364, Stanly Rd.
(Near DMI)

தமிழ் - K. தர்மராஜா
BA பேராதனை 2015/16
Friday 8-10 (2/5/14)

துரித மீட்டல் (யாழ்.)
BA-I Fri 10-12 (2/5)

*மெய்யியல்-உதயகுமார்
*அரசியல்- புவனதாஸ்
*வரலாறு- சுரேன்
*இந்துநாகரிகம்-பத்மராஜா
*ENGLISH- MAHESWARAN

ஆரம்பம் - 03.05.2014
GAQ / BA / BA - I

---

**கருத்தரங்குகள்**

மே மாதம்நடைபெறவுள்ள
*மக்கள் வங்கி முகாமைத்துவ பயிலுநர் (பகுதி II)
*கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (D.O)
*இலங்கை வெளிநாட்டு சேவை III
பரீட்சைகளுக்கான

பொது உளச்சார்பு

ஆரம்பம்: வியாழன் (1/5)
காலை 9.00 -3.00 மணி வரை
*கணக்காளர் மற்றும் ஏனைய போட்டிப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் பங்கு பற்றலாம்
T.P 0754164564

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி,
(கொமர்ஷல் வங்கிஅருகில்)

---

யாழ் நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன்
**Dip.in Mass Media (அறிவிப்பாளர்பாடநெறி)**

வானொலி,தொலைக்காட்சிஅறிவிப்பாளராக,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவர ஆசைப்படுகிறீர்களா?
வானொலிஅறிவிப்பு,நிகழ்ச்சிதயாரிப்பு,நிகழ்ச்சிஒருங்கிணைப்பு,விளம்பரதயாரிப்பு,நேரடிவர்ணனை,செய்திவாசிப்பு,பத்திரிகைவாசிப்புஎன இன்னும் பல......Call:0777929475

எமதுநிறுவனத்தில் பாடநெறியைமுடித்தமாணவர்கள் அரச,தனியார்(03.05.2014 ஆரம்பம)வானொலி,தொலைக்காட்சிகளில்

BTEC #21,Sirampiyadilane,Jaffna. Tel:0217904468

---



அடிப்படை
**ஆங்கிலம்**

அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத,வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்.

பயிற்சிநெறி ஆரம்பம் - 01.05.2014 வியாழன்

பிரிவு 1 : காலை 08.00-09.00 பிரிவு 2 : மு.ப 11.00-12.00
பிரிவு 3 : பி.ப 03.00-04.00 பிரிவு 4 : மாலை 04.00-05.00

வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.

Note:- ஒரு பிரிவில் 16 பேர் மட்டும்! பயிற்சியில் இணை... அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவ...

SAAMSON LANGUAGE SCHOOL 179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

---

# நியூ லலிதாஸ் ஜுவல்லறி

May 01 02 2014



01,02 மே 2014
அக்ஷய திருதியை
தினங்களில் நகைகள் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்

இல. 111, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4134

இல. 30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5511

தங்கத்தை
இல்லங்களுக்கு எடுத்துச் சென்று
மேலும் செல்வத்தைச்
செழிக்கச் செய்யுங்கள்

அன்றையதினம் தங்க நகைகள் கொள்வனவு செய்வோருக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்

# நியூ நகுலா ஜுவல்லறி

இல. 109, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9119

இல. 45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4101

(வி/13743)(10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை A

உதயன் ஏப்ரல் 30 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

வாழ்க்கையில் எதிர்நோக்காத தொல்லைகள், தோல்விகள், கவலைகள், துன்பங்கள் உண்டாகலாம்; அதற்காக உயிரைப் போக்கிக் கொள்வதில் பொருளில்லை. உள்ளத்தை ஊக்கிக் கொள்; விழிகளைத் துடைத்துக் கொள். ஒவ்வொரு விடிதலும் மகிழ்ச்சியுடன் எழுவதற்கே.

*-ஷேக்ஸ்பியர்.*

ராஜராஜன்



# எல்லோருக்கும் எல்லாமும்

**எல்லோரும் எல்லாமும் பெற்று வாழும் ஒரு புதிய உலகைப் படைப்பதற்கு நாம் அனைவரும் முன்வர வேண்டும். துயரம் என்பதை கடந்து போனதொரு கனவு என்பதாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும்.**

மனிதர்களின் முக்கிய தேவைகள் மூன்றெனக் கணிக்கப்பட்டுள்ளன. உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றுமே அவையாகும். இவை மூன்றுக்கும் அடுத்ததாகவே ஏனைய தேவைகள் நோக்கப்படுகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் நோக்கும்போது தமது அத்தியாவசிய தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பல பில்லியன் கணக்கான மக்கள் வாழ்கின்றனர். வளர்ந்த நாடுகளில் கூட இந்த நிலை காணப்படுகின்றது. உலகின் தலையாய நாடு என அழைக்கப்படும் அமெரிக்காவில் கூட வீட்டு வசதிகள் கிடைக்காத நிலையில் பலர் தெருவோரங்களில் பொழுதைக் கழிப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த நாட்டிலேயே இந்த நிலை என்றால் வறுமையில் உழலும் நாடுகளைப் பற்றிக் கூறத் தேவையில்லை. குறிப்பாகப் பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

ஒருசில நாடுகள் தவிர்ந்த பெரும்பான்மையான ஆபிரிக்க நாடுகளில் பஞ்சமும், பட்டினியும் தலை விரித்து ஆடுவதைக் காண முடிகின்றது. ஒட்டி உலர்ந்த வயிறும், குழி விழுந்த கன்னங்களும், எலும்பும் தோலுமான உருவமுமாக அந்த நாடுகளில் வாழும் மக்கள் காட்சியளிப்பதைக் காணும்போது மனதில் ஏற்படும் வேதனையைக் கட்டுப்படுத்த முடியாது. அதிலும் பெரிய தலைகளுடனும், உலர்ந்த உடல்களுடனும் காட்சி தரும் குழந்தைகளைக் காணும்போது இரக்க குணமில்லாதவர்களின் கண்களும் கண்ணீர் வடிக்கும். கடும் வறட்சியும், தேவையான உணவுகளை உற்பத்தி செய்ய முடியாத அவல நிலையும் இந்த மக்களை மீண்டெழ முடியாததொரு அவலத்துக்குள் தள்ளி விட்டுள்ளன. இந்த நாடுகளில் ஐ.நா. உள்ளிட்ட பல தரப்பினரதும் நிவாரணப் பணிகள் இடம்பெறுகின்ற போதிலும் அவை அங்குள்ள மக்களின் அவலத்தை இதுவரை முழுமையாக நிறைவேற்றியதாகத் தெரியவில்லை. போதியளவு நிதி கிடைக்காமையும், இதற்கான முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது. தற்போது நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக உணவு உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் நிலைமை மேன்மேலும் மோசமாகும் சாத்தியங்கள் தற்போதே தென்படத் தொடங்கி விட்டன.

மக்கள் தொகைப் பெருக்கத்துக்கு ஏற்றவாறு சகல உற்பத்திகளும் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான மந்த நிலை காரணமாக உற்பத்திகளிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால் ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதுடன் வேலையற்றவர்களின் எண்ணிக்கையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. வளர்ந்த நாடுகளே பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களை எதிர்கொள்ளும்போது வறிய நாடுகளின் நிலை பற்றிக் குறிப்பிடத் தேவையில்லை.

ஆனால் பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் பெரும் இடைவெளியைக் காண்பித்து வருகின்றன. இந்திய நாட்டை எடுத்துக் கொண்டால் உலகின் பெரும் கோடீஸ்வரர்கள் பலர் அங்கு உள்ளனர். அந்த நாட்டின் பொருளாதாரத்தை அவர்கள் தான் கட்டுப்படுத்தி வருகின்றனர். ஆனால் அந்த நாட்டின் மறுபக்கத்தில் ஒருவேளை உணவு கூட கிடைக்காத நிலையில் கோடிக் கணக்கான மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். இவர்கள் உணவு மட்டுமல்ல. உடையும் இல்லிடமும் கூடக் கிடைக்காத நிலையில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தியா ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடென எவ்வாறு கூற முடியும்?


எமது நாட்டில் கூட இந்த நிலைதான் காணப்படுகின்றது. ஒருபுறம் அபிவிருத்தி என்ற பெயரில் புதிது புதிதாக விமான நிலையங்களும் துறைமுகங்களும் பல்லாயிரம் கோடிக் கணக்கான ரூபா செலவில் நிர்மாணிக்கப்படுகின்றன. வீதிகள் புதுத் தோற்றம் பெறுகின்றன. அதிவேக சாலைகளில் வாகனங்கள் தலைதெறிக்கப் பயணிக்கின்றன. முழுநாடும் செல்வச் செழிப்பில் திளைப்பதைப் போன்றதொரு தோற்றம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் இங்கு வாழும் மக்களின் உண்மையான நிலையை எவரும் கணக்கில் எடுப்பதாகத் தெரியவில்லை. எல்லாமே மூடிமறைக்கப்படுகின்றன.


போரின்போது போர் வலயத்தில் மட்டுமல்ல தமிழர் பிரதேசத்தின் சகல பகுதிகளிலும் அமைந்திருந்த மக்களின் இல்லிடங்கள் அழிக்கப்பட்டன. இன்று கூட சில இடங்களில் இவற்றின் பரிதாப நிலையைப் பார்க்க முடிகின்றது. வீடுகளை இழந்த மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் அவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையான அளவில் உதவவில்லை என்றே கூறவேண்டும். குறைந்த நிதியை வழங்கிவிட்டு அதிலும் இரண்டு மடங்கு பெறுமதியான வீடுகளை அமைக்குமாறு வறிய நிலையிலுள்ள மக்களை வற்புறுத்துவது எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை. இத்தகைய பலர் கடனாளிகளாக மாறியுள்ளதுடன் தாம் வைத்திருந்த நகைகளையும் இழந்து நிர்க்கதியான நிலையில் காணப்படுகின்றனர். சிலர் தமது வீடு அமைந்துள்ள காணிகளை ஈடுவைத்து வீடுகளைப் பூர்த்தி செய்ததாகவும் கூறப்படுகின்றது. இந்தியா இனப் பிரச்சினையில் தமிழர்களுக்கு உதவாது விட்டாலும் வீட்டுத் திட்டத்தின் மூலமாகவாவது உதவியிருக்க முடியும். அதே சமயம் இந்த மக்களின் அவல நிலையை இங்குள்ள அரசியல் வாதிகள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. வடமாகாண முதலமைச்சர் இது தொடர்பாக கவனம் செலுத்தியதுடன் அவர்களுக்கு வேறு எந்த விதத்திலாவது உதவ வேண்டுமென அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். எது எப்படி இருந்த போதிலும் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலமாகப் பாதிக்கப்பட்ட வறிய நிலையிலுள்ள, மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவுவதென்பது அனைவரதும் கடமையாகும். மனிதர்கள் இந்த உலகிலே ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவர்களல்லர். சில பத்து ஆண்டுகளுடன் இந்த உலகுடனான தொடர்புகளை அவர்கள் துண்டித்துக் கொள்கின்றனர். இந்த அற்ப காலத்தில் அவர்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ்வதற்கு ஏனையவர்களும் உதவி புரிதல் வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்தல் என்பது மகத்தான பண்பாகும். ஒரு சிலர் பணத்துக்கு மேல் பணத்தைக் குவித்து வைத்திருக்கும்போது வேறு சிலர் ஒரு ரூபா நாணயத்துக்குக் கூட வக்கில்லாத நிலையில் வாழ்வது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

ஆகவே எல்லோரும் எல்லாமும் பெற்று வாழும் ஒரு புதிய உலகைப் படைப்பதற்கு நாம் அனைவரும் முன்வரவேண்டும். துயரம் என்பதை கடந்து போனதொரு கனவு என்பதாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். ஏழைகள், பணக்காரர் என்ற பாகுபாடு இந்த உலகிலிருந்தே மறைந்து ஒழிய வேண்டும். அந்தப் பொன்னான நாளுக்காக நாம் அனைவரும் காத்திருப்போம்.

# மனச்சோர்வை எப்படி சமாளிப்பது?

எப்படிப்பட்ட வலிமையான மனிதரையும், மனச்சோர்வு எளிதில் வீழ்த்திவிடும். ஆனந்தமும் வேதனையும் கலந்தது தான் வாழ்க்கை. ஆனால் மனச்சோர்வுடன் இருக்கும்போது எமது வாழ்க்கையில் நிகழ்ந்த சோகமான விடயங்கள் மட்டுமே நினைவுக்கு வரும். மனச்சோர்விலேயே உழன்று கிடப்பதால் சாதிக்கப் போவது ஒன்றும் இல்லை. அதிலிருந்து வெளியே வந்தால், நம்மைப் போல மனச்சோர்வில் அகப்பட்டவர்களுக்கும் உதவலாம். இதனால் நம்மைப் போன்ற பிற மனிதர்களுடைய வாழ்க்கையும் இனிமையாக இருக்க வகை செய்யலாம்.
இத்தகைய மனச்சோர்வில் இருந்து வெளிவருவது எப்படி என்பதை நோக்குவோம்.





### உடற்பயிற்சி செய்வது

மன அழுத்தத்தை நீக்க சிறந்த வழி உடற்பயிற்சி. இது நல்ல உடல் அமைப்பைக் கொடுப்பது மட்டுமன்றி, நேரிடையான சிந்தனைகளையும் அதிகரிக்கின்றது. உணர்வுகளைச் சீர்ப்படுத்துகின்ற செரோடொனின் மற்றும் டெஸ்டோஸ்டெரோன் ஆகியவற்றை சுரக்க உடற்பயிற்சி உதவுகின்றது. அத்தோடு மனச்சோர்வு அளிக்கும் சிந்தனைகளையும் ஒதுக்கிவிடுகின்றது.



### உதவி கேட்பது

வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளைக் கையாள உதவி கேட்பதில் எந்த அவமானமும் இல்லை. வாழ்க்கையின் சுமைகளை தனியாக சுமக்க வேண்டும் என்று யாரும் எதிர்பார்ப்பது இல்லை. எனவே தாய், தந்தை, துணைவர், உடன் பணியாளர் அல்லது நண்பர் இடம் இருந்து உதவி கேட்பது உணர்வுச் சுமையை ஓரளவு குறைக்கும்.

### சமச்சீர் உணவு

பழங்கள், காய்கறிகள், மாமிசம், தானியங்கள் மற்றும் கார்போஹைட்ரேட் ஆகிய ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுதல், சிந்தனை சிதறாமல் இருக்க உதவுகின்றன. சமச்சீர் உணவு உடல்நலனையும், மனநலனையும் சீர்ப்படுத்துகின்றது.

### சுய விழிப்புணர்வு

வாழ்க்கையின் நிகழ்வுகளை சரியாக புரிந்து கொள்ள முடியாமல், தங்களை அளவுக்கு மீறி அழுத்துவதால் நாங்கள் பொதுவாக மனச்சோர்வு அடைகிறோம். எனவே



சரியாக எம்மைப் புரிந்து கொண்டு, அதை சந்தோஷமாக விரும்பி செய்தால், மனச்சோர்வானது நீங்கும்.

### எடை குறைத்தல்

மனச்சோர்வுக்கு அதிகமான எடை பிரச்சினையாக இருந்தால், எடையைக் குறைக்க முயல்வது ஒரு நல்ல தீர்வைத் தரும். உடல் வலிமை ஆரோக்கியத்தையும், சுய கருத்துக்கும் நேர்மறையான சிந்தனையைக் கூட்டுகின்றது.



### நண்பர்கள்

நல்ல நண்பர்கள் தேவையான ஆறுதலையும், வாழ்க்கையின் சோர்வூட்டும் சூழ்நிலையில் இருந்து வெளியே வருவதற்கான ஆலோசனைகளையும் வழங்குவார்கள். மேலும், தேவையுள்ள நேரத்தில், சொல்வதை காதுகொடுத்து கேட்கும் நண்பர்கள் இருந்தால், மனதில் இருக்கும் சந்தேகங்களும், எதிர்மறையான் சிந்தனைகளும் முற்றிலும் மாறிவிடும்.

### குறிப்பு எழுதுவது


தினசரி உணர்வுகளை எழுத்து மூலமாகப் பதிவு செய்வது சுய பரிசோதனை செய்வதற்கும், ஆராய்வதற்கும் ஒரு சிறந்த வழி ஆகும். இவ்வாறு வாழ்க்கையைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்பதை தினமும் பதிவு



செய்தால் மனச்சோர்வில் இருந்து விடுபட ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்.

### எதிர்மறையான மக்களிடம் இருந்து விலகி இருப்பது

தொடர்ச்சியாக பிறரைக் குறைத்துப் பேசுகிறவர்களோடு இருக்க யாருமே விரும்ப மாட்டார்



கள். அப்படிப்பட்ட மக்களிடம் இருந்து விலகி இருப்பது மன அமைதியையும், சமாதானத்தையும் கொடுக்கும்.

### தனிமையாக இருப்பதைத் தவிர்ப்பது


மனச்சோர்வோடு இருக்கும்போது, தனிமையில் இருந்தால் மனம் சோர்வுடன் தான் இருக்குமே தவிர, அமைதியடையாது. அதற்காக எப்போதுமே கூட்டமாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் அவ்வாறு நண்பர்களுடன் சேர்ந்து இருந்தால், அவை முழுமையான தீர்வைக் கொடுக்காவிட்டாலும், மனச்சோர்வு தரும் சிந்தனைகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்பும்.




### சுற்றுலா செல்லல்


எதிர்மறையான சிந்தனைகளை அகற்றுவதற்கு, காட்சி அமைப்பை மாற்றுவது எப்போதுமே உதவியாக இருக்கும். வாழ்க்கையில் நேர்மறையான சிந்தனைகளைக் கொண்டு வர ஒருநாள் பிரயாணம் மேற்கொள்வதற்கு ஈடாக எதுவுமே இல்லை. எனவே மனச்சோர்வின் போது எங்கேனும் வெளியே சென்றால், எளிதில் மனச்சோர்வானது நீங்கும்.

# பிரமிக்க வைக்கும் களிமண் வீடு



64 வயதான கட்டடக் கலை நிபுணர் சுமார் 5,400 சதுர அடிகள் கொண்ட பிரமிக்க வைக்கும் களிமண் வீடு ஒன்றை உருவாக்கியுள்ளார். கொலம்பியாவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வீடு குறித்த கட்டடக்கலை நிபுணரின் 14 வருட உழைப்பில் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.





# தெரிந்தது ஒன்று

## செயற்படுவது வேறுவிதம்?

நாம் ஒவ் வொரு வரும்எப்போதும் சொல் லக் கூடிய ஒன்று எனக்கு எல்லாம் தெரியும. நமக்கு எல்லாம் தெரிந்தால், நாம் ஏன் இன்று பல்வேறு நிலைகளில் கஷ் டப்படுகிறோம்? நமக்கு எல் லாம் தெரியும் என்பது என் னவோ உண்மை. தான் என்று ஏற்றுக் கொள்வோமே. ஆனால் தெரிந்தவற்றின்படி நடக்கிறோமா என்றால், இல்லை என்ற உணர்வே மிஞ்சுகிறது.

இந்த இடைவெளி தான், ஒரு வெற்றியாளனுக்கும் மற்ற வர்களுக்கும் உள்ள வேறு பாடு என்று சொன்னால் மிகை யாகாது.

### பெற்றோர்களால் ஆலோசனை தர இயலாது

ஒருவர் 10,000 ரூபா உழைப் பதாக எடுத்துக் கொண்டால் அவரால் 11,000 உழைத் ததற்கு ஈடாக பணத்தைச் செலவிட முடியும். அதற்கு அவர் பணத்தை உபயோகிக் கும் முறையை அறிந்து கொள்ள வேண்டும். பலர் செய்யும் மற்றொரு தவறு. அவர்களுடைய பெற்றோர்களி டம் முதலீட்டைப் பற்றி அறி வுரை கேட்பது. எனக்குப் பெரியோர் அனைவரிடத்திலும் மரியாதை அதிகமுள்ளது. ஆனால் பெற்றோர் களால், கீழ்க் கண்ட காரணங்களால் நல்ல ஆலோசனை தர முடி யாது, தயவு செய்து சண்டைக்கு வர வேண்டாம்.

அன்று அவர்களுக்குக் கிடைத்த வட்டி வீதம் அதிகம், பணவீக்கம் அதைவிடக் குறைவு.

மேலும் இன்று உள்ளதுபோல அதிக முதலீட்டு முறைகளும் கிடையாது. எனவே பாதுகாப் பான முதலீட்டை அதிகம் விரும்பினார்கள். குறிப்பாக அவர்களுடைய தேவைகள் மிக மிகக் குறைவு. 20- 25 ஆண்டுகளுக்கு முன் னர் வெளியில் உணவகங்களில் சாப்பிடுவது ஒரு கௌரவ குறைச்சல். அதனால் பெற் றோர்கள் ஊருக்குச் சென்றால் அக்கம் பக்கம் உள்ளவர்களிடம் கூறி தமது குழந்தைகளுக்கு உணவு தரச் சொல்வார்கள். கைச் செலவுக்குக் கொடுப்பது என்ற கலாசாரம் கிடையாது.

2. இன்று எல்லாமே தலைகீழ். உணவகங்களுக்குச் செல்ல வில்லை என்றால் நாம் இந்த உலகத்தில் வாழத் தகுதி இல்லாதவர் போல மற்றவர்கள் நினைப்பார்கள். மேலும் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் உள்ளதால் பணத்தை வாரி இறைக்கிறார்கள். இரண்டு கால கட்டங்களும் வேறுபடுவ தால் பாதுகாப் பான முதலீட்டில் நீண்ட கால இலக்குகளை அடைய முடியாது.

3. மேலும் முன்னரெல்லாம் சம்பளம் வாங்கியவுடன் பணத் தைப் பெற்றோரிடம் கொடுத்து ஏதாவது தேவை என்றால் அதை நியாயப்படுத்தினாலே பணம் கிடைக்கும் எனவே, பல தடவை யோசித்த பின்பே கேட்கும் நிலை. அதாவது சம் பாதிப்பது ஒருவர், அதை நிர்வகிப்பது இன்னொருவர் என்பதால் எல்லாம் ஒரு கட் டுக்குள் இருந்தது. இன்று நாம் யாருக்கும் எதுவும் சொல் லத் தேவை இல்லை. எமது கையில் பணம் இல்லா விட் டால் கூட கடன் அட்டை உள் ளது அல் லது சுலப தவணை முறையில் இன்று எதையும் வாங்க முடி யும். ஏற்கெனவே நமக்குப் பணத்தை நிர்வகிக்கத் தெரிய வில்லை. மேலும் நாலா திசை களிலும் செலவுகள் வந் தால் எப்படிச் சமாளிக்க முடி யும்?

### சோம்பேறித்தனம்

இன்று உடற்பயிற்சி செய்வது எமது உடலுக்கு எவ்வளவு நல்லது என்று எல்லோருக்கும் தெரியும், எம்மில் எத்தனை பேர் செய்கிறோம்? எம் முடைய சோம்பேறித் தனத்தால் பல வர்த் தக மையங்கள் உரு வாகிக் கொண்டே வரு கின்றன. அதில் சேர் பவர்களில் 20 வீதம் கூட தொடர்ந்து செல் வதில்லை என்பது வருத்தத்துக்குரிய விட யம். தெரிந்ததை செயற் படுத்துபவர்கள் மிகக் குறைவாக இருப்ப தால் நாம் அவர்களைப் பற் றிய புத்தகங்களைப் படிக்கிறோம்.

சாராம்சம்: இந்த வேறுபாடு ஏன் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது என்று நான் சந்திக்கும் நபர்களைக் கேட்ட போது, எனக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிகிறது. பொதுவான விடயங்களைப் பலர் மேம்போக்காகத் தெரிந்து கொள்கி றார் கள். அவர்களுக்கு எந்த விடயம் தெரிந் தால் வேலை வாய்ப்பு கிடைக்குமோ அதில் மட்டுமே கவனம் செலுத்துகிறார்கள்.

இன்று அதிக தொழில் கள் புதிது புதிதாகத் தோன்றுவதால் நிறைய ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள் அதனால் அந்தத் தொழி லுக்கு யார் தேவைப் படுகிறார் களோ அவர் களை வேலைக்கு எடுக்க வேண்டிய நிர்ப் பந்தத்தில் உள்ள தால, பொதுவான அறி வைப் பற்றி யாரும் கவ லைப் படுவதில்லை.

நாம் தெரிந்து கொண்ட விடயத்தில் 5 சத வீதத்தைக் கடைப் பிடித்தால் கூட எம் மால் பெரிய அளவுக் குச் சாதிக்க முடியும். இந்தத் தமிழ் புத் தாண்டு முதல் நாம் கற்று கொள்கிற எந்த ஒரு விடயமாக இருந் தாலும் அதை 100 வீதம் செயற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

இந்த எண்ணம் எம் மிடம் ஏற்பட்டால் நாம் வாழ்வில் வெற்றி பெறு வதோடு முதலீட் டிலும் வெற்றி பெறலாம். எம்மைப் பற்றி எமது எதிர்கால சந்ததியினர் படிக்கக் கூடும்.



LOLC மைக்ரோ கிரெடிட்



# நிகரற்ற நிறுவனம் நிகரற்ற எதிர்காலம்

தொழில் நிபுணத்துவத்துடன் வெற்றிகரமான பயணத்தை ஆரம்பியுங்கள்

அபிவிருத்தியின் பாதையில் வெற்றி நடைபோட ஆரம்பித்திருக்கும் எமது தேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வரும் LOLC வியாபார நிறுவனத்தின் துணை நிறுவனமான LOLC மைக்ரோ கிரெடிட் நிறுவனம், கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் இலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த கால்களில் எழுந்து நிற்க பக்க பலமாய் இருந்த இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமாக பெயர் பெற்றுள்ளது. எமது இந்த வெற்றியின் இரகசியம் யாதெனில், எம்முடன் இணைந்துக் கொண்ட இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களுடன் நாம் ஏற்படுத்திக்கொண்ட நல்லுறவும், எந்நேரமும் அர்ப்பணிப்புடன் செயலாற்றக் கூடிய எமது ஊழியர் குழாமின் அயராத உழைப்புமேயாகும். வாடிக்கையாளர் சேவைக்கான சான்றிதழை வென்ற ஒரே நுண் நிதி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்ட இந்நிறுவனம், 2013ம் ஆண்டு "இந்நாட்டில் தொழில் புரிவதற்கு சிறந்த நிறுவனம்"என்ற பிரிவில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பில், இலங்கையில் தொழில் செய்வதற்கு சிறந்த 05 நிறுவனங்களில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அந்த பெருமையோடும் கௌரவத்தோடும் எமது உன்னத சேவைகளையும் செயற்பாடுகளையும் மென்மேலும் விஸ்தரிப்பதற்கு நாம் முடிவு செய்துள்ளோம். இந்த புதிய அத்தியாயத்தில் நீங்களும் ஓர் அங்கமாய் இணைந்து கொண்டு, எமது வெற்றிப் பயணத்தில் வீறுநடை போட உங்களையும் அன்போடு அழைக்கின்றோம்

## உடனடி நேர்முகத் தேர்வு

### நுண் நிதி மேற்பார்வையாளர் (Micro Finance Supervisor)

**பிரதான கடமைகளும் பொறுப்புக்களும்**

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

- வயது 30-35 வரை

### நுண் நிதி அலுவலர்கள் குழுமக் கடன் மற்றும் சொத்து (Group Loan & Asset Backed )

**பிரதான கடமைகளும் பொறுப்புக்களும்**

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

- வயது 19-27 வரை

### வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (Customer Service Assistant)

**பிரதான கடமைகளும் பொறுப்புக்களும்**

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

- வயது 18-24 வரை

### காசாளர் (Cashier)

**பிரதான கடமைகளும் பொறுப்புக்களும்**

**தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவம்**

- வயது 21-24 வரை
- MS Office Package குறித்த அறிவு அத்துடன் AAT

| திகதி | நேரம் | இடம் | தொடர்புடைய பிரதேசம் |
|---|---|---|---|
| 30.04.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | [illegible] | [illegible] |
| 30.04.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 02.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 06.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | [illegible] | [illegible] |

| திகதி | நேரம் | இடம் | தொடர்புடைய பிரதேசம் |
|---|---|---|---|
| 07.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | A9 [illegible] | [illegible] |
| 07.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 08.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 08.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | [illegible] | [illegible] |
| 08.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| [illegible] | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 13.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |
| 13.05.2014 | மு.ப. 9.00 - பி.ப. 4.00 | LOLC [illegible] | [illegible] |

மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்

# குடாநாட்டின் நீர்வளமும் குடிநீருக்கான தேவையும்

**யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீரின் (விவசாயம் மற்றும் குடிநீர்) தற்போதைய இருப்பு**
**மாரியில் - 34,960 கன மீ/நாள் கோடையில் - 13,100 கன மீ/நாள்.**
**தற்போது தேவைப்படும் குடி நீரின் அளவு 50,000 கன மீ/நாள்**




**சுன்னாகம்**
மாரி 19,200 கன மீற்றர்/நாள்
கோடை 5,000 கன மீற்றர்/நாள்

**வடமராட்சி**
மாரி 8,800 கன மீற்றர்/நாள்
கோடை 4,500 கன மீற்றர்/நாள்

யாழ் குடா நாட்டின் குடி நீர்த்தேவை 50,000 கன மீ/நாள் ஆகும்

**தென்மராட்சி**
மாரி 6,600 கன மீற்றர்/நாள்
கோடை 3,600 கன மீற்றர்/நாள்

**ஊர்காவற்றுறை**
மாரி 360 கன மீற்றர்/சராசரி நாள்
கோடை - நீரை உறிஞ்சுவதை தவிர்ப்பது நன்று

**குடாநாட்டின் குடி நீர்த் தேவை**

| தற்போதைய சனத்தொகை | 2028 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை | 2028ல் சராசரி நாளுக்கான தேவை |
|---|---|---|
| 607,158 | 926,116 | 88,500 கன மீற்றர் |

குடாநாட்டு நீர் பற்றாக்குறையாகவும், மாசடைந்தும் காணப்படுவது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நீர் வளச் சபையினால் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அயல் மாவட்டத்திலிருந்து நீர் கொண்டு வருதலே இதற்குரிய தீர்வாகும்.

## யாழ் குடாநாட்டில் தற்போதுள்ள குடிநீர் விநியோகம்

- யாழ் குடாநாட்டில் 1950ம் ஆண்டுகளிலிருந்து சிறியளவிலான குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு மணித்தியால குடி நீரைக் கூட வழங்க முடியாதுள்ளதுடன் அத்திட்டங்களை விஸ்தரிக்கவும் முடியாதுள்ளது.

## யாழ் நீரின் தன்மை

- அதிகமான இரசாயன பாவனை காரணமாக நிலத்தடி நீரின் நச்சுத்தன்மை அதிகரித்து வருகின்றது.
- அளவுக்கு அதிகமான நீர்ப்பாவனையினால் நிலத்தடி நீர் குறைந்து உப்பாகி வருகின்றது.
- நகரப்பகுதியில் ஒழுங்கற்ற மலசலகூட அமைப்புக்களினால் நிலத்தடி நீர் பாதிப்படைந்து கிருமித்தொற்று அதிகமாகியுள்ளது.

## ஆறுமுகம் திட்டம் எனப்படும் 'யாழ்ப்பாணத்திற்கான ஆறு' திட்டம் பற்றிய விளக்கம்

### திட்டத்தின் சாதக நிலைகள்

- இத்திட்டம் கடல் நீரால் ஏற்படும் உவர்தன்மையைக் குறைக்கும்
- கடனீரேரியை அண்டிய உவர் நிலப்பகுதி விவசாயத்திற்கு ஏற்புடையதாக மாறும்.
- வீணாகப் போகும் நன்னீரை சேமிப்பதன் மூலம் நீண்டகாலத்தற்கு நிலத்தடி நீர் இருப்பை உறுதிப்படுத்தும்.

### திட்டத்தின் பலவீனங்கள்

- நகர, தீவக குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத்திற்கு பொருத்தமானதல்ல.
- ஆனையிறவு கடனீரேரி நன்னீராகும் போது அதில் தங்கியுள்ள உயிரினங்கள் பாதிப்படையும்.
- சூழல்தொகுதி பாதிப்படைய வாய்ப்புள்ளது..
- அதிக பரப்பும் ஆழம் குறைந்த தன்மை காரணமாகவும் கோடை காலத்தில் நீரின் சேமிப்பு கேள்விக் குறியாகும்.
- திட்டத்தை பயன்படுத்தி நிலத்தடி நீரை மேம்படுத்த நீண்டகாலம் தேவை





**குடிநீர் வழங்குவது பொதுநலக் கடமை!**
**நன்னீர் பெறுவது தனி மனித உரிமை!**



## யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

மொத்த திட்ட செலவு ; ரூபா 2,300 கோடி

திட்டப் பயனாளிகள்:

| | |
|---|---|
| குடி நீர் வழங்கல் | - 300.000 பேர் (யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில்) |
| கழிவகற்றல் சுகாதாரம் | - 80.000 பேர் (யாழ் மாநகர சபை பகுதியில்) |
| நீர்ப்பாசனம் | - 55.000 பேர் (கிளிநொச்சி விவசாயிகள்) |

**இத்திட்டத்தினூடாக கிளிநொச்சி யாழ் மக்களுக்கு சுத்தமான குடி நீரை வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன் கழிவு நீரகற்றும் திட்டத்தையும் செயற்படுத்தி நிலத்தடி நீரினைப் பேணுவதுடன் கிளிநொச்சி மக்களின் விவசாய வாழ்வாதாரத்தையும் வளப்படுத்துவோம்!**

திட்டப் பணிப்பாளர் காரியாலயம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்
















## பரத நாட்டிய மற்றும் குச்சிப்புடி நடனக் கலைஞர் தவராஜா மோகனப்ரியனின் ஆற்றுகை

பரத நாட்டிய மற்றும் குச்சிப்புடி நடனக் கலைஞரான தவராஜா மோகனப்ரியன் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டு வளர்ந்துவரும் கலைஞர்.

மட்டு புனித மைக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் நாட்டியத்துறைக்கான இளநுண்கலை மற்றும் முது நுண்கலை ஆகிய பட்டப்படிப்புக்களிலும் பாரதிதாசன் பல் கலைக் கழகத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். அத்துடன் பல்வேறு நடின வடிவங்களையும் அவர் கற்றுள்ளார்.

இவர் கல்வி கற்கும் காலத்தில் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியில் பகுதிநேர பரத நாட்டிய மற்றும் குச்சுப்புடி ஆசிரியராகப் பணிபுரிந்தார். 50 இற்கும் மேற்பட்ட மாணவர் களுக்கு பரதம் மற்றும் குச்சிப்புடி அரங்கேற்றத்தையும் நிகழ்த்தியுள்ளார். இவை தவிர வளரும் நடனக் கலைஞர்க ளுக்கான சிறப்புப் பயிற்சிப் பட்டறையையும் பல்வேறு நாடு களிலும் வழங்கி வரு கின்றார்.

விஸ்வகலா ஸ்ரீமதி நீலா சத்தியலிங்கத்தின் கீழ் தற்போது சிங்கப்பூரின் தேசிய கலைப் பேரவையின் கீழ் இயங்கும் அப்சராஸ் கலை நிறுவனத்தின் நடனப் பயிற்றுவிப்பாளராகவும் வடிவமைப் பாளராகவும் முன்னணி நடனக் கலைஞராகவும் பணிபுரிகிறார்.

அவர் வளரும் சாதனையாளர், நாட்டியக் கலை அரசன், நடனக் கலை அரசன், சுவாமி விவேகானந்தர் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார். (வ-10-86)





# பெண்கள் அதிகம் சிரிப்பது ஏன்?

ஸ்டேன்போர்ட் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றின் போது, 10 பெண்களிடமும், 10 ஆண்களிடமும் நகைச்சுவைக்கான சித்தி ரங்கள் கொடுக்கப்பட்டு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் கண்காணிக்கப்பட்டன.

நகைச்சுவைச் சித்திரங்கள், படங்களில் இருந்த நகைச்சுவையான வசனங்கள் அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிரிப்பை வர வழைத்தது. இதில் பெண்கள் நீண்ட நேரம் சிரித்தபடி இருந்தமை தெரிய வந்துள்ளது. இதற்கு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகும்.

அதாவது பெண்களின் மூளை யின் கார்டெக்ஸ் பகுதிக்கு முந்தைய அடுக்கு இதில் முக்கிய பங்காற்றுகிறது.

அவர்களின் மூளை விவேகமாகச் செயற்படுவதுடன் அதிக எதிர்பார்ப்பின்றி இருக்கிறது. எனவே இயல்பான நகைச்சுவைகள்கூட அவர்களுக்கு சிறப்பாகத் தெரிகின்றன. இதனால் பெண்களின் மூளை எளிதில் சிரிப்பைத் தூண்டி விடுகிறது. அத்துடன் நகைச்சுவை சற்று கூடுதலாக இருந்தால் பெண்கள் இடைவிடாமல் சிரிக்க ஆரம்பித்து விடுகின்றனர்.

சு.சாரங்கி

# குழந்தையின் அழுகை

## முழுமையான ஆரோக்கியத்தை வெளிப்படுத்தும்

“ அழும் குழந்தையை நீங்கள் சற்றே கவனமாகப் பார்த்தால், அதிக தசைகள், மூட்டுகள் அல்லது உடல் முழுமையையும் முறுக்கிக் கொண்டோ அல்லது திரும்பிக் கொண்டோ இருக்கும். உண்மையில், இது குழந்தைக்கானஉடற்பயிற்சி எனலாம்! ஆனால், குழந்தைகள் எப்பொழுதுமே இவ்வாறுதங்கள் உடலை அசைத்துக் கொண்டிருப்பதில்லை.

உங்களுடைய குட்டிக் குழந்தை அவ்வப்போது அடிவயிற்றிலிருந்து குரல் கொடுத்து அழுவது ஏன் என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், இவ்வாறு அழுவதன் காரணமாக குழந்தையால் தன்னுடைய தேவைகளைக் குறிப்பிடமுடிவதுடன் தாயின் எண்ணங்களுடனும் இணைய முடிகிறது. 'இவ்வாறு அழுது குழந்தை தன்னுடைய தேவையை வெளிப்படுத்தவும், அதை உணர்ந்து தாய் குழந்தையைக் கவனிக்கவும் செய்யும்போது, அவர்களுக்கு இடையிலான பந்தம் மேம்படுகிறது' என்கிறார் குழந்தைகள் நல மருத்துவரான ஷா.

அழும் குழந்தைக்கு ஆறுதல் தேவைப்படும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், அந்த அழுகையை எப்படி அடக்கலாம் என்று நீங்கள் மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கும் போது, அதன் அழுகையானது குழந்தையின் ஒட்டுமொத்த ஆரோக் கியத்தைக் குறிப்பிடுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? என்ன ஆச்சரியமாக உள்ளதா? தொடர்ந்து படித்து பாருங்கள்.

### முதல் அழுகையின் முக்கியத்துவம்

நீங்கள் மிகவும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த சத்தம் தான் இது. இந்த அழுகை உங்களுடைய குழந்தையின் வருகையை தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், உங்களுடைய வாழ்க்கையின் புதிய பரிணாமத்தையும் பறைசாற்றுகிறது. 'இந்த அழுகை குழந்தை காற்றை உள்ளிழுத்து சுவாசிக்கவும் மற்றும் குடல்கள் காற்றைப் பெறும் வகையில் திறக்கவும் செய்ய உதவுகிறது. அழுவதன் மூலம் குடல் பகுதி உறுதியடைவதை அனைத்துப் பெற்றோர்களும் அறிந்திருந்தாலும், மேற்கண்ட' ஜீட்ரிக்' நடப்பது முதல் அழுகையில் மட்டுமே. ஏனைய நேரங்களில் இந்த அறிகுறிகள் குழந்தையின் துயரத்தையே வெளிப்படுத்துகின்றன', என்றும் சொல்கிறார் மருத்துவர் ஷா. எனவே, உங்களுடைய குழந்தை தன்னுடைய முதல் அழுகையை தொடங்கும்போது, அனைத்தும் கட்டுப்பாட்டில் உள்ளன என்று நீங்கள் பெருமூச்சு விடலாம்.

### தொடர்பு கொள்ள உதவுதல்

குழந்தையிடம் அழுகை இல்லாதபோது அவர்களுக்கு என்ன தேவை என்பதை உங்களால் கண்டுணர முடியாது. 'அழுகை பல்வேறு காரணங்களுக்காகவும் மற்றும் மாறுபட்ட சத்தங்க ளுடனும் வருகிறது. காலப்போக்கில் குழந்தையின் அழுகையை வைத்து என்ன தேவை என்று தாயால் கண்டறிய முடியும்', என்கிறார் மருத்துவர் ஷா. எனவே, உங்களுடைய குழந்தை அழும் போது, அவர்கள் பசிக்காக அழுகிறார்களா, நப்கினை மாற்று வதற்காக அழுகிறார்களா, சூடு அல்லது குளிரை உணர்ந்து அழுகிறார்களா, அவர்களுக்கு அரவணைப்பு தேவ்வைப்படுகிறதா அல்லது கவனத்தை ஈர்ப்பதற்காக அழுகிறார்களா என்பதைக் கவனியுங்கள். 'அவர்களுடைய அழுகை உங்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ள உதவும் ஊடகமாக இருப்பதால் அழுகையைக் கொண்டு மட்டுமே அவர்களுடைய ஆரோக்கியத்தை உங்களால் அறிய முடியும், இது குழந்தையின் அன்பான மொழியாகும்', என்று விளக்கம் தருகிறார் மருத்துவர் ஷா.

### மன ரீதியான ஆரோக்கியத்துக்கு உதவுதல்

உங்களுடைய குழந்தையை நீங்கள் ஆற்றுப்படுத்தும் போது, அக்குழந்தை தனியாக இல்லை என்ற செய்தியை குழந்தைக்கு நீங்கள் கொடுக்கிறீர்கள். 'பெரியவர்களில் அதிகமானோர் குழந்தையிடம் ஒழுக்கத்தைக் கொண்டு வரும் பொருட்டாக அழும் குழந்தையை கவனிக்கக்கூடாது என்பார்கள். ஆனால், குழந்தையின் ஆரம்ப மாதங்களில் ஒழுக்கத்தை விட குழந்தையைக் கவனிப்பது தான் முக்கியமான தேவையாகும். இதன் மூலம் குழந்தை பாதுகாப்பாக இருப்பதை உணர்கிறார்கள்; இவ்வாறான கவனிப்பு மற்றும் அன்புடன் வளரும் குழந்தை ஒரு நல்ல மனிதனாக உருவாகிறார்கள். ஒவ்வொருமுறை அழும்போதும் கவனத்தைப் பெறாமல் இருக்கும் குழந்தை அமைதியாக படுத் திருந்தாலும், காலப்போக்கில் அவர்களுடைய மனரீதியான ஆரோக் கியம் பாதிக்கப்படும். உண்மையில், அமைதியாக இருக்கும் குழந் தைகள் மன ரீதியாக உள்ளுக்குள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்' என்கிறார் மருத்துவர் ஷா.

### தசையை நீட்சியடையச் செய்ய உதவுதல்

அழும் குழந்தையை நீங்கள் சற்றே கவனமாகப் பார்த்தால், அதிக தசைகள், மூட்டுகள் அல்லது உடல் முழுமையும் முறுக்கிக் கொண்டும் மற்றும் திரும்பிக் கொண்டும் இருக்கும். உண்மையில், இது குழந்தைக்கான உடற்பயிற்சி எனலாம்! ஆனால், குழந்தைகள் எப்பொழுதுமே இவ்வாறு தங்களது உடலை அசைத்துக் கொண்டிருப் பதில்லை. எனவே, இவ்வகையில் முறுக்கிக் கொண்டு அழும்போது அதற்கு மருத்துவ ரீதியான காரணங்கள் அல்லது வயிற்று வலி இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். அதே போல நீண்டநேரம் அழும் குழந்தையை அப்படியே விட்டுச் செல்ல வேண்டாம்.

### அதிகமான உணர்வுகளை வெளிப்படுத்த உதவுதல்

குழந்தைகளின் உணர்வுகளையும் கூட கண்ணீர் வெளிப்படுத்தும் என்பதில் ஆச்சரியம் இல்லை. அவர்கள் கோபமாக இருக்கும் போது மற்றும் உங்களுடைய குழந்தையின் ஆணைக்கு நீங்கள் இணங்க மறுக்கும்போது, அந்த ஏமாற்றத்தை அழுகையாக வெளிப்படுத்த குழந்தை முயற்சி செய்யும். இதற்காகப் பயப்பட வேண்டாம். இதன்மூலம் குழந்தையின் உணர்வுகள் வெளிப்படும். 'உங்களுடைய குழந்தை அழுவதை மற்றும் தேவை அல்லது ஆசையை வெளிப்படுத்துவதைக் கேளுங்கள். குறிப்பாக தவழும் குழந்தைகளிடம். அதன் பின்னர் அவர்களுடன் பேசுங்கள் அல்லது கவனத்தை திசை திருப்புங்கள். இதன் மூலம் குழந்தையின் கோபத்தைக் குறைக்கவும் உணர்ச்சிகளை சமநிலைப்படுத்தவும் முடியும் என்கிறார் டாக்டர் ஷா.






தென்னிந்தியாவில், தென்னாலி என்ற கிராமத்தில் ராமன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். ராமன் மிகவும் நல்லவன். எல்லோருக்கும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யும் நல்ல குணம் படைத்தவன்.

ஆனால், அவன் மிகவும் குறும்புக்காரன். மற்றவர்களைக் கேலி செய்வது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் வீதியோரத்திலும், பூங்காக்களிலும் விளையாடிப் பொழுதை வீணாக்கி வந்தான்.

ஒருநாள், அந்த ஊருக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் இமயமலைச் சாரலிலே பல வருடங்கள் கடும் தவம் புரிந்து, அரிய சித்திகள் பல பெற்றவர், பல அபூர்வ சக்திகள் உடையவர்.

தென்னாலி ராமன் அவரை வணங்கினான். அவருக்குப் பல பணிவிடைகள் செய்தான். அவனது பக்தியையும், நேர்மையையும் கண்டு முனிவர் மனம் மகிழ்ந்தார். ஆனால், அவன் தனது நேரத்தை வீணாக்கித் திரிவதை அறிந்து கவலைப்பட்டார். ராமனை அருகே அழைத்தார்.

'மகனே, இந்தச் சிறு வயதில் நீ நல்ல பிள்ளையாகப் பள்ளிக்கூடம் சென்று படிக்காமல், உன் பொன்னான நாள்களை வீணாகக் கழித்து விட்டாய். சோம்பித் திரிபவர் தேம்பித் திரிவார் என்பது பழமொழி. நீ சோம்பேறியாக இருக்காதே. அப்போதுதான் எதிர்காலத்தில் நீ உயர்ந்த நிலையை அடைய முடியும்' என்று புத்தி கூறினார்.

ராமன் அவரை அன்போடு வணங்கினான். 'ஐயா, எனக்கு யாரையும் தெரியாது. இன்றுவரை யாரும் எனக்கு இப்படி நல்ல புத்தி சொன்னதில்லை. அதனால் இப்படியே வளர்ந்து விட்டேன். இனிமேல் நீங்கள் சொன்னபடி செய்வேன்' என்றான்.

'நல்லது, மகனே. நான் உனக்கு ஒரு மகத்தான மந்திரத்தைச் சொல்லித் தருவேன். இது மகா காளி மந்திரம். இந்தக் கிராமத்து எல்லையில், ஒரு மலை உச்சியில், எல்லைக் காளியம்மன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் இருக்கும் காளி தேவி மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். நீ நாளை அதிகாலையில் அந்தக் கோயிலுக்குப் போ. அங்கே, காளி தேவியின் சந்நிதியில் அமர்ந்து, இந்த மந்திரத்தை லட்சத்து எட்டு முறை ஜபம் பண்ணு. அப்போது, காளி தேவி உன் முன்னே தோன்றி, நீ வேண்டும் வரத்தைத் தருவாள். உன் வாழ்க்கையில் நன்மை உண்டாகும்' என்று கூறினார்.

பின்னர், ராமனுக்கு அந்த மந்திரத்தைக் கற்றுக் கொடுத்துவிட்டு, வேறு ஊருக்குப் பயணமானார்.

மறுநாள் அதிகாலையில், சூரிய உதயத்துக்கு முன்னர், ராமன் அந்த மலையில் ஏறினான். மலை உச்சியை அடைந்தான். அங்கே, ஒரு பழைய கோயில் இருந்தது. அந்தக் கோயிலின் கருவறையில் காளி தேவியின் உருவச் சிலை இருந்தது.

ராமன், தான் கொண்டு சென்ற மலர் மாலைகளை அந்தக் காளிதேவியின் சிலைக்கு அணிவித்தான்.

பின்னர், காளிதேவியின் சிலைமுன் அமர்ந்து, முனிவர் கற்றுக் கொடுத்த காளிதேவி மந்திரத்தைப் பயபக்தியுடன் உச்சரிக்கத் தொடங்கினான்.

ராமன் விடாமுயற்சியுடன் அந்த மந்திரத்தை லட்சத்து எட்டு முறை பக்தியுடன் உச்சரித்து முடித்தபோது, அந்த மலை நடுங்கியது. எங்கிருந்தோ கடகட என்று சத்தம் கேட்டது. அப்போது…………

அவன்முன்னே இருந்த சிலை மறைந்தது. அங்கே, கண்களைப் பறிக்கும் பிரகாசமான ஒளி வெள்ளத்தில் காளிதேவி தோன்றினாள். அன்னை காளிதேவி ஆயிரம் முகங்களுடன், பார்ப்பவர்கள் பயந்து நடுங்கும் தோற்றத்தில் அங்கே காட்சியளித்தாள்.

ராமனைப் பார்த்து அன்புடன் சிரித்தாள். 'குழந்தாய், உனது பக்தியைக் கண்டு மனம் மகிழ்ந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டுமானாலும் கேள்' என்று கூறினாள்.

பக்தியுடன் தனது கைகளைக் குவித்துக் கொண்டு நின்ற ராமன், திடீரென்று சிரிக்கத் தொடங்கினான். குலுங்கக் குலுங்கச் சிரித்தான். காளி தேவி கடும் கோபம் கொண்டாள். 'அடே, சிறு பயலே, இந்தக் கோலத்தில் என்னை வேறு யார் பார்த்தாலும், அஞ்சி நடுங்கி ஓடி விடுவார்கள். நீ வரத்தைக் கேட்காமல் கோமாளி போல் சிரிக்கிறாய். அதனால், நீ எதிர்காலத்தில் ஒரு கோமாளியாக, விகடகவியாக வாழ்வாயாக' என்று கூறினாள்.

ராமன் ஒரு கணம் சிந்தித்தான். 'தாயே, அதுகூட நல்ல பெயராகத்தான் இருக்கிறது. வி - க - ட - க - வி. விகடகவி. முன்புறமாகப் படித்தாலும், பின்புறமாகப் படித்தாலும், இது ஒரே மாதிரி ஒலிக்கும். நல்ல பெயர்தான், தாயே' என்றான்.

அவனது பணிவையும், அப்பாவித் தனத்தையும் கண்டு காளிதேவி மனம் இரங்கினாள். தன் கோபம் தணிந்தாள். 'என்னைப் பார்த்து ஏன் சிரித்தாய்? சொல், குழந்தாய்' என்று கேட்டாள். ராமன் பக்தியுடன் பதில் கூறினான். 'காளி அன்னையே, உனக்கு ஆயிரம் முகங்கள் இருக்கின்றன. ஆனால் இரண்டு கைகள் தான் இருக்கின்றன. எனக்கு ஒரு முகமும் இரண்டு கைகளும் இருக்கின்றன. எனக்குச் சளி பிடித்தால், எனது மூக்கைத் துடைக்க இந்த இரண்டு கைகளும் போதவில்லை. அப்படியிருக்க, ஆயிரம் முகங்களையுடைய உனக்குச் சளி பிடித்தால், இந்த இரண்டு கைகளால் சமாளிக்க முடியாமல் நீ எப்படிக் கஷ்டப்படுவாய் என்று நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்து விட்டது' என்றான். அவனது பதிலைக் கேட்டுக் காளி தேவிக்கும் சிரிப்பு வந்தது. அன்னை காளி தேவி தனது ஆயிரம் முகங்களாலும் அழகாகச் சிரித்தாள்.

ராமன் காளி தேவியின் தெய்வீகச் சிரிப்பின் அழகைப் பார்த்து மயங்கி நின்றான். 'தாயே, உனது சிரிப்பு மிக அழகாக இருக்கிறது' என்று கூறினான். 'மகனே, எப்போதுமே கோப மாகக் காட்சியளிக்கும் என்னையே நீ சிரிக்க வைத்து விட்டாய்.

இன்று முதல் உன் பெயர் தென்னாலி ராமன் என்று வழங்கப்படும். நீ விஜயநகர மன்னனின் அரச சபையில் விகடகவியாக அமர்ந்து, உலகம் முழுவதையும் சிரிக்க வைப்பாய். புகழுடனும், பொருளுடனும் வாழ்வாய். உனது புகழ் என்றும் நிலைத்திருக்கும்' என்று ஆசி வழங்கியபின்னர், காளி தேவி மறைந்தாள்.


காளி தேவிக்கு நன்றி கூறிய பின்னர், தென்னாலி ராமன் புறப்பட்டு, விஜயநகரத்துக்குச் சென்று, மன்னர் கிருஷ்ண தேவ ராயரைச் சந்தித்தான். அவனது புத்தி சாதுர்யத்தையும், எல்லாரையும் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் திறமையையும் கண்ட விஜய நகர மன்னர், அவனுக்குத் தமது அரச சபையில் விகடகவியாகப் பதவி கொடுத்தார்.

ர. அபிசன்


# சிதறல்கள்

- இணையத்தளத்தின் பிறந்த நாள் 20.10.1969
- சராசரியாக ஒரு மனிதன் நடக்கும் போது ஒரு நாளில் 18 ஆயிரம் அடிகளை எடுத்து வைக்கிறான்.
- பெண்களை விட ஆண்களுக்கு 40% வீதம் வியர்க்கும்
- 55 வயதை நெருங்கும் போது ஏறக்குறைய 50% பேரின் பற்கள் விழுந்து விடும்.
- கணினி மவுஸைக் கண்டறிந்தவர் டக்ளஸ் ஏங்கல்பார்ட்
- உலகிலே அதிக அளவு சிலை வடிக்கப்பட்ட மனிதர் லெனின்
- 365¼ நாள்கள் என்ற கலண்டர் முறையை முதலில் பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்கள்
- சீனாவிலுள்ள சாய்ந்த கோபுரத்தின் பெயர் டைகர் பகோடா.

சி.சிந்து, ஐங்கரன் வீதி
சுதுமலை.



சி.கௌசிகா



## சுறாவைப் பற்றிய தகவல்கள்

சுறாக்களில் பல வகைகள் உள்ளன. திமிங்கிலச் சுறாதான் சுறாமீன் இனத்தில் மிகப் பெரியது. இதனை அதிகபட்ச நீளம் 60 அடியாகும். சுறாமீன் மிகவும் வலிமையானதுடன் விலங்குகளை மிகவும் சுலபமாக வேட்டையாடும் தன்மையும் கொண்டது.

சுறா மீனில் 150 வகை இனங்கள் உள்ளன. ஓரடி நீளத்திலிருந்து 70 அடி நீளம் வரை உருவமைப்பிலுள்ள சுறா மீன்களும் உள்ளன. வெள்ளைச் சுறா மிகவும் கொடூரமானது. 40அடி நீளம் கொண்டது. ஒரு மனிதனை உணவாக உண்ணக் கூடியது. சுறாக்களிலேயே மிகவும் பெரியது திமிங்கிலச் சுறா. 50 அடி நீளமும் 20 தொன் எடையும் கொண்டது. தீங்கு செய்யாது. சுறா மீன்களுக்கு உடலில் எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டாலும் சீழ் பிடிப்பதில்லை.

# மகத்துவ கண்டுபிடிப்புக்களும் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டுகளும்

1. இரத்தச் சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர் - வில்லியம் ஹார்வே-1628
2. புற்றுநோயைக் கண்டுபிடித்தவர் -ரொபர்ட் வெய்ன் பெரி-1682
3. மயக்க மருந்தைக் கண்டுபிடித்தவர் - ஜம்ஸ் சிம்பஸன்-1847
4. போலியே முக்கூட்டு வக்ஸினைக் கண்டுபிடித்தவர் - அல்பெர்ட்சேபின்-1854
5. வெறிநாய்க்கடி சிகிச்சையை அறிமுகப்படுத்தியவர் - லூயிபாஸ்டர்-1860
6. கொலரா, காச நோய்க் கிருமியை கண்டுபிடித்தவர்-றொபர்ட்கோச்-1877
7. இரத்தம் உறைதலைக் கண்டுபிடித்தவர்-பால்ஏர்ல்ச்-1884
8. நீரிழிவு நோயைக் கண்டுபிடித்தவர்-பெண்டிக் கெஸட்-1921
9. மனோதத்துவ சிகிச்சையை கண்டுபிடித்தவர்-சிக்மண்ட்பிராய்ட்-1895
10. ஸ்ரெதஸ் கோப்பை கண்டுபிடித்தவர்-ரேனோலானக்-1819

*ச.கௌசிகா, தரம் -11 ஏ*
*சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.*


அக்ஷய திருதியை
தினங்களாகிய
முதலாம் இரண்டாம் திகதிகளில்
தங்க நகைகளை
கொள்வனவு செய்து வீட்டுக்கு
கொண்டு சென்று குறையாத
செல்வத்தைப்
பெற்றுக் கொள்ளுங்கள்.
சிறி மதனா
நகை மாளிகை
Sri Mathana
Nagai Malikai
ஓடர் நகைகள்
22 கரட்டில்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்
155M, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 7772
அன்றைய
தினம்
கொள்வனவு செய்யும்
அனைவருக்கும்
அன்பளிப்பு
பொருள்களும்
விசேட கழிவும்
வழங்கப்படும்.
இணை நிறுவனம்:
மதனா
ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MATHANA JEWELARY
177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 5526


உங்கள் இல்லங்களில்
ஐஸ்வரியம் பெருகி
இல்லம் பொங்கிட
முதலாம் இரண்டாம்
திகதிகளில் இடம்பெறும்
செல்வம் செழிக்கும்
அக்ஷய திருதியையில்
தங்கத்தை எடுத்துச்
செல்லுங்கள்
NISHANANTHAA
Jewellery
Dealers in Ct, Gold, Jewelleries
Gems & Jewellers
நிஷானந்தா
ஜுவல்லறி
விசேட விலைக் கழிவும்,
அன்பளிப்பு பொருள்களும்
வழங்கப்படும்
51 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
KASTHURIYAR ROAD, JAFFNA.
TEL: 021 222 7985


ஐய வருட (2014) தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை
May
01 02
2014
குறையாத செல்வத்தை
வளமாக அள்ளித்தரும்
அதிசய திருநாளாம்
"அட்சய திருதியை"
2014.05.01 மற்றும் 2014.05.02
ஆகிய இரு தினங்களிலும்
வருகின்றது. இத் திருநாள்களில்
உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதி மிக்க
நகைகளை
கொழும்பில்
யாழ் மைதிலி ஜுவல்லறியிலும்
யாழ்ப்பாணத்தில்
மைதிலி நகை மாடத்திலும்
வாங்கி சுபீட்சமடையுங்கள்
அட்சய திருதியையை
முன்னிட்டு அதி நவீன
டிசைன்களை அறிமுகம்
செய்வதோடு அதற்கான
விலையில் நம்பமுடியாத
கழிவுகள் வழங்கப்படும்.
பவுண் காசு மற்றும்
லக்ஸ்மி காசுக்கு
விலைக் கழிவு உண்டு
குறிப்பிட்ட சில நகைகள்
தங்க விலைக்கே
விற்கப்படும்.
பழைய நகைகளை
கொடுத்து
புதிய நகைகள்
வாங்குவோருக்கு
விசேட விலைக்
கழிவு உண்டு.
நகைகள் கொள்வனவு
செய்யும் அனை
வருக்கும் விசேட
பரிசுகள்
காத்திருக்கின்றன
மைதிலி நகைமாடம்
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7902
யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்
79Z, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொ.பே: 011 239 6239
emial: maithilynagaimaadam@gmail.com
யாழ் நகரில் மைதிலி நகைமாடத்துக்கு வேறு கிளைகள்
இல்லை என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அக்ஷய திருதியையில் எம்முடன் இணைந்து
ஐஸ்வரியத்தைப் பெற்றிடுங்கள்



# செல்வி
## நகை அகம்

தங்கப் பவுண் நகை வியாபாரம்

22 கரட்
தங்க நகைகள்
ஓடருக்கு
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

அக்ஷய திருதியையில்
கொள்வனவு செய்பவர்களுக்கு
விசேட கழிவுடன் பரிசுப்
பொருள்களும்
காத்திருக்கின்றன.

(C/13808)(10.6.3)

**Chelvi Nakai Agam**

*Manufacturers of Gold Jewels*

T.P: 021 222 9441

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1/3, Kasthurlar Road, Jaffna.



அக்ஷய திருதியையில்
தங்கம் கொள்வனவு செய்து
வாழ்வில் சுபீட்சத்தைப்
பெற்றிடுங்கள்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

# மயூரன்ஸ் நகை மாளிகை

தங்கப் பவுண் நகை வியாபாரம்

**MAYURANS**
**NAKAI MALIKAI**

*Manufacturers of Gold Jewels*

41, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 41, Muslim College Road, Jaffna.

T.P : 077 651 0251

தங்க திருநாள் அக்ஷய திருதியை தினத்தில் சகல செல்வங்களும் பெற்றிட வாழ்த்துகின்றோம்



# சிறி மீனாட்சி
## நகை அகம்

**Sree Meenakchi** Nagai Aham

*Dealers in 22 Kt, Solid Gold Jewellery*

இல. 183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021 222 6109



(C/13800)(10.6.3)





குறையாத செல்வத்தை வளமாக
அள்ளித்தரும் அதிசய திருநாளாம்
அட்சய திருதியை நாளாகிய
மே மாதம் முதலாம் இரண்டாம்
வியாழன், வெள்ளி திகதிகளில்
உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதி மிக்க
நகைகளை யாழ்ப்பாணத்தில்
நியூ மைதிலி ஜுவல்லர்ஸில்
வாங்கி மகிழுங்கள்



- ✓ அக்ஷய திருதியை முன்னிட்டு அதிநவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு அதற்கான விலையில் நம்பமுடியா கழிவுகள் வழங்கப்படும்.
- ✓ பழைய நகைகளை கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்காவு உண்டு.
- ✓ பவுண் காசு மற்றும் லக்ஸ்மி காசுக்கு விலைக்கழிவு உண்டு.
- ✓ குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.
- ✓ நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.

மங்கையர் மனங்கவரும்
அசல் தங்க நகைகளை
உடனுக்குடன் சிங்கப்பூரில்
இருந்து பெற்றுத் தரப்படும்.

May
01 02
2014







ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

தங்க நகை உலகில் மங்கா புகழ் படைத்த

யாழில்

நடராசா கஜந்தன் Nadarasa Kajanthan

NJ நியூ மைதிலி ஜுவலர்ஸ் NEW MAITHILY JEWELLERS

கொழும்பில்

**Santhosi Jewellery**

இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 7878, 021 221 7877 Email: newmaithily40@gmail.com

59-2/7, செட்டித்தெரு, கொழும்பு-11.

தொ.பே: 011 233 7734


செல்வம் செழிக்கும் அக்ஷய திருதியை வாழ்த்துகள்
May
01 02
2014
ஓடர்
நகைகள்
22 கரட்டில்
குறித்த
தவணையில்
செய்து
கொடுக்கப்படும்.
ஸ்ரீதேவி
ஜூவலர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
பெற்றுக் கொள்ளும்
நகைகளுக்கு உரிய
தரச் சான்றிதழ்
வழங்கப்படும்.
அன்றையதினம் கொள்வனவு செய்யும்
தங்க நகைகளுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்
இல. 80/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1787, 077 104 2848
(C/13807)(10.6.3)


அக்ஷய திருதியை அனைவருக்கும்
சுபீட்சமாய் அமைய வாழ்த்துகின்றோம்
May
01 02
2014
பெறுமதியான நகைகளை
கொள்வனவு
செய்பவர்களுக்கு பரிசுகள்
காத்திருக்கின்றன.
பிறேம்
நகைமாடம்
Prem Nagai Maadam
Modern & Distinctive
# 171, Prem Plaza, Yarl Road, Manipay. Tel: 077 303 9572, 021 320 9167


தங்கத்திருநாளில் அனைவரையும் வாழ்த்துகின்றோம்
May
01 02
2014
டோனிகா
நகைத் தொழிலகம்
நம்பிக்கை,
நாணயம்,
நயமான சேவை
பெறுமதியான நகைகளை
கொள்வனவு
செய்பவர்களுக்கு பரிசுகள்
காத்திருக்கின்றன.
82, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 888 6191


அக்ஷய திருதியை தினத்தில் எமது வாடிக்கையாளர்கள்
அனைவரது வாழ்விலும் ஐஸ்வர்யம் செழிக்க பிரார்த்திக்கின்றோம்
May
01 02
2014
உதயா
ஜுவல்லர்ஸ்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4434
உதயாவின் தங்கப் பவுண் நகைகள்
உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும்
கிளை:-
நியூ உதயா
ஜுவல்லர்ஸ்
இல.91, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2031
தரம்
நாடுவோர்
தவறாமல்
நாடுமிடம்

அக்ஷய திருதியை தங்கத் திருநாளில் இல்லத்தில் செல்வம் பொங்கிட வாழ்த்துகின்றோம்

# எஸ்.என்.கிருஷ்ணா ஜுவல்ஸ்

அன் நகைத் தொழிலகம்

உரிமையாளர் : எஸ்.நாககிருஷ்ணா (காலேப்)

S.N.KRISHNA JEWELS & WORKSHOP



May 01 02 2014

இன்றைய தினத்தில்
தங்கத்தை வாங்கி
ஐஸ்வரியத்தை
பெற்றுக்கொள்ளுங்கள்

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே : 021 222 1112, 077 608 2228 (சி/13823) (10.6.3) 118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



May 01 02 2014

# வினோ நகைப் பூங்கா

உரிமையாளர்:
சடாச்சரம் புவிச்சந்திரன்

ஐஸ்வரியம் பொங்கும்
அக்ஷய திருதியையை முன்னிட்டு
01.05.2014, 02.05.2014
எமது வாடிக்கையாளர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.



தங்க வைர நகை வியாபாரம்

Vino Nakai Poonka

Gold & Jewel Merchant

அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

(C/13824)(10.6.3)

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

185, Kasthuriyar Road,
Jaffna.

Tel: 021 222 5394 / 021 222 9494. Fax : 021 222 2824






அக்ஷய திரிதியை

01,02.04.2014

தங்கத் திருநாளாம் அக்ஷய திரிதியை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு

பொன்னான வாழ்த்துக்கள்....

# கன்னிஹா

ஜுவல்லஸ்

எதிர்வரும் 01 02ம் திகதிகளில் வருகின்றது.
இப்பொன்னாளில் உங்கள் வாழ்வில் ஐஸ்வர்யத்தை
பெருக்கும் பெறுமதிமிக்க நகைகளை கன்னிஹா நகைமாடத்தில்
பெற்று மகிழுங்கள்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
நகை உலகில் அடுத்த பரிமாணம் மூன்றாவது ஆண்டாக
ஆம் இம்முறையும் நீங்கள் இரண்டு பவுனுக்கு மேல்
கொள்வனவு செய்யும் போது ஒரு தங்க நாணயத்தை
இலவசமாக பெற்றுக்கொண்டு 'அந்நாளின் அதிஸ்டசாலி
ஆகுங்கள்மேலும் சில விசேட பரிசுகள்
உங்களுக்காக...





May 01 02 2014

ஐஸ்வர்யம் பெருகும்

அக்ஷய திருதியையில்

02.05.2014

உங்கள் இல்லங்களில் செல்வம் செழிக்க
நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும்
நகைகளைக் கொள்வனவு செய்து
உங்கள் இல்லங்களை வளமான
வாழ்விற்கு வழியமைத்திட
இன்றே நாடுங்கள்......

# NEW SUSILAA GOLD HOUSE



நியூ சுசீலா கோல்ட் ஹவுஸ்

Tel : 021-2264154, 077-3114419

228, Main Street, Point Pedro.

தொ.பே.இல:
021 226 4154
077 311 4419

228, பிரதான வீதி, பருத்தித்துறை.

(C/13816)(10.6.3)


இந்த அக்ஷய திருதியையில்
மனத் திருப்தியுடன்
கொண்டாடுவோம்
மீண்டும்
புதுப்பொலிவுடன்
புதிய காட்சியறை
யாழ்.நகர்
மத்தியில்
லலிதா ஜுவல்லரி
நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்
கொண்ட தங்க நகைகளின் சாம்ராஜ்ஜியம்
அன்றைய தினம் தங்கநகை
வாங்கும் அனைவருக்கும்
பெறுமதிமிக்க பரிசில்கள்
காத்திருக்கின்றன
அக்ஷய திருதியை முன்னிட்டு
புதிய டிசைன் நகைகளை
அறிமுகப்படுத்துகின்றோம்.
அனைவரும் ஒருமுறை
இல.75, கஸ்தூரியார் வீதியில்
அமைந்துள்ள லலிதா ஜுவல்லறிக்கு
விஜயம் செய்து பாருங்கள்
அதிர்ஷ்டத்தை அனுபவிப்பீர்கள்
லலிதா 75 Lalitha
ஜுவல்லறி JEWELLERY
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2863


புதிய நவீனா நகையகம்
Navena Nakaiyakam
எமது வாடிக்கையாளர் அக்ஷய திருதியைத்
திருநாளில் குறையாத செல்வத்தை வளமாகப்
பெற்றிட அக்ஷய திருநாளில் புதிய நவீனா நகையகத்தில்
நகைகளைக் கொள்வனவு செய்வதுடன்
வெகுமதியான நகைகள் கொள்வனவு
செய்பவர்களுக்கு வெகுமதியான
பரிசில்கள் காத்திருக்கின்றன.
Genuine 22kt Jewellery
Manufacturing Jewellery
191, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 115625
021 222 7114


அக்ஷய திருதியையில் ஆபரணங்களை வாங்கி
சுபீட்சமடைவீர்களாக
May
01 02
2014
பெறுமதியான நகைகளை
கொள்வனவு
செய்பவர்களுக்கு பரிசுகள்
காத்திருக்கின்றன.
ஆசைப்பிள்ளை அண் சன்
நகைமாடம்
தரம் மற்றும் நம்பிக்கையில் 100%
Aasaipilai & Son Nagai Maadam
Tel: 021 321 2399
கே.ரி.பிளாசா, பிரதான வீதி, சங்கானை.
K.T.Plazaa, Main Road, Chankanai.


சாரங்கா
நகைமாடம்
May
01 02
2014
நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஐஸ்வர்யம் தரும்
அக்ஷய திருதியைத் தினத்தன்று
கைராசியான நிறுவனமாகிய
சாரங்கா நகை மாடத்தில் மே மாதம்
முதலாம் இரண்டாம் திகதிகளில்
உங்கள் விருப்பப்படி தங்கத்தை வாங்கி
சுபீட்சமடைவதுடன் அன்றைய
பரிசு மழையில் நீங்களும்
வெற்றி பெறுவீர்களாக.....
சாரங்கா நகை மாடம்
SARANGA JEWELLERY
SARANGA MONEY EXCHANGE (PVT) LTD
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 6972, Fax: 222 8869


குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும்
அதிசயத் திருநாளாம்
"அக்ஷய திருதியை"
எதிர்வரும் 01, 02 ம் திகதிகளில் வருகின்றது
இத் திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை
உருவாக்கும் பெறுமதிமிக்க
நகைகளை வாங்கி மகிழ்ந்திட
கைராசியான நிறுவனம்
சிறி நதியா
நகைமாளிகை
33
வருடங்களுக்குமேல்
நம்பிக்கை நாணயமிக்க
உங்கள் தரம் குன்றா
தங்க நகை உலகில்
தடம்பதித்துள்ள
நகைமாளிகை
யினரின்
அதி நவீன
டிசைன்களை
அறிமுகப்படுத்துவதில்
பெருமையடைகின்றோம்.
Good Gold Collection
தங்கத் திருநாளாம்
அக்ஷய திருதியை
01, 02 மே 2014
அன்றைய தினத்தல்....
* அக்ஷய திருதியை முன்னிட்டு அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
* பவுண் காசு மற்றும் லக்ஷ்மி காசுக்கு விலைக்கழிவு உண்டு.
* அன்று குறிப்பிட்ட சில நகைகள் செய் கூலி, சேதாரமின்றி தங்க விலைக்கே விற்கப்படும்.
* அன்றைய தினம் நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசு காத்திருக்கின்றது.
* அன்றையதினங்களில் உங்களது சிரமத்தினைத் தவிர்த்துக்கொள்ள முன்கூட்டியே ஆபரணங்களை ஓடர் செய்து கொள்ளுங்கள்.
* அக்ஷயதிருதியை தினங்களில் எமது நிறுவனங்கள் காலை 7.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை உங்களுக்காகத் திறந்திருக்கும்.
Digital X-ray கதிர் பொருந்திய
தரத்திலான நவீன கருவி
Kew Karat Meter மூலம் உங்கள்
தங்க நகைகளை எந்தவித
சேதாரமும் இன்றிப் பரிசோதித்து
தர நிர்ணயச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.
அக்ஷய திருதியை தினத்தன்று
கைராசியான நிறுவனமாகிய
சிறி நதியா நகை மாடத்தில் தங்கம் பெற்று
பெருவாழ்வு வாழ்வீர்களாக...
இல.01,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2709
சிறி நதியா
01 நகை மாளிகை 56
இல. 56,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226744


May
01 02
2014
அன்றைய தினம்
கொள்வனவு செய்யும்
தங்க நகைகளுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.
வீ.எம்.கே.
ஜுவல்லறி
V.M.K.
Jewellery
Dealers in
22 Kt. Gold Jewellery
40/08, கஸ்தூரியார் வீதி,
(யாழ் மாநகரசபை புதிய கட்டம்)
யாழ்ப்பாணம்.
021 720 1117, 021 222 2515


அக்ஷய திருதியையில்
தங்கம் வாங்கி வாழ்வில்
சுபீட்சத்தை அடைவீர்களாக!
ஸ்ரீ சுசீலா
ஆபரண மாளிகை
(916KDM) தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்
239, பிரதான வீதி,
பருத்தித்துறை.
T.P:- 021 3207437, 077 721 0206 021 226 1003


நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்
சிங்கப்பூர்
ஜுவல்லறி
அக்ஷய திருதியையில் 01.05.2014 வியாழக்கிழமை, 02.05.2014 வெள்ளிக்கிழமை நகை வாங்குபவர்களுக்கு சகல ஐஸ்வரிய சிறப்புக்கள் உண்டாகும். இப் புனித நாளினிலே தங்கத்தைக் கொள்வனவு செய்து தனவந்தராகுங்கள். கொள்வனவு வகையால் வெகுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.
இல. 28, 93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 459 0260